புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

18



PUTHIYA SAMUDHAYAM

50 காசு

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 கார்த்திகை 25
கம்பம் 1 ∴ (10-12-1977) ∴ குடும்பம் 18.
மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

எண்ணச்சுடர்

பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்

எண்ணச் சுடரினை ஏற்றினேன் பொய்யிருள்
எரியட்டும் எரியட்டுமே!
பண்ணின் தீயினைப் பற்றவைத்தேன் சுடர்
படரட்டும் படரட்டுமே!

பாட்டுத் தீயினை மூட்டி விட்டேன்
பாதகம் ஒழியட்டுமே!
காட்டுத் தீப்போல் பரவட்டுமே பாவக்
கயமைகள் அழியட்டுமே!

நெஞ்ச அடுப்பினில் கொஞ்சம் அழலிட்டேன்
நேர்மை சமைக்கட்டுமே!
வஞ்ச பழமதைப் விஞ்சும் பெருங்கனல்
வாட்டட்டும் ஓட்டட்டுமே!

கட்டை பொசுங்கிடச் சுட்ட நெருப்பின்று
கெட்டோர் பொசுக்கட்டுமே!
விட்டெறிந்த என்றன் வெல்கவித் தீயினால்
வேதனை வேகட்டுமே!

தீப்பந்தம் கொளுத்தித் திருடரைப் பார்க்கிறேன்
தீயவர் தீயட்டுமே!
பாப் பந்தம் முற்றதீ நாப்பந்தக் காற்றினால்
பகைமையை மேயட்டுமே!

உண்மை யெனும்சுடர் உளமுற்ற சுடரிது
உலகிருள் போக்கட்டுமே!
திண்மை யெனும் அருள் தியாகப் பெருஞ்சுடர்
செம்மையை ஆக்கட்டுமே!

உளச்சுடர் எடுத்தே உலகினைக் காண்கிறேன்
உயர் நீதி ஓங்கட்டுமே!
ஒளிச்சுடர் தொடுத்தே களிக்க நினைக்கிறேன்
ஒண்டமிழ் தாங்கட்டுமே

இதயச் சுடரினை எங்கணும் ஓட்டினேன்
இல்லாமை தாழட்டுமே!
உதயக் கதிர்போல் உரிமைத்தீ மூட்டினேன்
உயிர்கள் வாழட்டுமே!

அட்டைப்படம்: மாயன்

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 80839.

சாடாட்டின் தனிமுயற்சி

எகிப்தின் அதிபர் அன்வார் சாடாட் இ
ரேலுக்குத் திடீர் வருகை புரிந்து மத்திய கிழ
நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஜினிவா அ
மாநாட்டைக் கூட்டுவதற்குத் தீவிரமான முய
களில் ஈடுபட்டு வருகிறார். இஸ்ரேலுக்கு அதி
சாடாட் மேற்கொண்ட வருகை தீராத பகை
தீர்த்து வைக்க அவர் எடுத்துக்கொண்ட துணி
மிக்க முயற்சி என்பதில் யாருக்கும் ஐயம் இரு
முடியாது.

அதனைத் தொடர்ந்து கெய்ரோவிற்கு இஸ்ரே
தலைவர்களையும் மற்றும் அரபு நாடுகளையு
அழைத்து உச்சநிலைப் பேச்சு நடத்துவதற்கு
சாடாட் முயன்று கொண்டிருக்கிறார். ஆனால் இ
சமரசப் போராட்டத்தில் மற்ற சகோதர அரபு நா
களின் ஆதரவு அவருக்குக் கிட்டாமல் இருப்ப
துரதிர்ஷ்டமே ஆகும்.

எகிப்து மட்டும் தனியே நின்று இஸ்ரேலுடன் ச
ரசம் காண்பது இயலாத காரியம். அத்தகைய இ
வழி ஒப்பந்தத்திற்கு சாடாட் இணங்கவும் இ
லாது. மத்திய கிழக்கு நெருக்கடியில் சம்பந்தப்ப
டிருக்கும் எல்லா அரபு நாடுகளையும் பாலஸ்தீ
விடுதலை முன்னணியையும் இணைக்கின்ற முழு
யான சமரசத் தீர்வையே எகிப்து நாடுகிறது என
பதை இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அதிபர் சாடா
தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இந்நிலையில் சாடாட்டின் தனிமுயற்சி உருவானபலனை
கொடுக்குமென்று எதிர்பார்க்கமுடியாது. அதுமட்
மன்றி இதன் பலனாக அரபு நாடுகளிடையே பிள
அதிகரிக்கின்ற அறிகுறிகளும் தென்படுகின்றன
லிபியாவில் சாடாட் எதிர்ப்பு உச்சநிலை மாநா
கூடுவது இந்த அரபு நாடுகளின் ஐக்கியத்தில் விரி
சல் ஏற்படுவதையே புலப்படுத்துகிறது.

அதிபர் சாடாட்டின் இஸ்ரேல் வருகைக்குப் பிறகு
இஸ்ரேல் தலைவர்களின் மனப்போக்கில் கணிச
மான மாறுதல் தோன்ற ஆரம்பித்திருப்பது, மத்திய
கிழக்குத் தீர்வுக்கு நல்ல அறிகுறியாகும். இதனை
அரபு நாடுகள் மனத்தில் கொண்டு அதிபர் சாடாட்
டின் முயற்சிகளுக்குக் கைகொடுக்க முன்வருவது
மத்திய கிழக்கு அமைதிக்குத் துணைபுரிவதாக அமை
யும். அரபு நாடுகள் கட்டுக்கோப்பாக இருந்து
இஸ்ரேலுடன் நியாயமான தீர்வு காண்பதற்கு
அபூர்வமான ஒரு வாய்ப்பை அதிபர் சாடாட்

தமது துணிகரமான பயணத்
தின் மூலம் ஏற்படுத்தி இருக்
கிறார். அமைதியாகவும்
நிதானமாகவும் அரபு நாடு
கள் இதுபற்றிச் சிந்திப்பது
நன்மையாக இருக்கும்.

மணிமன்ற மாநாடு

லேசியத் தமிழ் இளைஞர் மணி
மன்றப் பேரவையின் 12-வது
தேசியப் பேராளர் மாநாடும்,
இளைஞர் விவசாயக் கருத்
தரங்கமும் குவந்தானில் நடை
பெற்று வருகிற இவ்வேளை
யில் மணிமன்றங்களின் மீது
சமுதாயத்தின் கவனம் படி
வது இயல்பே ஆகும்.

ணிமன்றங்கள் நெடுங்கால
இலட்சியப் பயணத்தின் பல
றைகச் சமுதாயத்தின் நிலை
பான இடத்தைத் தேடிக்
கொண்டிருக்கின்றன.
ாடெங்கும் இயங்கிவரும்
140க்கு மேற்பட்ட மணிமன்
றங்களிலிருந்து 600க்கு மேற்
பட்ட பேராளர்கள் இந்த
ாநாட்டில் பங்குகொள்வது
மணிமன்றங்கள் தங்களின்
இலட்சியப் பயணத்தில் கண்
டிருக்கும் பெருமிதமான
வளர்ச்சியையே குறிக்கிறது.
இந்த மாநாட்டில் நடைபெறு
ற இளைஞர் விவசாயக் கருத்
ரங்கம் தக்க தருணத்தில்
மேற்கொள்ளப்பட்டிருக்கும்
வேகமான முயற்சி என்றே
ருதுகிறோம்.

ட்டின் மேம்பாட்டுத் திட்
டங்களில் நிலக்குடியேற்ற
மும் விவசாயமும் முக்கிய
ங்கு வகிப்பது வெளிப்
டை. இந்திய சமுதாயம்
லக்குடியேற்றத்திலும் விவ
ாயத் துறையிலும் பூரண
ான பங்குகொண்டால்தான்
ாட்டு முன்னேற்றத்தோடும்
ற்ற சமூகங்களோடும்
தாளோடு தோள் இணைந்து
ராகச் செல்ல முடியும். இப்
பாழுது இத்துறையில் இந்
ிய சமூகம் முழுமையாகப்
ங்கு பற்றி இருப்பதாகச்
சால்லமுடியாது. இந்நிலைக்
ப் பல்வேறு காரணங்கள்
ருக்கக்கூடும். ஃபெல்டா
பான்ற அமைப்புக்கள் இந்தி
ர்களுக்குப் போதிய வாய்ப்
க்கள் வழங்கவில்லையென்
து சமுதாயம் கூறுகிற

காரணமாகும். வாய்ப்புக் கிடைக்கிறவர்கள் நிலக்குடியேற்றங்களில் நிலைக்காமல் ஓடிவிடுகிறார்கள் என்பது அரசாங்கத்தரப்பில் கூறப்படுகிற சமாதானமாகும். எப்படிப் பார்த்தாலும் இந்தப் பின்தங்கிய நிலைக்கு மாற்றங் காண வேண்டிய கட்டாயம் சமூகத்தை எதிர்நோக்கி இருக்கிறது. குவந்தானில் நடைபெறுகிற விவசாயக் கருத்தரங்கம் நிலக் குடியேற்றத் திட்டத்தின் தேவையையும் இன்றியமையாத நிலையினையும் நமது மக்களுக்கு உணர்த்தி அவர்களைச் செயலில் இறங்கச் செய்வதில் வெற்றி காணுமென்று நம்புகிறோம்.

மணிமன்றங்கள் தொடங்கியிருக்கின்ற மாஜு ஜெயா கூட்டுறவுக் கழகத்திற்கு 3 லட்சம் பங்குகளுக்கு மேல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சேர்ந்திருப்பது அதன் வெற்றிக்கு நம்பிக்கையூட்டுகிற நல்ல அடையாளமாகும். பங்குகளைச் சேர்க்கின்ற முயற்சியைத் தீவிரப்படுத்தி, குறித்த இலக்குப்படி பொருளாதாரத் திட்டங்களை மாஜு ஜெயா நடத்துவதற்கு இந்தப் பேராளர் மாநாடு வழிவகுக்குமென்று நம்புகிறோம். மணிமன்றக் கட்டிட நிதி எதிர்பார்த்தபடி வேகமாகத் திரட்டப்படவில்லை. இந்தத் தேக்க நிலையைப் போக்குவதற்கும் மணிமன்றப் பேராளர்கள் வழி காண்பர் என்று நம்புகிறோம்.

தனித்தனியே ஆங்காங்கு மணிமன்றங்கள் மேற்கொண்டிருக்கிற பல தொழில் முயற்சிகள் நல்ல வெற்றியை ஈட்டி வருகின்றன. இத்தகைய சிறு தொழில் திட்டங்களையும் விவசாய முயற்சிகளையும், மீன் குளம், ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை போன்ற முயற்சிகளையும் பெருக்குவதற்கு ஆங்காங்குள்ள மணிமன்றங்கள் மேலும் முனைய வேண்டும். செயல், செயல் என்று ஒரே மூச்சாக மணிமன்றங்கள் காரியநோக்கோடு நடைபோட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை மணிமன்றப் பேராளர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

அகோர தாண்டவம்

இந்தியாவில் ஆந்திரப்பிரதேசம்,
தமிழ்நாடு, கேரளம் ஆகிய
மாநிலங்களைக் கடற் கொந்
தளிப்பும், புய லும், வெள்ள
மும் மிகக் கடுமையாகப்
பாதித்திருப்ப த அங்கிருந்து
அடுக்கடுக்காக வருகின்ற
செய்திகள் எடுத்துரைக்கின்
றன. தமிழகத்திற்கு மட்டும்
இவ்வெள்ளத்தி ல் ரூ. 200
கோடிக்குமேல் இழப்பு ஏற்
பட்டிருப்பதாக மதிப்பிடப்
படுகிறது. ஆந்திர ப்பிரதேசம்
அடைந்திருக்கும் பேரிடர்,
தமிழகத்தைவிட கொடுமை
யானது. இந்த மாநிலங்கள்
வெள்ளத்தினால் அடைந்திருக்
கின்ற சீரழிவிலிருந்து முழு
மையாக மீள்வதற்கு 12
ஆண்டுகளுக்கு மேல் பிடிக்கு
மென்று சொல்லப்படுகிறது.
இவ்வெள்ளத்தில் உடைமை
களை இழந்தவர்கள், ஆடு
மாடு, பயிர் பச்சை முதலிய
வற்றைப் பறிகொடுத்தவர்
கள் தங்களை மீண்டும் நிலைப்
படுத்திக்கொள்வதற்கு நீண்ட
காலம் பிடிக்கும். அவர்
களுக்கு நிவாரண உதவிகள்
நிறைய தேவைப்படும்.
இதனை உணர்ந்து பல்வேறு
உலகநாடுகள் இந்தியாவுக்
குத் தம்மால் இயன்ற உதவி
களை அனுப்பிவருகின்றன.
வெள்ளத் துயரிலும் வேதனை
இருளிலும் சிக்கித் தவிக்கும்
இந்த மாநில மக்களுக்கு
இந்த உதவிகள் நம்பிக்கை
ஒளியாக ஆறுதல் அளிக்கும்
என்பதில் ஐயமில்லை.



அந்தக் காலத்திலேயே கம்பெனியில்
பங்கு வாங்கிய கங்காணி

"இவருக்கு என்ன வயதிருக்கும்?" என்று ஒருவரைச் சுட்டிக் காட்டி என்னிடம் கேட்டார் ஆசிரியர் முருகு.

"சமீபத்தில்தான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பார்; அல்லது ஓய்வுபெறும் நிலையில் இருப்பார். அதாவது ஏறத்தாழ ஐம்பது, ஐம்பத்தைந்து வயதிருக்கும்" என்றேன்.

தமக்கே உரியதான ஒரு வெடிச் சிரிப்புச் சிரித்துவிட்டு ஆசிரியர் அந்தப் பெரியவரின் வயதைக் கூறியதைக் கேட்டு நான் வாய்பிளந்தேன். அந்தப் பெரியவருக்கு வயது எழுபத்தேழு. இந்த ஆண்டு 77. அவருடைய வயதும் 77.

நிமிர்ந்த தோற்றம், நல்ல உயரம்.முதியோர் உடற்கட்டழகர் போட்டி வைத்தால் நிச்சயம் முதற் பரிசு பெறும் உடற்கட்டு.

கோலாலம்பூருக்கு அருகில் பூச்சோங் 12-ஆவது மைலில் உள்ள காசில்ஃபீல்டுதோட்டத்தில் நாற்பது வருடங்களாகக் கங்காணி வேலை பார்த்துவிட்டு 65 வயதில் ஓய்வு பெற்றிருக்கும் திரு. நா. ஏழுமலை கங்காணியைப் பார்த்தபிறகு, அவர் வீட்டில்எனக்கெதிரேஇருந்தகண்ணாடியில் தெரிந்த எனது "மார்க்கண்டேய" உடம்பை ஒருமுறை நோட்டம் விட்டேன்.பிறகு கண்ணாடியில் தெரிவதைத் தவிர்க்கச் சற்று ஒதுங்கி அமர்ந்து கொண்டேன்.

சஞ்சியில் 10 ரூபாய்க்கு...!

1914-ஆம் ஆண்டில் 10 ரூபாயைப் பெற்றுக் கொண்டு தமிழ் நாட்டிலிருந்து சஞ்சியில் வந்த நாள் முதல் வேலையிலிருந்து ஓய்வுபெறும் வரை காசில்ஃபீல்டு தோட்டத்தில் தான் வேலை செய்து வந்திருக்கிறார் ஏழுமலை கங்காணி.

அத்தனை வருடங்களாக வேலை செய்த அவருக்குச் சேவைக்கால அன்பளிப்பாகத் தோட்ட நிர்வாகம் வழங்கியது $ 750 தான்.

"அது திருப்தியான தொகையா?" என அவரிடம் கேட்டேன்.

"திருப்தி இருக்கா, இல்லையாங்கிற பேச்சுக்கே இடமில்லே. ஏன்னா அவுங்க எதுவும் கொடுப்பாங்கன்னோ, கொடுக்கவேணும்னோ நான் எதிர்பார்க்கலே. அதனாலே அந்தத் தொகையைப்பத்தி எதுவும் சொல்லறதுக்கில்லே.

ஆனா ஒண்ணுமட்டும் சொல்வேன். நான் வேலையை விட்டு நிக்கறப்போ துரை எனக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு செஞ்சாரு. ஆனா, சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மாட்டாருன்னு சொல்லுவாங்களே, அது மாதிரி ஆயிடுச்சி அந்தக் கதை. அது எப்படி ஏதுன்னு மட்டும் நீங்க விவரம் கேக்காதிங்க!" என்று கங்காணி ஏழுமலை கூறியபோது, கங்காணியின் மனத்தில் அது ஒரு புரையோடிய புண்ணாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

"சஞ்சியில் வந்தவுடனேயே நீங்க கங்காணி வேலை செஞ்சீங்களா?"

"இல்லீங்க, முதல்லே ஓட்டுப்பால் பொறுக்கினேன். அப்புறம் புல்லுவெட்டு வேலை செஞ்சேன். அதுக்கு அப்புறம் பால்மரம் வெட்டினேன். அப்பத்தான் ஒரு நாள் துரை என்னோட "வெட்டுக்கு" வந்து கொஞ்ச நேரம் நான் மரஞ்சீவுறத பார்த்துக்கிட்டே இருந்தாரு. அவரு போறபோது "நாளைக்கு ஆபீசுக்கு வா"ன்னு சொல்லிட்டுப் போனாரு. அதைக் கேட்டு எனக்கு மனசு "திக் திக்"ன்னு அடிச்சுக்கிச்சு. மறுநாள் காலையிலே பிரட்டுக் களத்திலே கணக்கப்பிள்ளை முனுசாமி என்னைத் தனியா போய் நிக்கச் சொன்னாரு. என்னோட காண்டா வாளியை வாங்கி இன்னொருத்தருகிட்டே கொடுக்கச் சொன்னாரு.

ஏதோ வேலையிலே குத்தம் கண்டு பிடிச்சி தொரை காண்டா வாளியை கொடுக்கச் சொல்லிட்டாருன்னு நினைச்சிக்கிட்டேன்.

அப்புறமா ஆபிசுக்குப் போனேன். துரை என்னப் பார்த்ததும் "வா மேன் ஏலுமல,நீ இன்னேலிருந்து கங்காணி வேலை பாக்குது" அப்படின்னாரு. அன்னைக்கிருந்து சாதாரண கங்காணி வேலை பார்த்து படிப்படியா பெரிய கங்காணி வேலை பார்த்தேன்:

ஒவ்வொரு மரத்துக்கு அடியிலும்...

தாம் கங்காணியான விவரத்தைக் கூறிக்கொண்டிருந்த போது இடையில் அவர் கூறிய ஒரு செய்தி எனது மனசைக் கலக்கியது.

"என் காலத்தில ரெண்டு முறை அழிச்சி கன்று நட்டிருக்கேன். அந்தக் காலத்தில அதாவது வெள்ளைக்காரன் காலத்தில காசில் ஃபீல்டு தோட்டத்து ஒவ்வொரு ரப்பர் மரத்துக்கு அடியிலேயும் ஒவ்வொரு பொணத்தைப் புதைச்சிருக்கோம். கொசுக்கடி, அட்டைக் கடி இப்படி எத்தனையோ கடிகளுக்கு அவுங்க பலியாகித்தான் அந்த மரங்கள்லாம் வளர்ந்துச்சுங்க."

"இப்போ குடியிருக்கீங்களே. இந்த வீடு சொந்த வீடுங்களா?"

"ஆமாங்க,நான் வேலை செய்யுற காலத்திலேயே. இந்த வீட்டைக் கட்டிட்டேன் வேலை செய்யும் போதே சொந்த வீட்டை எப்படியாவது கட்டிடணும்னு எனக்குத் தோணுச்சு."

"இது தவிர உங்களுக்கு ஏதும் சொத்து பத்து...?"

"எனக்கு ஆறு புள்ளைங்க. எல்லாரையும் கூடியவரைக்கும் படிக்க வைச்சுட்டேன்.

"இப்போ செனட்டரா இருக்காருங்களே, லாயரு மகாலிங்கம். அவரோட தகப்பனார் முத்துக்கிருஷ்ணன் ஆலோசனையால கிள்ளான் பஸ் கம்பெனியிலே [அப்போது டாக்சி கம்பெனி] பங்கு வாங்கினேன். அது இப்போ எவ்வளவோ எனக்கு உதவுது. இன்னும் சொல்லப் போனா, அன்றைக்கு நான் போட்ட பங்குப் பணம் கிட்டத்தட்ட அறுபது மடங்கா இப்போ பெருகி இருக்குது. அதுலேயிருந்து கிடைக்கிற வட்டிப் பணந்தான் எனக்கு இப்ப கஞ்சி ஊத்துது.

> **அட்டைப்படத்தில்:**
>
> ஏழுமலை கங்காணி
> தமது பேர்த்தியுடன்

"முத்துக்கிருஷ்ணன் பேச்சை அன்றைக்கு கேக்காம இருந்திருந்தேன்னா இன்றைக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க!"

"அந்த நேரத்திலே, பங்கு வாங்கும்படி நம்ம ஆளுங்க ரொம்பப் பேருகிட்டே முத்துக் கிருஷ்ணன் வற்புறுத்துனாரு. அவரோட பேச்சக் கேட்டவங்க என்னைப் போல ஒரு சில பேருதான்."

"நம்ம ஆளுங்கள்லே ரொம்ப பேர் இப்படித்தாங்க - ஈரமான மரத்தில பால் ஒழுங்கா வராம அங்கேயும் இங்கேயும் ஓடறமாதிரி-கள்ளுத்

ஊராகக் கொண்டான்

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்– அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

சிறப்பு நிறைந்த திருப்பெருந்துறையிலே வீற்றிருப்பவனான எங்கள் சிவபெருமான், என்னுள்ளத்தே, தன்பால் அன்பு கொள்ளுவதற்கான நிலையினை அமைத்தனன்; இன்பத்தைப் பெருக்கினன்; கவிந்திருந்த அறியாமையாகிய இருளினை அகற்றினன். எந்நாளும் என்னைத் தொடர்ந்து வருகின்ற இறப்பும் பிறப்புமாகிய துன்பத்தினை அறுத்தனன். சிவசோதியாகவும் என்னுள் அவன் நிறைந்தனன். என்னுடைய சிந்தையினையே, தான் நிலையாகத் தங்கியிருக்கும் இடமாகவும் உவப்புடன் அவன் ஆக்கிக் கொண்டனன்.

–திருவாசகம் 47:11

தண்ணி, சம்சு தண்ணி, படம் இப்படி பல வழியிலே பணத்தைச் செலவழிச்சிட்டு, உருப்படியான காரியத்துக்கு ஒத்துழைக்க மாட்டாங்க.

பெரியவர் - ஏழுமலை இவ்வாறு கூறியதைக் கேட்டதும் இவர் குடிப்பழக்கம் இல்லாதவரா என்பதை அறிய, ஆவல் பிறந்தது. நேரிடையாகக் கேட்கமுடியாத கேள்வி. சுற்றிவளைத்துக் கேட்டேன். பழக்கவரல்லவா? என் கேள்வியைப் புரிந்து கொண்டு பதில் சொன்னார். "கள்ளுக்கடைப் பக்கம் போகாம இருந்ததினாலேதான் ஆறு புள்ளைங்களைப் படிக்க வைக்க முடிஞ்சுது. கம்பெனியிலே ஷேர் வாங்க முடிஞ்சது. இந்த வீட்டைக் கட்ட முடிஞ்சுது. எல்லாத்துக்கும் மேல நான் இந்த வயசிலே இப்படி இருக்கிறதுக்கு என்னைப் பொறுத்தவரையில குடிக்காம இருப்பதுதான் காரணம்னு நான் நினைக்கிறேன்.

"தோட்டத்தில கள்ளுக்கடை வைக்கணும்னு ஆளுங்கள்ளாம் துரைகிட்ட சொன்னப்ப நான் வேணாம்னு சொன்னவன். இரண்டு கட்சி ஏற்பட்டதும் துரை ஓட்டு எடுத்தாரு. அதிலே கள்ளுக்கடை வேணுங்கறவங்க கட்சி ஜெயிச்சிடுச்சி. நான் என்ன பண்றது?"

"கடுமையா வேலை செய்யணும்னு கள்ளு, சம்சு, பீர், பிராந்தி இப்படி எதையாவது கொஞ்சம் போட்டாத்தான் முடியுதுன்னு சிலர் சொல்றுங்களே?"

"அவுங்க கெடுறதுமில்லாம, மத்தவங்களையும்கெடுக்கறதுக்கு அவுங்க சொல்ற சாக்குப்போக்குத்தான் அதுன்னு நான் நினைக்கிறேன்.

"என் தோட்டத்துலே கிடைச்ச சம்பளத்தை வச்சுக்கிட்டு ஆறுபிள்ளைங்களுக்குச் சோறுபோட்டு அவங்களை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துலே படிக்க வைக்கிறதுன்னு லேசா? வேலை முடிஞ்சப்புறம் ஒரு கண்டா தண்ணி 15 காசு ரேட்டுக்கு தூக்கி இருக்கிறேன் மாடுகளுக்குப் புல் வெட்டிச் சம்பாதிச்சேன். சாயந்திரம் கொண்டிரேட்டு வேலைசெஞ்சு சம்பாதிச்சேன். இப்படிக் காலையிலேருந்து ராத்திரிவரைக்கும் சம்பாதிச்சா நான் அவங்க சொல்படி குடிச்சாத்தானே மறுநாள் வேலை செய்திருக்க முடியும். ஆனா என்னாலே எப்படிக் குடிக்காம வேலை செய்ய முடிஞ்சுது? குடிச்சாத்தான் வேலை செய்ய முடியுங்கிறதெல்லாம் அவுங்கவுங்க சொல்லிக்கிற சால்ஜாப்பு. என்னைப் பொறுத்தவரைக்கும் என்னோட அனுபவத்தை வச்சு சொன்னா தோட்டத்தில குடிக்காம, அதிகமா படம் பார்க்காம, சிக்கனமா இருக்கிறவங்கல்லாம் நல்லா இருக்காங்க. படம் பார்த்துக்கிட்டு, குடிக்கிறதே கதியா கிடக்கிறவங்க எல்லாம் டிகிரி நிக்காத பால் மாதிரி மதிப்புக் குறைஞ்சு இருக்கிறுங்கன்னுதான் சொல்வேன்."

"துரைமாருங்களும் கிராணிமாருங்களும் உங்க காலத்தில தொழிலாளிங்கள நல்லா நடத்தினுங்களா?"

"அதை ஏன் கேக்கிறீங்க. தொழிற்சங்கம் வராத காலத்துக்கு முந்தி வரைக்கும் தோட்டத் தொழிலாளிங்க அனைத்தைப் பிள்ளைங்களாகத்தான் இருந்தாங்க. நான் 10 வருஷம் தொழிற்சங்கத்தில் தலைவனா இருந்தேங்கிறதுக்காக இப்படிச் சொல்லல. தொழிற்சங்கம் வந்தப்புறம்தான் தொழிலாளிங்களுக்கு ஒரு தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் வந்துச்சு. துரைங்களும் கிராணிங்களும் தொழிலாளிங்களிடம் மதிப்பு மரியாதை காட்ட ஆரம்பிச்சாங்க."

துங்குவின் அபிமானி

"நம்ம நாட்டுத் தலைவர்களில் உங்களுக்கு அதிகமாக யாரைப் பிடிக்கும்?"

"துங்குவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதோ பாருங்க!" என்று ஹாலில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைக் காண்பித்தார். அந்தப் படம் சுதந்திரத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களின் படம். மகாத்மா காந்தியின் படமும் அங்கு மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு "காந்தியைப் பார்த்திருக்கிறீர்களா? என்று அவரிடம் கேட்டேன். தோட்டத்திலே கிடந்த நான் துங்குவையே பார்க்கலே, காந்தியை எங்கங்க பார்த்தேன். மலாயா நாட்டுக்கு சுதந்திரம் வாங்கினவரு துங்கு. இந்தியா நாட்டுக்கு சுதந்திரம் வாங்கினவரு காந்தி. அதை நினைச்சுத்தான் ரெண்டுபேர் படத்தையும் வாங்கி வச்சிருக்கிறேன்."

தமிழ் படித்த மருமகள்

"உங்கள் பிள்ளைகளையெல்லாம் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்ததாகச் சொல்றீங்க. அவங்களுக்குத் தமிழும் தெரியுங்களா?"

"அதிலதாங்க நான் கொஞ்சம் தப்புப் பண்ணிட்டேன். தமிழும் அவங்களுக்குச் சொல்லித் தர ஏற்பாடு செய்திருக்கணும். இங்கிலீசு படிச்சாத்தான் எல்லாம் ஆகும்னு நினைச்சி அப்படி செய்துட்டேன். ஆனா இப்போ, என் பிள்ளைகளுக்கு தமிழ் தெரிஞ்ச பொண்ணுங்களாத்தான் பார்த்துக் கலியாணம் செஞ்சு வைக்கிறேன். அதுங்ககிட்டே இருந்து பிள்ளைகளும் தமிழ் தெரிஞ்சுக்குவாங்க, பேரன் பேத்திகளும் தமிழ் தெரிஞ்சுக்குவாங்க இல்லிங்களா?"

மது குடிக்காமல், பீடி, சுருட்டு பிடிக்காமல் சிக்கனமாக வாழ்ந்து தமது குடும்பத்தை நல்ல நிலையில் வைத்துக்கொண்டிருக்கும் பெரிய கங்காணி ஏழுமலை, அந்த ஏழுமலை ஆண்டவன் கிருபையால் பல்லாண்டு வாழ வேண்டும் என்று பிரார்த்திக் கொண்டு விடை பெற்றேன்.

–பாதாசன்

பேட்டி

இவ்வாண்டு இறுதியில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு விழாவில் பேராமாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கா. கலியபெருமாள் கலந்து கொள்வார். அவ்விழாவில் கலந்து கொள்வதோடு தமிழகச் சுற்றுலாவையும், தம் துணைவியாருடன் மேற்கொள்ளவிருக்கும் அவர் கடந்த 14-11-77 திங்கட்கிழமை அன்று சென்னைக்குப் பயணமானார்.



தமிழகத்தில் அவர் தங்கியிருக்கும் நாட்களில் அங்குள்ள அறிஞர்களையும் எழுத்தாளர்களையும் புதிய சமுதாயம் இதழுக்காகப் பேட்டி காண்பார்.



பாவையர் பக்கம்



தலைமுடி உதிராமல் இருக்க

தலைமுடி உதிராமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வழி இருக்கிறது. தலைமுடிக்கு வேண்டிய சத்து நாம் சாப்பிடும் உணவில் போதிய அளவு இருந்தால் தலைமுடி உதிரவே உதிராது. இரத்தத்தின் மூலம்தான் இதற்கு வேண்டிய சத்தைச் செலுத்த முடியும் தலைமுடி உதிராமல் நன்ருக வளருவதற்கு ஒவ்வொரு நாளும் இரண்டு வேளை பாலை நன்ருகக் காய்ச்சிக் குடியுங்கள். காரம் இல்லாத சாம்பாரில் பருப்பை நிறையச் சேர்த்துக் கொள்ளுங்கள். காய்கறிகளை நிறையச் சாப்பிடுங்கள். முட்டை-யை அரை வேக்காட்டில் அவித்துச் சாப்பிடுங்கள். வெண்டைக் காயையும், காரட்டையும் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

—திருமதி ராஜன்

இருதய நோய் இருக்கிறதா? பாத யாத்திரை செய்யுங்கள். மாரடைப்பு இருக்கிறதா? மைல் கணக்கில் நடவுங்கள்! இந்த ஆலோசனை-யை கூறியிருப்பவர் யார்? ரஷியாவைச் சேர்ந்த புஸ-யேல் என்ற டாக்டர்!

பம்பாய் மெது பக்கோடா

தேவையானவை:

2 குவளை கடலைப் பருப்பு, ½ கட்டி சிறிய வெங்காயம், 5 பச்சை மிளகாய், 1 முட்டை, 20 காசு மல்லித்தழை, 1 இஞ்சித் துண்டு (சிறியது), 2 மேசைக் கரண்டி பெருஞ்சீரகம், கறிவேப்பிலை, சிறிது மஞ்சள் தூள், ½ புட்டி தேங்காய் எண்ணெய்.

செய்முறை:


பருப்பை ஊறவைத்து தண்ணீர் இல்லாமல் அறைக்கவும். சீரகத்தையும், இஞ்சியையும் தனித் தனியாக அறைக்கவும். வெங்காயத்தைச் சிறிதாக அரிந்து கொள்ளவும். மிளகாய், கறிவேப்பிலை, மல்லித்தழை ஆகியவற்றைச் சிறிதாக வெட்டிக்கொள்ளவும். முட்டையை நன்ருக அடித்துக் கொள்ளவும்.

அறைத்த பருப்புடன் வெட்டியவற்றையும் அறைத்த மற்றப் பொருட்களையும் உப்பு, முட்டை, மஞ்சள்தூள் ஆகியவற்றையும் சேர்த்துப் பிசைந்துகொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய்யில் சிறிது சிறிதாக எடுத்துப் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

-குமாரி கி. சரஸ்வதி,
பீடோர்

பூப்பந்தல் கோலம்



வரைந்து அனுப்பியவர்:
-திருமதி சீதாலெட்சுமி ஆறுமுகம்,
பத்தாங் பெர்ஜுந்தை

உப்பு

- உப்பு கரைத்த நீரைத் தெளித்து வாழை, உருளைக்கிழங்கு முதலியவற்றைப் பொரித்தால் வறுவலில் சுவை மிகும்.
- சிற்றெறும்புகள் வராமல் இருக்க இனிப்பு வைத்திருக்கும் டப்பாக்களைச் சுற்றி உப்புப் பொடியையும், மஞ்சள் பொடியையும் தூவ வேண்டும்.
- அதிகச் சூடு அடைந்தே இஸ்திரிப் பெட்டியினுல் துணிகளுக்குப் பெட்டி போடுவதால் துணிகளின் மீது ஒரு விதப் பழுப்பு நிறம் ஏற்படும். அதன் மீது கொஞ்சம் உப்பைத் தேய்த்தால் பழுப்பு நிறம் நீங்கிவிடும்.
- காய்கறிகளைச் சமைக்கும்போது முக்கால் வேக்காடு வெந்ததும் தேவையான உப்பைச் சேர்த்தால் கறி சுவையாக இருக்கும்.

பத்து தீகா —திருமதி ஜெயலட்சுமி

முருகுவைக் கேளுங்கள்

சா. உதயசூரியன், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: மாணவர்கள் படம் பார்ப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் யாது?

ப: படிப்பு கெடுவது முதல் பலன். காசு வீணுவது இரண்டாவது பலன். திரைப்படங்களில் வெளிப்படும் தீமைகளை மனத்தில் பதிய விடுவது மூன்ருவது பலன்.

மு. லெட்சுமணன், ஜெரம், சிலாங்கூர்

கே: குழந்தைகளின் பிறந்த நாள் விழாப் படங்களை வெளியிடக் கட்டணம் ஏதும் உண்டா?

ப: உண்டு. சலுகைக் கட்டணத்தில் திருமணப் படங்களைப்போல் இவற்றையும் வெளியிடலாம்.

விஜேஸ், பீடோர்

கே: சத்தம் போட்டுப் பேசுவதில் திறன்படைத்தோர் ஆண்களா? பெண்களா?

ப: வீட்டுக்குள்ளே பெண்களின் குரலும், வீட்டுக்கு வெளியே ஆண்களின் குரலும் உரக்கக் கேட்கும்!

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: பாசம் என்பது பெண்களுக்கு அதிகமா அல்லது ஆண்களுக்கு அதிகமா?

ப: பெண்களோடு பிறந்தது—பிரிக்க முடியாதது பாசம்!

கே: எங்கள் மலாக்கா வட்டாரத்திற்கு எப்பொழுது வருகை புரிவீர்கள்?

ப: கூடிய விரைவில் சந்திக்க வருகிருேம், உங்கள் அனைவரையும்.

கே. ஆர். சுந்தரவள்ளி, அண்ட்லி தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: சிறுகதை எழுதியனுப்பினுல் வெளியிடுவீர்களா? எத்தனை பக்கங்களுக்குள் எழுதவேண்டும்?

ப: புல்ஸ்கேப் தாளில் ஆறு பக்கத்திற்குள் எழுதி அனுப்புங்கள். நல்ல கதையாக இருந்தால் நிச்சயம் வெளிவரும்.

ஜி. நடராஜா, சபாக்கோ தோட்டம், சிமினி

கே: கணவனுக்குச் சமமாகக் குடித்துக் குடும்பத்தையே குட்டிச்சுவராக்கும் சில மனைவிமார்களை எப்படித் திருத்துவது?



ப: குடிப்பதிலும் ஆணுக்குப் பெண் சளைத்தவர் இல்லை என்று தெருவில் பறைசாற்றிக் குடும்பங்களின் பெயரை நாறவைக்கும் இந்த ஊதாரிகளை யாரும் திருத்த முடியாது. ஒரு வேளை உருப்படியான பிள்ளைகள் இருந்து, குடித்துக் கூத்தாடும் தங்களின் பெற்ருேரைத் திருத்தினுல்தான் முடியும்.

தமிழ்ப்பாணன், தங்கா

கே: ஒவ்வோர் இதழிலும் ஏதாகிலும் ஒரு சிறந்த நூலைப் பற்றிய ஆய்வு எழுதினுல் பயனுள்ள நூலை அடையாளம் கண்டு கொள்ள உதவியாக இருக்கும். செய்வீர்களா?

ப: "இலக்கிய அரங்கம்" பகுதியில் டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்கள் இத்தகைய நூல் அறிமுகத்தைச் செய்து வருவதைத் தாங்கள் கவனிக்கவில்லையா?

அருள் ஆறுமுகம், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: "முருகுவைக் கேளுங்கள்" என்று பெரிய எழுத்தில் போட்டுவிட்டு, நான் கேட்ட கேள்விகளையெல்லாம் குப்பைக் கூடைக்குள் குடியேற்றிவிட்டீர்களா?



ப: அச்சில் வரும்படி கேள்வி கேட்பது தங்கள் சாமர்த்தியத்தைப் பொறுத்திருக்கிறது. குப்பைக் கூடையில் கேள்வி தஞ்சம் அடைய நேரிட்டால் அதற்கும் தாங்களே பொறுப்பாளி. என்மீது பழி போடாதீர்கள்.

எம். நாகராணி, பத்து குரோங். பேரா

கே: நாடகம், சிறுகதைகள் எழுதும் போது, பக்கங்களின் இருபுறமும் எழுதலாமா, ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டுமா?

ப: ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

வனிதா மணி, சுங்கை திங்கி, பத்தாங் பெர்ஜுந்தை

கே: பொதுத் தொண்டில் ஆர்வம் நிறைந்த ஒரு பெண்ணுக்கும், பொதுத்தொண்டு ஓர் அளவோடுதான் இருக்க வேண்டும் என்றுகருதும் ஆணுக்கும் திருமணம் நடந்தால் யார் இணங்கிப் போகவேண்டும்?

ப: தன் கணவரின் விருப்பத்திற்கேற்ப பொதுத்தொண்டு ஆர்வத்தை அந்தப் பெண்மட்டுப் படுத்திக் கொள்ளவேண்டும்.

எஸ். சுப்பிரமணியம், கிள்ளான்

கே: தமிழகத்தை ஆண்ட கடைசி மன்னர் யார்?

ப: பிரிட்டிஷ் பேரரசின் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்.

நா. இராசம்மாள், கொக்லிம் தோட்டம், சிம்மோர்

கே: நெஞ்சம் நல்லவற்றை நினைக்கின்றது. ஆனுல் சுற்றுப்புறமோ "கொஞ்சம் தீயவற்றைப் பேசி தீமை புரிந்தால் தான் வாழலாம்" என்று உணர்த்துகின்றது. எதைப் பின்பற்றுவது?

ப. சூழ்நிலைக்கு அடிமை ஆகாமல் எதிர் நீச்சல் போட்டு வெற்றி காணப் பாருங்கள்.

கே: "அற்பனுக்கு வாழ் வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்" எ ன்று சொல்லுகிறார்களே, இதன் விளக்கம் என்ன?



ப: திடீரென்று பணமோ , அந்தஸ்தோ உயர்ந்து விட்டால் அவர்கள் தலை கா ல் தெரியாமல் நகைப்புக் கிடமாக த் தாறுமாறாக நட ந்து கொள்வார்கள் என் பதுதான் இதன் பொருள்.

ப. கிருஷ்ணன் , தஞ்சோங் சிப்பாட்

கே: ஆவேசமுடன் வரும் கடல லைகள், கரையை முத்த மிட்டவுடன் அமைதியாகப் பின் நோக்கிச் செல்கின் றனவே, ஏன்?

ப: நிலமங்கையை முத்தமிட் ட களைப்பை ஆற்றிக் கொள்வதற்காக.

ஜி. பி. கிருஷ்ணன், ஊத்தான் மெலி ந்தாங், பேரா

கே "போகவிட்டுப் புறஞ்சொல்லி த் திரிய வேண்டாம்." என்று பிள்ளைகளுக்குப் போதித்து வி ட்டுப் புறஞ்சொல் லித் திரிவதையே பொழுது போக்கா க் கொண்டுள்ள சில ஆசிரியர்களைப் பற்றி என்ன நி னைக்கிறீர்கள்?

ப: அத்தகைய ஆசிரியர்கள் பிள் ளைகளுக்கு நல்ல வழிகாட்டிகளாக விளங்க முடிய ாது.

"ஆர்விசரோ", ஜெயா, சுங்கை

கே: அண்ணா, "அணில் கடித்த க னியும் அவள் கொடுத்த முத்தமும் எச்சில் ஆகாது" என நண்பர் ஒரு வர் புலம்புகிறாரே...?



ப: அது அனுபவப் புலம்பலாக இரு க்கலாம்.

எஸ். மனோகரன், கம்போங் தொங்காங், கோல க்குரோ

கே: தொட்டுத் தாலிகட்டிய மனைவியின் ந டத்தையில் சந்தேகப்படும் கணவர்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ப: தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.

க. பலராமன், உலுபெர்ணம் தோட்டம், பேரா

கே: பிள்ளைகள் உரிய வயது அடைந்ததும் பாலியல் கல்வியைப் பற்றி ஓரளவாவது எடுத்துக்கூறுவ து பெற் றோர்களின் கடமையாகுமா? அல்லது வயது வந்தால் தாமதமாகவே தெரிந்து கொள்வார்கள் என்று விட்டு விடுவது நல்லதா?

ப: "சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை" என் பார்கள். ஆனால் இந்தக் காலத்தில் பாலியல் கல் வியைப் பள்ளிகளிலேயே போதிக்க வேண்டும் என் கிறார்கள். எப்படி இருந்தாலும் பெற்றோர்கள் பிள்ளை களுக்கு இதனை எடுத்துக் கூறுவது அவசியமென்று நான் கருதவில்லை.

பெரியண்ணன், கேமரன்மலை

கே: ஒருவன் சிறுவயதில் பல குறும்புகளைச் செ தான். இப்பொழுது அவன் வாலிபன். அவன் தன் தவ களை உணர்ந்து திருந்திவிட்டான். ஆனால், அவனுடை பெற்றோர்கள் பழைய சம்பவங்களை நினைத்து அவ வெறுத்து ஒதுக்குவது சரிதானா?

ப: அந்த வாலிபனைப் பெற்றோர்கள் அரவணை ஆதரவு காட்டுவதே முறையாகும்.

வி. எஸ். ராஜா, கோலப்பிலா

கே: பிள்ளைகளை நன்றாக வளர்த்துப் படிக்க வைத் விட்டால் மட்டும் பெற்றோரின் கடமை முடிந்துவிடும

ப: பிள்ளைகளுக்குப் பெற்றோர் ஆற்றவேண்டி கடமைக்கு முற்றுப்புள்ளி கிடையாது. அந் பொறுப்பு எப்பொழுதும் சங்கிலித் தொடர்போ நீண்டு கொண்டுதான் இருக்கும்.

எம். சாமிக்கண்ணு,
டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: பெண்கள் வருவாயில், ஆண்கள் செலவு செய் தைப் பற்றி...?



ப: ஆண்மைக்கு அது கௌரவமாக இருக்காது.

கே: இறைவன் செய்த தவறு யாது?

ப: பூவுலகத்தையும் உயிரினங்களையும் படைத் அவற்றை அழிக்கச் சூறாவளி, வெள்ளம், பூகம்ப எரிமலை போன்ற பேரிடர்களையும் உருவாக்கி கொண்டிருப்பது இறைவன் செய்கின்ற "தவறு என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

குமாரி எம். ஏ. நாச்சி, டொமினியன் தோட்டம், சிலாங்கூ

கே: ஒருவருக்கு எப்போது பொருள் ஆசை மனதி ஏற்படுகிறது?

ப: சொந்தக்காலில் நிற்க முனையும்போது.

கே: மனிதனுக்கு முன்னேற வாய்ப்புக் கிடைக் வில்லையா அல்லது கிடைத்த வாய்ப்பை விட்டுவி கிறானா?

ப: பெரும்பாலும் வாய்ப்புக்களை நழுவவிடுகி வர்கள்தாம் அதிகம்.

முனியாண்டி நரசைபா, டைகர் தோட்டம், (தாவாவ்) சாபா

கே: மனிதனுக்கு எப்பொழுது கற்பெருமை ஏற்ப கிறது?



ப: திடீரென்று பணமும் செல்வாக்கும் அந்த தும் உயர்ந்துவிட்டால் அவர்கள் தங்களை தாங்களே பறை சாற்றிக்கொள்ள வேண்டிய அ சியம் வந்துவிடுகிறது. அப்பொழுது அவர்கள் த பெருமைக்காரர்கள் ஆகிவிடுகிறார்கள்!

ம். ஜி. மதன் ராஜ், புக்கிட் சிடிங் தோட்டம், பந்திங்

கே: மனிதன் எதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதில்லை?
ப: தன் பலவீனங்களை மற்றவர்கள் மூலம் செவிமடுக்க மனிதன் விரும்புவதில்லை.

ரா எழிலழகன், சுங்கைவே

கே: ஒருவனுடைய உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் எப்பொழுது உருவாகின்றன?
ப: வயதும் அநுபவமும் கூடும்போது.

ஏ. ஜெயபாலன் (நிர்மல்), சிரம்பான்

கே: தற்போது நம் நாட்டில் எந்தப் பொருள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது?



ப: ரப்பரே இன்னமும் முதலிடம் வகிக்கிறது.
கே: இறைவன் மனிதனுக்கு இரண்டு மனம் கொடுத்திருந்தால் எப்படியிருக்கும்?
ப: ஏற்கனவே நாம் காணும் பலருக்கு ஆயிரம் மனம் இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆகவே தாங்கள் எழுப்பும் கேள்விக்கே இடமில்லை.

சுப்பிரமணியம், மிட்லண்ட்ஸ் தோட்டம், கிள்ளான்

கே: அண்ணா, எங்கள் குடும்பத்தில் பன்னிரண்டு பேர். அனைவரும் மலேசியப் பிரஜைகள். எங்களின் உறவினன் ஒரு பெண் இந்திய நாட்டுப் பிரஜை. அப்பெண்ணை இந்நாட்டுக்கு வரவழைத்து இந்நாட்டு பிரஜையாக்குவதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும்?
ப: அந்தப் பெண்ணுக்கு மலேசியப் பிரஜை ஒருவரை மாப்பிள்ளையாக்கித் திருமணம் முடிப்பதே அவர் இந்த நாட்டிற்கு வருவதற்கும் பின்னர் பிரஜையாவதற்கும் உள்ள ஒரே வழியாகும்.

கே: இந்நாட்டில் பிறந்து வளர்ந்த ஓர் இந்திய இளைஞர் இந்தியாவில் உள்ள தனது முறைப் பெண்ணை ... மணப்பதைப் பற்றித் தங்களின் கருத்து என்ன?
ப: தாராளமாக மணக்கலாம். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு எல்லை கடந்து செல்வது தவறாகாது.

சு. ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், சிலாங்கூர்

கே: நான் ஒரு பெண்ணை இரண்டு வருடமாகக் காதலிக்கிறேன். அந்தப் பெண்ணும் என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். அவளின் தாய் தந்தை இருவரும் "சம்மதம்" என்று கூறுகிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணின் அண்ணன் "முடியாது" என்று சொல்கிறார். நாங்கள் என்ன செய்வது?



ப: அண்ணனின் கல் நெஞ்சத்தைத் தங்கை கரைக்க வேண்டும்.

பி. விசுவநாதன், தாமோரா தோட்டம், போர்ட்டிக்சன்

கே: இப்பொழுது இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையைப் பல வழிகளில் வீணாக்குகிறார்கள். இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



ப: ஆலமரத்தின் விழுதுகள்போல் சமுதாயத்தைத் தாங்கி நிற்க வேண்டிய இளைஞர்கள் தங்கள் உழைப்பையும், காலத்தையும் ஆகாத வழிகளில் வீணாக்குவது சமுதாயத்திற்கு வேதனைமிக்க இழப்பாகும்.

சந்திரா பெருமாள், ஜின்ஜர் செங்தோட்டம், பாகான் செராய்

கே: அண்ணா, இந்த நவநாகரிக உலகில் பொய்யைச் சொன்னால் வாழ முடியுமா, மெய்யைச் சொன்னால் வாழ முடியுமா?
ப: பொய் சொல்ல வேண்டிய இடத்தில் பொய்யைச் சொல்லி, மெய் சொல்ல வேண்டிய இடத்தில் மெய்யைச் சொல்லிக் காலத்தை ஓட்டினால்தான் இந்தக் காலத்தில் வாழ முடியும்.

என். எஸ். அப்துல் ஜலீல், தஞ்சோங் மாலிம்

கே: "கதைகளில் வரும் சம்பவங்கள் கற்பனையாக இருந்தாலும் உலகத்தில் எங்காவது ஓர் இடத்தில் நடந்ததாகத்தான் இருக்கும்" என்று நான் சொல்லுகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
ப: நீங்கள் சொல்வது ஒருவகையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தே ஆகும். உண்மையின் அடிப்படையில்தான் கற்பனை பிறக்கிறது.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: சில அண்ணன்மார்கள் திருமணத்திற்குப் பிறகு உடன் பிறப்புக்களையும் பெற்றோரையும் மறந்துவிடுகின்றார்களே, ஏன்?



ப: இடைவிடாமல் நினைவில் நிழலாடிக்கொண்டிருக்கும் ஒருத்தி வீட்டுக்கு வந்த புதிதில் இந்த மறதி பாருக்கும் ஏற்படுவது இயல்பு.
கே: ஆசைகள் இல்லாத இதயம் உண்டா?
ப: துறவிகளுக்குக்கூட ஆசைகள் இருப்பதையே உலக நடப்பு மெய்ப்பிக்கிறது.

திருமதி தெய்வானை, பினாங்கு

கே: மனிதன் மனிதனை நம்பாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?
ப: சந்தேகமும், அச்சமும், பொறாமையுமே காரணங்கள்.

வாசகர் வட்டம்

புத்தாண்டு ஜனவரி 25-ஆம் தேதி இதழிலிருந்து "வாசகர் வட்டம்" என்னும் புதிய பகுதி துவங்குகிறது.

நமது நாடு- சமூகம் - அரசியல்- பொருளாதாரம்-மொழி-கலை -இலக்கியம் முதலியவற்றில் தாங்கள் காணும் குறை நிறைகளை வாசகர்கள் இப்பகுதியில் மனந்திறந்து எழுதலாம். குறைகளைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனைகளையும் எழுதலாம். தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்படும் பிரச்சினைகளையும் எழுதலாம்.

தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்காமல் வாசகர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறவேண்டும். அத்துடன் எழுதப்படும் கருத்துக்கள் சுவையாகவும் நறுக்குத் தெறித்தாற்போலவும் மற்ற வாசகர்களுக்குப் பயன்தரக் கூடியதாகவும் அமைய வேண்டும். நூறு சொற்களுக்குள் அவை இருக்கவேண்டியது இன்றியமையாதது.

வாசகர்கள் தெரிவிக்கும் குற்றம் குறைகளை அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி பதிலை பெற்றுப் பிரசுரிக்க, முடிந்த மட்டும் முயற்சி செய்யப்படும்.

கடித உறையின்மேல் இடப் பக்க மூலையில் "வாசகர் வட்டம்" என்று குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு வாசகர்கள் அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
புதிய சமுதாயம்
அஞ்சல் பெட்டி: 2066,
கோலாலம்பூர்.



இது என்ன தொலைபேசி எண் 999?
யாருக்கு என்ன ஆபத்து என்றுதானே நினைக்கிறீர்கள்?

ஆபத்து அவசர உதவிகளுக்கு மிகத் தேவையான இந்த எண்ணுக்கும், தமது அறிவு நூல்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற உதவிய அறிஞர் தமிழ்வாணன் அவர்களுக்கும் மிகவும் தொடர்பு உண்டு.

இதோ கீழே பாருங்கள்!

த மி ழ் வ ா ண ன்
4+ 7+3 + 7 + 1 + 5=27=2+7=9

எண் கணித சாஸ்திரப்படி அவருடைய பெயர் எண் 9.

பிறந்த வருடம் 1926=1+9+2+6=18=1+8=9

பிறந்த வருடத்தின் கூட்டு எண் 9. அவர் அமரத்துவம் அடைந்த தேதியின் கூட்டு எண்ணும் 9.

10-11-1977=1+0+1+1+1+9+7+7=27=2+7=9

இப்போது கடைசியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் எண்களை மேலிருந்து கீழே பாருங்கள். என்ன ஒற்றுமை பார்த்தீர்களா?

நமது தொலைபேசி எண்ணை 999, எப்படி நமது அவசர உதவிகளுக்குத் தேவைப்படுகிறதோ, அதுபோல தமிழ்வாணன் (999) அவர்கள் எழுதிய பல வாழ்க்கை நூல்களும் நமக்கு வேண்டிய அவசர ஆலோசனைகளுக்குத் தேவைப்படுகின்றன.

-சிரம்பான் மணிவாசன்

இந்த அன்னாசியில் வில் மாதிரி வளைந்திருக்கின்றனவே, அவை அனைத்தும் அன்னாசிக் குருத்துக்கள். சாதாரணமாக அன்னாசியில் ஒரு குருத்துதான் இருப்பது வழக்கம். இதில் உள்ள குருத்துக்களை எண்ணுவதற்கு முடியவில்லை. பெரிதும் முயன்று எண்ணியதில் 150 வரைக்கும்தான் எண்ண முடிந்தது.

பத்தாங் பெர்சுந்தையிலிருந்து கோலசிலாங்கூர் போகும் வழியில் சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள பகுதியில் டி. சவரிமுத்து (வயது 55) என்பவர் செம்பனைத் தோட்டம் வைத்திருக்கிறார்.

அதில் ஊடுபயிராக சுமார் ஓர் ஏக்கர் பரப்பளவில் ஒன்றரை வருஷத்துக்கு முன் பயிரிடப்பட்ட அன்னாசித் தோட்டத்தில் விளைந்திருக்கிறது இந்த அதிசய அன்னாசி.

தகவல்: -ரெ. சங்கர்,
நைகல் கார்டனர் தோட்டம்,



இரண்டாவது மலேசியத் திட்டத்தின்கீழ் சுமார் 60.000 ஏக்கர் நிலத்தை இளைஞர் நிலக்குடியேற்றத் திட்டமாக நம் அரசு மாற்றியுள்ளது. இத்திட்டங்களை மலாக்கா, பேரா, ஜோகூர் முதலிய மாநிலங்களில் பெரும் அளவில் காணலாம்.

இளைஞர்களின் ஆற்றலை ஒருங்கிணைத்து மேம்பாடு காணுதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், விவசாயத் திறன் படைத்த இளைஞர்களை உருவாக்குதல் - இவற்றின் வழி ஒரேமலேசிய சமுதாயத்தைஏற்படுத்தும் நோக்கத்தோடு இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

இத் திட்டத்தின்வழி முற்போக்கு எண்ணம் படைத்த இளைஞர் அணியை உருவாக்கி நல்லொழுக்கத்தையும் இளைஞர் சமுதாயத்திற்குப் போதிக்கமுடியும் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இளைஞர்களின் எதிர்கால நிலைமையை உறுதிப்படுத்துவதோடு அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் தலையாய நோக்கம்.

இத்தனை நல்ல நோக்கங்களைக் கொண்ட இத்திட்டத்தில் நம் தமிழ் இளைஞர்கள் உரிய எண்ணிக்கையில் பங்கு கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனையையும் வருத்தத்தையும் தருகின்றது.

குடியுரிமையுள்ள 17 வயதிற்கும் 23 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இத்திட்டத்திற்கு மனுச் செய்யலாம். திருமணம் ஆகாத, விவசாயத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் இதற்குத் தேர்வு செய்யப்படுவர்.

தேசியமொழியை எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கவேண்டும். எல். சி. இ. சோதனையில் தேர்ச்சி அடைந்துள்ளோருக்கு இந்த இளைஞர் நிலக்குடியேற்றத் திட்டத்தில் முதலிடம் அளிக்கப்படும்.

மனுதாரருக்கு வேறு ஏதும் நிலம் இல்லாதிருப்பதோடு அவர் கண்டிப்பாக நல்ல உடல்கட்டு உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்நிலக் குடியேற்றத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்படுவோர், டேசன் துவாவில் உள்ள இளைஞர் பயிற்சி முகாமில் மூன்று மாதப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்பயிற்சி முகாமில், விவசாயம், தொழில்துறை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும். இவற்றோடு தேகப்பயிற்சியும், குடியைப்பயிற்சியும் அங்குப் போதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பயிற்சியை முடித்த பின், அரசு தேர்வு செய்யும் நிலக் குடியேற்றத் திட்டத்திற்கு இவர்கள் அனுப்பிவைக்கப்படுவர்.

அந்நிலக் குடியேற்றத் திட்டங்களில் தங்கும் விடுதிகள் உட்பட சாப்பாடு, வேலைக்கான உடைகள் அனைத்தும் இலவசமாக அளிக்கப்படும். இவை தவிர்த்து நாள் ஒன்றுக்கு 50 காசு வீதம் கொடுக்கப்படும். இப்பணம் வேலை செய்யும் நாட்களுக்கு மட்டும் தரப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு சுமார் $15.00 இவர்கள் இதிலிருந்து ஈட்டிக்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் அங்கும் வசிக்கும் இளைஞர்கள் குறைந்தபட்சம் 5 வருடங்களுக்குத் திருமணம் புரிந்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. பெரும்பாலும், அத்திட்டம் உற்பத்தி தரும்வரை இவர்களுக்குத் திருமணம் புரிந்து கொள்ள அனுமதி கிடைக்காது.

புதிதாக இத்திட்டங்களில் குடியேறும் இளைஞர்கள், ரப்பர் மரங்கள் அல்லது செம்பனை மரங்களை நடுவதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபடுவர்.

நிலத்திலிருந்து உற்பத்தி கிடைக்கும் காலத்தில் அந்நிலம், பாடுபட்ட இளைஞர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். ஒருவருக்கு எட்டிலிருந்து பத்து ஏக்கர் வரை கொடுக்கப்படும். ஆனால் அதைப் பெறுவதற்கு, அத்திட்டத்தில் நுழைந்த நாள்தொட்டு அவர்களின் நேர்மையையும், வேலைத்திறனையும் காட்டவேண்டும்.

நிலக்குடியேற்றவாசிகளின் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள காலி நிலங்களும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதில் விவசாயம், கோழி வளர்ப்பு ஆகியவற்றைத் தொடங்க அரசு வேண்டிய உதவிகளையும் அளித்து வருகின்றது.

உற்பத்தி கிடைக்கும் காலங்களில் இத்திட்டத்தில் இருக்கும் இளைஞர்கள் தேவைக்கு ஏற்ப தனித் தனி வீடுகளைக் கட்டிக் கொள்ளலாம்.

இந்நிலக்குடியேற்றத் திட்டத்தைத் திறந்து அரசாங்கம் தரும் தங்கும் வசதி, இலவசச் சாப்பாடு, இதர வசதிகள் அனைத்தும், குடியேறும் இளைஞர்களுக்கு அரசு வழங்கும் கடன் என்றுதான் கருதப்படுகின்றது. ஆகவே உற்பத்தி கிடைக்கும் காலத்தில் சிறு சிறு தொகையாகக் கழித்துக் கொண்டுதான் இவர்களுக்கு அரசு லாபத்தை கொடுக்கும்.

இப்படி நல்ல பயன்தரும் நிலத் திட்டத்தில் தமிழ் இளைஞர்கள் பெரும்பாலும் சேராமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்; ஆனால், காரணங்களைச் சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கழிப்பதைவிட, உடனடியாகச் சேர முயல்வதன்வழி எதிர்காலப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்க வழி கோலுவதே நல்லது.

–என். எஸ். மணியம்,

அலோர்காஜா.

காரணங்கள் சொல்லிக் காலம் கழிப்பதா?



மலாக்காவில் உள்ள ரமுவான் சீனா இளைஞர் நிலக்குடியேற்றத் திட்டத்தில் குடியேறியிருக்கும் ஒன்பது தமிழ் இளைஞர்களில் மூவர். இடமிருந்து வலம்: திரு. கே சன்னாசி, திரு. அப்பண்ணா, திரு. என் மூக்கையா.

பால்மரக்

18. பெண்மை பெற்ற தண்டனை

பாலனும் கணேசனும் நன்றுகச் சாப்பிட்டு விட்டு மேலே அறைக்குப் போனார்கள். பாயை விரித்துப் போட்டு மரச் சுவரில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தார்கள் 'சிரம்பானிலே நீ என்ன செய்துக்கிட்டிருக்கே? ஏதாச்சும் வேலை கிடைச்சுதா?" என்று கேட்டான் பாலன்.

"ஒரு பெட்ரோல் பங்கிலே சிக்கிரமா வேலை கிடைச்சிடும். என்னோட சிநேகிதருக்குத் தெரிஞ்ச ஒருத்தர் அதை நடத்தறார். அதோட கார்களைப் பழுது பார்க்கிற ஒரு சின்ன ஒர்க்ஷாப்பும் அவருக்கு இருக்குது. அந்த வேலையைக் கத்துக்கறதுக்கும் முடியும்னு நினைக்கிறேன் "

"ஏதாவது ஒரு தொழிலைக் கத்துக்கறதுக்கு வாய்ப்புக் கிடைச்சா அதை விட்டுடாதே. உனக்குத்தான் கார்கூட ஓட்டத் தெரியுமே!"

"தோட்டத்தோட சம்பந்தம் இல்லாத தொழிலா இருக்கேன்னுதான் எனக்குக் கவலை" என்றான் கணேசன்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம்; அதை என்னிடம் விட்டுடு. எப்படியாவது சிரமப்பட்டுக் காரை பழுது பார்க்கிற தொழிலை நீ கத்துக்க. கையிலே தொழில் இருக்கிறதாலேதான் சீனர்கள் கஷ்டப்பட்டு உழைச்சு முன்னுக்கு வர்ராங்க. நம்ம காலாலே நாம நிக்கறதுக்குக் கத்துக்கணும்!"

இந்தச் சமயத்தில் அங்கே பாலனின் தங்கையும் செல்லமும் வந்து சேர்ந்தார்கள். சிறிது நேரம் அங்கே தங்கிவிட்டுப் பாலனின் தங்கை கீழ் வீட்டுக்கு இறங்கிச் சென்றாள்.

கணேசனைக் கண்ட செல்லத்தின் விழிகளில் மகிழ்ச்சியும் துயரமும் ஒன்று கலந்திருந்தன. ஒரு விநாடி அவனைப் பார்த்துவிட்டுத் தன் தலையைக் குனிந்துகொண்டாள். எதுவுமே அவள் பேசவில்லை.

"சரி, நீங்க தனியாப் பேசிக்கிட்டிருங்க. நான் வர்ரேன்" என்று எழுந்திருக்கப் போனான் பாலன்

"வேண்டாம் சார், உட்காருங்க", என்றாள் செல்லம். அப்போது அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

கணேசனும் பாலனின் கரத்தைப் பற்றி இழுத்து அவனைத் தன் அருகில் இருத்திக்கொண்டான். செல்லம் மௌனமாகவே சிறிது நேரம் தன் முழங்காலில் தலையைச் சாய்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுக்குள் பொங்கிய உணர்ச்சிக் குமுறல்கள் அவளைப பேசவிடவில்லை.

"எனக்கு இன்னம் ஒரு வாரத்திலே வேலை கிடைச்சிடும். அதுக்கப்புறம் ஒரு ரெண்டு மூணு மாசம் நீ பொறுத்துக்கிட்டா போதும். உன்னோட அண்ணன் என்ன சொன்னாலும் நாம் கவலைப்படவேண்டாம். எப்படியாவது நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கறேன்" என்றான் கணேசன்.

அவன் பேசுவதை அவள் உற்றுக் கேட்டாளே தவிர, அதன் பிறகும் அவள் வாய்திறக்கவில்லை.

"என்ன செல்லம், நீ இப்ப எப்படி இருக்கே?" என்று கேட்டான் கணேசன். செல்லம் பதில் சொல்லும் நிலையில் இல்லை. உள்ளுக்குள் ஏதோ ஒரு போராட்டம் அவளுக்கு.

அவளுடைய தயக்கத்தைப் புரிந்துகொண்ட பாலன். "நீங்க கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருங்க; இதோ நான் சீக்கிரம் வந்திடறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

சிறிது நேரம் சென்றது.

கணேசன் மெல்லச் செல்லத்தின் அருகில் நகர்ந்து சென்று அவள் கரத்தைப் பற்றினான். பற்றிய கரத்தைச் செல்லம் விடவில்லை. மௌனமாக விம்மி விம்மி அழுதாள். அப்படியும் அவளுடைய துயரம் தீர்ந்தபாடில்லை.

"செல்லம், என்ன இது?"

"இப்ப எனக்குத் தண்டனை கிடைச்சிருக்கு..."

"தண்டனையா?"

"ஆமா, வடக்கு மேட்டிலே மரம் வெட்டச் சொல்லி என்னோட வேலையை இப்ப மாத்தியிருக்காங்க மேட்டிலே ஏறி ஏறி இறங்கறதுக்குள்ளே என்னோட காலெல்லாம் வீங்கிப் போயிடுது. வைத்தியம் செஞ்சுக்கறதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போறதுக்கும் பயமா இருக்கு. இஸ்மாயில் கடையிலே தைலத்தை வாங்கித் தேச்சுக்கிட்டு வேலைக்குப் போயிட்டு வந்துக்கிட்டிருக்கேன்!"

அந்தத் தோட்டத்தின் வடக்கு மேடு என்ற பகுதி தொலைதூரத்தில் இருக்கிறது. குத்துச் சரிவாக உயர்ந்திருக்கும் அந்த மேட்டில் ஏறியும் இறங்கியும் பால்மரம் வெட்ட வேண்டும். சமதரையில் நானூறு மரங்களுக்குப் பட்டை சீவும் அதே நேரத்தில் மேட்டுக் காட்டில் முந்நூறு மரங்களைக்கூடக் கவனிக்க முடியாது. ஒவ்வொரு நாளும் அதிகமான நேரம் வேலை செய்யாவிட்டால் அந்த வேலையைச் செய்து முடிக்க முடியாது. மரங்களும் முற்றிப்போன மரங்கள்; பால் கொடுக்காத மரங்கள். பால் நிறையும் அவ்வளவாகத் தேறாது. நிறைக்குத் தகுந்தபடி கூலியைக் கணக்கிடுவதால் கூலியும் குறைவாகத்தான் கிடைக்கும். வேலையோ கடினமான வேலை; கூலியோ குறைந்த கூலி.

வழக்கமாகப் பெண்களை அந்தப் பகுதிக்கு அனுப்ப மாட்டார்கள் கிராணிகளை எதிர்த்துப் பேசுகிற ஆண் தொழிலாளர்களுக்கோ, பணியில்லாமல் நடந்து கொள்வதாகக் கருதப்படுகிற இளைஞர்களுக்கோ வடக்கு மேட்டுப் பணி கிடைக்கும்.

ஒரு காலத்தில் வெள்ளைக்கார ஆட்சி பயங்கரமான குற்றவாளிகள் என்ற பட்டம் சூட்டி, எப்படிச் சில இந்தியர்களை அந்தமான் தீவுக்கு அனுப்பியதோ, அதே போல் விக்டரி எஸ்டேட் இப்போது தனக்குப் பிடிக்காதவர்களை வடக்கு மேட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது.

வடக்கு மேட்டைப் பற்றிக் கணேசனுக்கும் நன்றாகத் தெரியுமாகலால், செல்லம் சொன்ன சேதியைக் கேட்டு அவன் நிலைகுலைந்து போனான். தோட்டத்தின் எல்லையில் இருந்த அந்தப் பகுதியை அடுத்துப் பயங்கரமான காடு ஒன்று மண்டிக் கிடந்தது. பட்டப்பகலிலேயே இருள் மண்டிக் கிடக்கும் பிரதேசம். யார் யாரை என்ன செய்தாலும் ஒருவரும் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது.

"என்ன நடந்திச்சு? எதுக்காக இப்படிச் செய்தாங்க?"

"உங்ககிட்ட எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலே."

"சொல், செல்லம்!"

"அதை நினைக்கிறதுக்கே எனக்கு அருவருப்பா இருக்கு."

கணேசன் அவளிடம் மன்றாடிக் கேட்டான். நடப்பைத் தெரிந்து கொண்டால் தன்னால் முடிந்ததைச் செய்வதாகச் சொன்னான். அவன் நெடுநேரம் கெஞ்சிக் கேட்டபிறகு அவள் தன் வாயைத் திறந்தாள்.

"முந்தியே நான் உங்க கிட்ட அந்த மாதவனைப் பத்திச் சொல்லியிருக்கேன்; உடம்பு சொகமில்லேன்னு அவன்கிட்ட மருந்து கேக்கப்போனா. அவன் நடந்துக்கறது சரியில்லேன்னு சொல்லியிருக்கேன்.

காட்டினிலே

அகிலன்

எல்லாம் அவனாலே வந்த வினை தான்."

கணேசனின் முகம் சிவந்தது. பயங்கரமாக உருட்டி விழித்தபடி "உங்கிட்டேயே அவன் தன்னோட கைவரிசையைக் காட்ட வந்திட்டானா? இருக்கட்டும். அவனோட எலும்பை நான் முறிக்கலே, என் பேரு கணேசனில்லே!" என்று குமுறினான்.

"அவனோட எலும்பை முறிச்சிட்டு நீங்க ஜெயிலுக்குப் போயிடுவீங்க; கண்ணம்மா மாதிரி நான் தூக்குப் போட்டுக்கிட்டுச்சாகணும். சரியாப் போயிடுமா? இதுக்குத் தானே உங்ககிட்டச் சொல்றதுக்கே நான் நடுங்கறேன்?"

"சரி, நடந்ததை மறைக்காமல் சொல்."

"உடம்புக்கு மருந்தும், லீவுச் சூருவும் கேக்கறதுக்காக ஒருநாள் ஆஸ்பத்திரிக்குப் போனேன். எல்லாரையும் அனுப்பிட்டு என்னை ரொம்ப அக்கறையாக் கவனிக்கிறப்பிலே கவனிக்க வந்தான். நெஞ்சிலே அவன் கையை வச்சு அழுத்த வந்தப்ப நான் அதைத் தட்டிவிட்டு, வெளியே ஓடிவரப் பார்த்தேன். "மருந்தும் வேண்டாம், சூருவும் வேண்டாம்" என்று சொன்னேன். அவன் என்னை வழி மறிச்சு, "வைத்தியம் பண்றதைத் தப்பா நினைச்சுக்கப்படாது" ன்னான். அப்பறம்... அப்பறம்..."

"என்ன நடந்திச்சு?"

"அவனோட வீட்டு அம்மா ஊருக்குப் போயிருந்தாளாம். வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்தணுமாம், அன்னைக்கி விளக்கு வச்சப்பறம் அவன் வீட்டுப் பக்கம் என்னைத் தனியா வரச் சொன்னான். எதுக்கு வரச் சொன்னான்கிறதை நான் புரிஞ்சுக்கிட்டேன்."

"நீ என்ன சொன்னே?"

"இந்தச் சென்மத்திலே நீங்க நினைக்கிறது எங்கிட்டே நடக்காதுன்னேன். வரமாட்டேன், முடியாதுன்னேன். லீவுச் சூரு வேண்டாம்னேன். அப்ப அவன் என்னை ஒண்ணும் செய்யலே. மருந்தையும் சூருவையும் கையிலே குடுத்து அனுப்பிட்டான். பின்னாலே அவன் யார்கிட்ட என்ன சொன்னானோ தெரியாது. அடுத்த வாரத்திலேருந்து என்னை வடக்கு மேட்டுக்கு மாத்திட்டாங்க. ஒவ்வொரு நாளும் உசிரு போய் உசிரு வந்துக்கிட்டிருக்கு."


"வேலை செய்யற இடத்திலே உனக்கு ஏதாச்சும் தொல்லை இருக்கா?"

"உடம்புத் தொல்லையைத் தவிர இப்போவேறே ஒண்ணும் தொல்லை இல்லே. பாலன் சாரோட அண்ணன் முத்துவையும் அங்கே தான் போட்டிருக்காங்க. யாரையோ அது எதிர்த்துப் பேசிருச்சாம். அதனாலே எனக்கு முந்தியே அதை அங்கே அனுப்பிச்சிட்டாங்க. தன்னோட வேலையை முடிச்சிட்டு, அது எனக்கும் உதவி செய்ய வருது. அது அவுங்களுக்குத் தெரிஞ்சா என்ன செய்வாங்களோ தெரியாது."

"இப்பவே நான் போய் அந்த மன்மதன்கிட்டே எச்சரிக்கை செய்யலாம்னு பாக்கறேன். அவனோட லீலையை நிறுத்திக் காட்டி..." பற்களைக் கடித்தான் கணேசன்.

"நீங்க போனீங்கன்னா, இப்பவே என்னையும் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பிச்சிருவாங்க. என்னையும்கூட்டிக்கிட்டு நீங்க வெளியே போறதுன்னா இதைச் செய்யுங்க. நாளையிலேருந்து உங்களை இந்தத் தோட்டத்துக்குள்ளேயே விடமாட்டாங்க. பின்னாலே நடக்கப் போறதையும் கொஞ்சம் யோசனை செஞ்சு பார்த்துக்குங்க."

கணேசனுக்கு அந்த நிலையில் உடனடியாக என்ன செய்வதென்று புரியவில்லை. உள்ளங்கால் முதல் உச்சித் தலைவரை அவனுக்குப் பற்றி எரிந்தது. சிரம்பானில் அவனுடைய தாயாரை அவன் தன்னுடைய நண்பனின் வீட்டில் விட்டிருந்தான். முதலில் வேலை கிடைக்க வேண்டும்; அடுத்து வீடு கிடைக்கவேண்டும். அதுவரையில் செல்லத்தை அவனோடு அழைத்துக்கொள்வது என்பது முடியாத காரியம். அவளை இங்கு விட்டுவைப்பது என்பதோ அதைவிட ஆபத்தானது. மன்மதன் இதோடு செல்லத்தை விட்டுவிடமாட்டான். இந்த விஷயத்தில் அவளுடைய அண்ணனோ அண்ணியோ அவளைச் சிறிதும் காப்பாற்ற முன்



வரமாட்டார்கள். அவர்களால் அது முடியவும் முடியாது. அவளுடைய குடும்பச் சூழ்நிலையை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் அவன் செல்லத்திடம் வாலாட்டியிருக்கிறன். இருதலைகொள்ளி எறும்புபோல் சிறிது நேரம் துடித்துவிட்டுச் செல்லத்துக்கு ஆறுதல் அளிக்க முயன்றுன கணேசன்.

"இந்தச் சமயத்திலே முத்து அங்கே வேலைக்கு வர்ரது உனக்கு ஒரு பாதுகாப்புன்னு வச்சிக்க, நான் இதைப் பத்திப் பாலன்கிட்டேயும் முத்துகிட்டேயும் பேசுறேன். இங்கேருந்து அங்கே படிக்கறதுக்கு லயத்திலேருந்து துரைன்னு ஒரு பிள்ளை தினசரி வந்துக்கிட்டிருக்கான். பள்ளிக்கூடத்துக்குப் போற வழியிலேதான் என் சினேகிதரோட கடையும் இருக்கு; பெட்ரோல் பங்கும் இருக்கு. அவசரமான சங்கதின்னு கடுதாசி கொடுத்தனுப்பு. நானும் அனுப்பறேன்."

"எப்படியாச்சும் என் பல்லைக் கடிச்சுக்கிட்டு, என்னோட மானத்தையும் உசிரையும் காப்பாத்திக்கறதுக்கு நான் முயற்சி பண்றேன். ஆனால் ரொம்ப நாளைக்கு என்னாலே இந்த இம்சையைத் தாங்கமுடியாது. நான் உசிரை விட்டாலும் விடுவேனே தவிர, மானத்தை விட்டுற மாட்டேன். பால்மரம் சீவுற கத்தி என்னோட கையிலே இருக்கிற வரைக்கும் என்னை அவன் ஒண்ணும் செஞ்சிட முடியாது. நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க."

செல்லத்துக்கு அவள் வீட்டிலிருந்து கால்வயிற்றுக்குக் கூடச் சரியான. சோறு கிடைப்பதில்லை என்பது அவளுடைய மெலிந்த தோற்றத்திலிருந்து தெரிந்தது. அண்ணன் குடிகாரன்; அண்ணி ஊதாரி. வேலையோ அவள் உடல் நிலையால் ஈடு கொடுக்க முடியாத கடுமையான வேலை. காட்டு வேலைக்கு மட்டும் அல்ல, வீட்டு வேலைக்குமே அவள் ஈடுகொடுக்க வேண்டும். அங்கும் அவள் ஓர் அடிமை; இங்கும் அடிமை. இப்படியெல்லாம் இருந்தும்கூட அந்த அநாதைப் பெண்ணிடம் தென்பட்ட ஒரு வைரம் பாய்ந்த நெஞ்சு, அவளிடம் கணேசன் வைத்திருந்த மதிப்பை நூறு மடங்காக உயர்த்தியது.

"செல்லம், நான் மிகவும் புண்ணியம் செஞ்சவன். இல்லேன்னு நீ எனக்குக் கிடைச்சிருக்க மாட்டே. உன்னிடம் இப்படி ஒரு நெஞ்சுறுதி இருக்கிறவரைக்கும் உனக்கு யாரும் கெடுதல் செய்திட முடியாது. மனசுதான் ரொம்பச் சக்தி உள்ளதுன்னு சொல்வாங்க. அந்தச் சக்தி உங்கிட்ட இருக்கு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் உன்னை நான் அழைச்சுக்கிட்டுப்போறேன்."

அவள் கரங்கள் இரண்டையும் பற்றித் தன் கண்களில் பதித்துக் கொண்டு, "சீக்கிரமா எனக்கு இந்த நரகத்திலேருந்து விடுதலை தேடித் தந்திடுங்க. என்னாலே தாங்க முடியலே; தாங்கவே முடியலே!" என்று விம்மினுள் செல்லம்.

(தொடரும்)

தேசிய இலக்கியம்

கம்பரின் காவிய ஓவியம்

ஆசிரியர்: ரெ. இராமசாமி, அலோர்ஸ்டார்
திருமண அன்பளிப்பு (1976)

திருமணத்தில் மணமக்களுக்கு உறவினர்களும் நண்பர்களும் பரிசளிப்பது உலக வழக்கம். இவ்வழக்கத்தோடு, மணவிழாவில் பங்கேற்கும் உறவினர்க்கும் நண்பர்க்கும் பரிசளிக்கும் ஒரு புதிய வழக்கத்தினை மேற்கொண்டு வரும் அன்பர்கள் சிலரில் திரு. ரெ. இராமசாமி குறிப்பிடத்தக்க ஒருவர். பொதுவாக இத்தகைய பரிசுகள் புத்தக வடிவிலேயே இருக்கும். தாம் மிகவும் விரும்பிப்போற்றும் சான்றோர் ஒருவருடைய நூலையோ அல்லது மணமக்களுக்கு நன்மை பயக்கும் நூல் ஒன்றையோ இவ்வாறு பரிசளிப்பது வழக்கம். இதனை மாற்றி. தம் வீட்டுத் திருமணம் ஒவ்வொன்றிலும் தம்முடைய நூல் ஒன்றை வெளியிடுவதை இவர் தம் வழக்கமாகக் கொண்டுள்ளார். சமயம் அல்லது இலக்கியம் சார்ந்ததாக இந்நூல் அமைந்திருக்கும். அவ்வாறு வெளிக் கொண்டுவரப்பட்ட ஒரு கட்டுரைத் தொகுப்பே "கம்பரின் காவிய ஓவியம்" என்ற இந்த நூல். மலேசிய வானொலியின் வழியாகவும், பத்திரிகைகள் வழியாகவும் இலக்கிய அன்பர்களை மகிழ்வித்த பன்னிரண்டு கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

நூலின் பெயர் "கம்பரின் காவிய ஓவியம்" என அமைந்திருந்தாலும், தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளையும் தொட்டுச் செல்லும் வண்ணம் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. திரு. ரெ. இராமசாமி கம்பனிடத்தில் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் கம்பனில் திளைப்பவர். அதன் பயனாக உருவானவையே இந்நூலின் முதல் நான்கு கட்டுரைகள். கம்பரின் காவிய ஓவியம், கம்பனின் சொல் வளம், கம்பன் கண்ட காதல் விளைவு, கம்பன் கண்ட நரசிங்கம் என்ற நான்கு கட்டுரைகளும் கம்பனை நான்கு கோணங்களில் காண்கின்றன. "தன்னேர் இலாத தமிழ்" என்ற கட்டுரை தமிழின் சிறப்புக்களை அழகுடன் எடுத்துக் கூறுகிறது. "குறள் வழி" என்ற கட்டுரை குறளின் செய்தியைச் சுருங்க உரைக்கிறது. தூது என்ற இலக்கிய வகையின் இயல்புகளை "இலக்கியத்தில் தூது" என்ற கட்டுரையும், குறவஞ்சி இலக்கியத்தில் கதிரவன் வருணனை பெறும் இடத்தைக் "குறவஞ்சியில் கதிரவன்" என்ற கட்டுரையும் விளக்குகின்றன. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களில் காணப்படும் சிறப்புக்களை அடுத்த கட்டுரையில் காணலாம். இறுதி மூன்று கட்டுரைகளும் பாரதியாரின் பாடல்களைப் பற்றியவை. குழந்தைகளுக்குப் பாரதி சொன்ன நீதிகளும், பாரதி கண்ட பாஞ்சாலியும், பாரதி கண்ட சுதந்திரமும். இக்கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரைத் தலைப்புக்களை மேற்போக்காகக் கண்டாலும், கம்பன் முதல் கவிமணி வரை நூலாசிரியர் பரந்து நோக்கியிருப்பதை எளிதில் உணர முடியும்.

கம்பனைப் பற்றிய கட்டுரைகளில், நூலாசிரியர் கம்பனின் பாடல்களைத் துணைகொண்டே அவன் சிறப்புக்களை விளக்கியிருக்கிறார்.

காவியம், ஓவியம் ஆகிய இரண்டு நுண்கலைகளின் தனிச் சிறப்புக்களையும் முறையே விளக்கி, இயற்கை, நாட்டிய அரங்கு, கற்பனை முதலியவை கம்பரின் பாடல்களில் எப்படிச் சொல்லோவியங்கள் ஆகியுள்ளன என்பது முதல் கட்டுரையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. நூலின் பிற கட்டுரைகளும் இவ்வாறே எடுத்துக் கொண்ட பொருளை, அதனதன் நிலையில் நின்று விளக்குகின்றன. கட்டுரைத் தலைப்பின் விளக்கம், அதற்கான நூற்சான்றுகள், அச்சான்றுகளில் காணப்படும் நயங்கள் ஆகியவை ஒவ்வொரு கட்டுரையிலும் முறையே இடம்பெற்றுள்ளன. இலக்கியக் கட்டுரைகள் இவ்வாறு அமையும் போதே, சாதாரண வாசகனும் எளிதில் மூலநூலின் உள்நுழைய விரும்புவான். அம்முறையில் இலக்கியக் கட்டுரைகளின் நோக்கத்திற்குப் பழுதில்லாத வகையில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன எனலாம்.

நூலின் பல கட்டுரைகள் பொருளளவில் நிறைவு பெற்றதாகத் தோற்றம் தருகின்றன. எனினும் "தன்னேர் இலாத தமிழ்", "குறள் வழி" ஆகிய இரண்டு கட்டுரைகளும் அளவில் மிகமிகச் சுருங்கிக் காணப்படுவதுடன். பொருளளவில் முழுமை பெற்றனவாகத் தோன்றவில்லை. இவை இன்னும் விரிவாக அமைந்திருக்கலாம். மொத்தத்தில் இந்நூலின் கட்டுரைகள், மூல நூல்களைத் தேடிப் படிக்கத் தூண்டும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன என்று உறுதியாகக் குறிப்பிடலாம். இலக்கியக்கட்டுரைகள் எழுதப்படும் நோக்கங்களுள், முதன்மையான சிலவற்றுள் இதுவும் ஒன்றுதானே?

—'குன்றன்'

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

ச. தமிழ்ச்செல்வன், செலாபா தோட்டம், தெலுக்கான்சன்

கே: "பால்மரக் காட்டினிலே" எனும் நாவல் தொடரில் அகிலன் மலேசியாவில் பல ஆண்டுகள் தங்கியது போல் இந்நாட்டில் இந்தியர்களின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறாரே! எப்படிக் கண்டு கொண்டார்?

ப: நமக்கும் படைப்பிலக்கிய ஆசிரியர்களுக்கும் உள்ள வேறுபாடு இதுதான். அவர்களுடைய அகக் கண்ணும் அகச் செவியும் கூர்மையானவை. புறக்கண் பார்ப்பது சிறிதானாலும், அகக்கண்ணால் அச்சிறிதை வைத்து முழுமையையும் அவர்கள் பார்க்க முடியும். அவ்வாறே அவர்களுடைய அகச்செவியும் ஆற்றல் வாய்ந்தது. இது படைப்பின் இரகசியம்.

கே: கண்ணதாசனின் "அர்த்தமுள்ள இந்து மதம்" இரண்டாம் பாகம் நம்பமுடியவில்லையே!

ப: கண்ணதாசனைப் புரிந்துகொண்டு அவர் படைப்புக்களைப் படித்தால் ஓரளவு நம்ப முடிந்தாலும் முடியலாம்—கண்ணதாசனின் நோக்கத்தை.

கிருஷ்ணவேணி, கோலாலம்பூர்

கே: தமிழ் இலக்கியம் வளரக் காரணமாக இருந்தவர் யார்?

ப: இரண்டாயிரம் ஆண்டிற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் அதன் வளர்ச்சிக்குக் காரணமாக ஒருவரையோ, அல்லது சிலரையோ சுட்டிக்காட்டித் திருப்தி அடைய முடியுமா? "எத்தனை மகானுபாவர்கள்! அத்தனை பேருக்கும் வணக்கம்" என்ற பொருளுள்ள தியாகய்யரின் கிருதிதான் உங்கள் கேள்வியைப் படித்தவுடன் நினைவிற்கு வருகிறது.

கே: நாவலாசிரியர் நா. பார்த்தசாரதியைப் பற்றி உங்கள் கருத்தென்ன? அவரது எழுத்தோவியங்களைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

ப. தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிந்த படைப்பிலக்கிய ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் நா. பா. "குறிஞ்சி மலரி"ன் மணத்தையும் "தீபத்"தின் ஒளியையும் மறந்துவிட முடியுமா என்ன? விலங்கைப் போட்டாலும் "பொன் விலங்காக"த்தான் நா. பா. போடுவார்.

வில்லியம் தமிழ்மணி, சபாய் தோட்டம், பகாங்

கே: எந்த மொழியின் இலக்கியம் உலகிலேயே மிகவும் பழமையானது?

ப: தமிழ், வடமொழி, இலத்தீன் முதலிய பல மொழிகளின் இலக்கியங்கள் காலத்தால் பழமையானவை.

கே: மனிதன்தான் நடைமுறையில் பெற முடியாத ஒன்றைத் தேடி இலக்கியத்தை நாடுகிறானா? அல்லது இலக்கியத்தில் உள்ளதைப்போலவே நடைமுறையில் பெறவேண்டும் என்பதற்காக இலக்கியத்தை நாடுகின்றானா?

ப: வாழ்க்கையில் பெறமுடியாத சில அற்ப சுகங்களை மனத்தால் அனுபவிக்கத் துணை செய்யும் ஒன்று இலக்கியமாக இருக்க முடியாது. மாறாக, மனத்தைப் பண்படுத்தி நல்லவை செய்யத் தூண்டும் ஒன்றே இலக்கியம் என்று பெயர் பெறுகின்றது. நல்ல, உயர்ந்த இலக்கியங்களில் தோய்ந்து அவை காட்டும் வழியில் நடக்கவே மனித மனம் என்றும் விரும்புகிறது.

எஸ். டி. மனோ, குளுனி தோட்டம், சிலிம் ரிவர்

கே: தமிழ் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டு புகழ் பெற்ற பிற நாட்டு அறிஞர்களின் பெயர்களைக் கூறுவீர்களா?

ப: அறிஞர் ஜி. யு. போப், வீரமா முனிவர் முதலிய பல அறிஞர்கள் அன்று தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டினார்கள். அறிஞர் கால்டுவெல் தமிழ் மொழியில் அதிக ஈடுபாடு காட்டினார். இன்று உலகின் பல பாகங்களில் தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் உள்ளனர். டாக்டர் ஆஷர், டாக்டர் மார், டாக்டர் கமில் சுவெலபில், டாக்டர் ஹெல்கா அண்டோன் முதலிய பலர் தமிழிலக்கியத்தில் நல்ல பயிற்சி உள்ளவர்கள். ரஷ்ய அறிஞர்கள் பலர் தமிழில் தனி ஈடுபாடு காட்டி வருகின்றனர். தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் பலவும் ரஷ்யமொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளி வந்துள்ளன. அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் மறைந்த டாக்டர் செமியோன் ரூதின்.

கே: நம் மலேசிய உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் இந்திய மாணவ, மாணவியர்களின் இலக்கிய ஆர்வம் எத்தனை சதவிகிதம் உயர்ந்துள்ளது?

ப: இலக்கிய ஆர்வத்தின் வளர்ச்சி சதவிகிதக்கணக்கிற்குக் கட்டுப்பட்ட ஒன்றல்ல. எனினும், இலக்கிய ஆர்வம் பொதுவாக வளர்ந்து வருவதாகக் கூறலாம்.

வ. முனியாண்டி, கம்போங் பிரபாங், தலைநகர்

கே: கம்பராமாயணத்தில் "இலங்கேசுவரன் சீதையைக் குடிலுடன் தூக்கிச் சென்றான்" எனவும், வால்கிமீ இராமாயணத்தில் "சீதையைத் தொட்டுத் தூக்கிச் சென்றான்" எனவும் உள்ளதா?

ப: ஆம். வால்மீகி சொன்னதைப் பல இடங்களில் பண்பாட்டு மெருகேற்றிக் கம்பர் பாடியுள்ளார். அத்தகைய இடங்களில் இதுவும் ஒன்று.

கே: அண்ணனைக் காட்டிக் கொடுத்தான் விபீசனன். அவனை "சேற்றில் மலர்ந்த செந்தாமரை" என உவமை கூறுவது முறையா? காட்டிக் கொடுத்தவனை வாழ்த்துவதுதான் தர்மமா?

ப: அண்ணன் செய்தது மாபெரும் தவறு எனத் தெரிந்தபின் திருத்தப் பார்க்கிறான். திருந்தாதபோது வெளியேறுகிறான். கும்பகருணனோ செஞ்சோற்றுக் கடன் கழிக்க உடனிருந்து அழிகிறான். எது சரி என்பது, பார்க்கின்றவர்கள் கண்ணோட்டத்தைப் பொறுத்தது.

செ. நடராசன், ஈப்போ

கே: மணிப்பிரவாள நடை என்பது என்ன?

ப: தமிழ்ச்சொற்களையும் வடசொற்களையும் சரிக்குச் சரி கலந்து எழுதுவது மணிப்பிரவாள நடை எனப்படும். "மணி" என்பது முத்து; "பிரவாளம்" என்பது பவளம். முத்தையும் பவளத்தையும் மாறி மாறி ஒருமாலையில் கோப்பதுபோல, வடசொல்லும் தமிழ்ச்சொல்லும் மாறி மாறிக் கலந்து எழுதப்படுவதால் இப்பெயர் வந்தது

"அவனுடைய கல்யாண குணங்களையும் திவ்ய சிஹ்நங்களையும் நிரவதிகமான ஆர்த்தியோடே கூப்பிடுகிற தன்னுடைய ஆர்த்த ஸ்வரத்தைக் கேட்டு ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போலே அத்யந்தம் அவஸ்நமாய்க் கொண்டு அத்திருநாமங்களையும் திவ்ய சிஹ்நங்களையுமே சொல்லிக் கூப்பிடும்படியாகக் கூப்பிடுகிற இவள், அந்த வ்யஸநம் பொறுக்க மாட்டாமையாலே துரதிக்ரமமான தன்னுடைய ஸ்த்ரீத்வத்தை த்ருணவந்மந்ய மானையாய்க் கொண்டு போகட்டும், நல்வளம் சேர் பழனத் திருக்கோளூர்க்கே போய்ப்புகும் ஹாக்ய ஹீனையான என்னுடைய பெண்பிள்ளை உங்களை நினைத்தாகிலும் ஒருகால் வருமேயென்று அவளுடைய பூவைகளைக் கேட்கிறாள்"

—நம்மால் ஓரளவு படிக்க முடிகின்ற மணிப்பிரவாள உரைநடைப்பகுதி இது. திருவாய்மொழிக்கு எழுதப்பட்ட ஓர் உரைப்பகுதி.

கண்ணைக் கவரும் அணிவகுப் போடு 1,200 வண்ணப் புறக்கள் சிறகடிக்க, கடந்த நவம்பர் மாதம் 19-ஆம் தேதி மாட்சிமை தங்கிய பேரரசர் 9-ஆவது தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டியை (சீ கேம்ஸ்) மெர்தேகா அரங்கில் துவக்கி வைத்தார்.

இப்போட்டியில் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், பர்மா, புருணை ஆகிய ஏழு நாடுகள் கலந்து கொண்டன. மொத்தம் நடைபெற்ற பதினெட்டு வகைப்பட்ட விளையாட்டுக்களில் 1,200 பேர் பங்கெடுத்துக் கொண்டனர்.

62 தங்கப் பதக்கங்களை வாகை சூடி இந்தோனேஷியா முதலிடத்தைப் பெற்றது. தாய்லாந்து 37 தங்கங்களை வென்று 2-வது இடத்தையும் 31 தங்கங்களைப் பெற்று பிலிப்பைன்ஸ் 3-வது இடத்தையும் பிடித்தன. மலேசியா 25 தங்கப் பதக்கங்களைப் பெற்று 4-வது நிலையை அடைந்தது. 42 வெள்ளிப் பதக்கங்களையும் 44 வெண்கலப் பதக்கங்களையும் மலேசியா பெற்றுள்ளது.

மலேசியா பெற்ற 25 தங்கப் பதக்கங்களில் 12 தங்கப் பதக்கங்கள் ஓட்டப்பந்தயப் போட்டிகளில் கிடைத்தவையாகும். மற்றவை, குறிசுடும் போட்டி, காற்பந்து, செப்பாக் தக்ராவ், கனந்தூக்குதல், பூப்பந்து, சைக்கிளோட்டும் போட்டி, ஹாக்கி முதலிய போட்டிகளில் கிடைத்தவையாகும்.

போட்டியில் பங்கெடுத்த மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமான வெள்ளி வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற நாடு மலேசியா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்களுக்கான 10 கிலோ மீ. பெருநடைப் போட்டியில் பெருநடை வீராங்கனை குமாரி எஸ். கலைமணி முதலாவதாக வந்து மலேசியாவிற்கு முதல் தங்கப்பதக்கத்தைப் பெற்றுத்தந்து நம்நாட்டிற்குப் பெருமையைப் பெற்றுத் தந்தார். கலைமணி, அந்த தூரத்தைக் கடக்க எடுத்துக்கொண்ட நேரம் 57 நிமிடங்கள் 26.9 வினாடிகள் ஆகும். 25-5-77 "புதிய சமுதாயம்" இதழ் பேட்டியில் கலைமணி கூறியிருந்தபடியே நாடு பெருமைகொள்ளும் விதம் தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் இரண்டாவது மூன்றாவதாக பர்மாவைச் சேர்ந்த குருவும் நிவி அவி அய்யும் வந்தனர்.

இரண்டு தங்கப் பதக்கங்களை வென்று "தங்கப் பெண்" என்னும் சிறப்பைப் பெற்றார் மரினா சின். துரதிர்ஷ்ட வசமாக ஒரு தடை ஓட்டப் போட்டியில் மரினா சின் தடுக்கி விழுந்திராவிட்டால் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றிருப்பார். கீழே விழுந்தாலும் திரும்பவும் எழுந்து ஓடி அந்தப் போட்டியில் இரண்டாவதாக வந்து விளையாட்டு ரசிகர்களின் கைத்தட்டலையும் பாராட்டையும் பெற்றார்.


இந்தப் போட்டியில் முதன் முதலாகக் கலந்துகொண்ட சுகினிந்தர்சிங் வியக்கத்தக்கவகையில் ஒரு நேரோட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். அஞ்சல் ஓட்டத்திலும் ஓடி தங்கப்பதக்கம் கிடைக்க இவர் உதவினார்.



இடைநிலையிலான கனந்தூக்கும் (மிடல் ஹெவி வெயிட்) போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற திரு. வில்லியம் இயேர்.



சில்வியா இங் தோற்றத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா, அவர் ஒற்றையர்களுக்கான பூப்பந்துப் போட்டியில் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டுவிட்டார் என்பது?



தாய்லாந்தைத் தோற்கடித்துக் காற்பந்துப் போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்ற மலேசியா, பர்மாவுடன் அரையிறுதி ஆட்டத்தில் விளையாடியபோது பிடித்த படம்.



400X4 கிலோ மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் தங்கம் பெற்ற வீரர்கள்.



தடை ஓட்டங்களில் இரண்டு தங்கப் பதக்கங்கள் பெற்ற குமாரி மரினா சின், கோலாலம்பூர் மாநகர டத்தோ பண்டாரிடம் அறிமுகம் செய்யப்படுகிறார்.

௯-வது தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகள்



இப்படிப் பாய்ந்திருக்காவிட்டால் பல்ஜிட் சிங் உயரம் தாண்டும் போட்டியில் தங்கம் பெற்றிருக்க முடியுமா?



பத்து கிலோ மீட்டர் பெருநடைப் போட்டியில் தங்கம் பெற்ற சுப்பிரமணியம் (நடுவில்), வெள்ளிப் பதக்கம் பெற்ற கூ சொங் பெங் ஆகியோருடன் வெண்கலம் பெற்ற எஸ். நடராஜா (சிங்கப்பூர்).

புரியவில்லை

மா. இராமையா

அடுத்த ஆண்டு புதிய வகுப் ற்கு மாறப் போகிறோம் என்ற மகிழ்ச் யில் மற்றப் பிள்ளைகள் திளைத்திருக் ம் வேளையில், சிவஞானம் மட்டும் தையோ பறிகொடுத்தவன்போல் வலையோடு காணப்பட்டான். ஐந்தாம் குப்பிலிருந்து ஆரும் வகுப்பிற்கு ாறப்போகும் மாணவர்களில் சிவ ானமும் ஒருவன்.

ஐந்து ஆண்டுகள், எத்தனையோ ங்கு தடைகளுக்கிடையே ஓடி றைந்துவிட்டன. கல்வித்துறை ல் ஆருவது ஆண்டைச் சந்திக்கப் பாவதில் இயற்கையாக ஏற்பட வண்டிய மகிழ்ச்சியைவிட கவ யே அவனிடம் தலை தூக்கி நின் து.

சிவஞானத்தின் அன்னை 'தங் ம்மாவுக்கு இது ஒரு புதுமை ன். இவ்வளவு நாளும் அவனிட ருந்த உற்சாகமும் சுறுசுறுப்பும் ப்போது மட்டும் குறைவானேன்? ன் படும் சிரமங்களை அவனும் தரிந்து கொண்டானா? அல்லது ற்றப் பிள்ளைகளைப் போல் னக்கும் தந்தை இல்லையே என்ற லை வந்துவிட்டதா?

இந்தக் கவலை அவனைவிட வனுடைய இரண்டு தம்பிகளுக் ம் தங்கைகளுக்குந்தான் இருக்க ண்டும். அவர்கள் எல்லாரும் ன்றும் பள்ளிக்கே போகாதவர் ர். சிவஞானந்தான் அவளுக்குத் லப்பிள்ளை. அவனுக்குப் பின்னர் ஆண்டுகள் இடைவெளி ட்ட மற்றப் பிள்ளைகள் பிறந்த ல் அவர்கள் இன்னும் பள்ளிப் வத்தை எய்தவில்லை.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக படிப்பில் அக்கறையாகவும் ணப்படும் சிவஞானம் திடீ ன்று கவலைப்படக் காரணந் ன் என்ன? தங்கம்மா தனக் தெரிந்த காரணங்கள் அனைத் யும் மனத்தில் அசை போட் பார்த்துவிட்டாள். ஒன்றும் ப்படவில்லை. அவனிடம் கேட் தெரிந்து கொள்வதைத்தவிர ளுக்கு வேறு வழியும் தோன்ற லை.

"ஞானம், ஏண்டா கவலையா க்கிறே?"-தங்கம்மா கேட்டாள்.

"ஒண்ணுமில்லேம்மா..."

"ஒண்ணுமில்லேன்னா பிறகு டா கவலைப் படணும்? உன் திலே இருக்கிற கவலை என் னுதான் சொல்லேண்டா"- கவலைப்படுவதைக் காண அவ கும் சங்கடமாகத்தான் இருந்

"என்கூட அஞ்சாம் வகுப் ல் படிச்ச ரெண்டு மலாய்க் பையன்களும் ஒரு சீனப் ளையும் ஆஸ்ரமாவுக்குப் கப் போறாங்க. அவுங்க மாதிரி எனக்கும் மார்க்குக் கிடைச் ."- சொல்லிக் கொண்டு வரும் த அவன் கண்களில் ஈரம் துவிட்டது.

ஏண்டா, நீயும் ஆஸ்ரமாவுக் போகணுமா?"- தங்கம்மா டாள்.

"ஆமாம்மா, அங்கே நல்லாப் படிச்சித் தர்றாங்களாம். எல்லா வசதியும் இருக்காம்" என்றான் சிவ ஞானம்.

தங்கம்மா யோசனை பண்ணினாள். சேவலைத்துறையும் வீடுமே தனது உலகமென வாழ்ந்து வரும் அவளுக்கு என்ன யோசனைதான் வரப்போகிறது? வெளியுலக நடவடிக்கைகளையே அறியாதவள்; என்ன வழிதான் சொல்லிக் கொடுக்கப் போகிறாள்?

"சரி, நீ போய் உன் வாத்தியாருக்கிட்டே சொல்லு. அவர் ஏற்பாடு பண்ணுவார்" என்று அவனுக்கு யோசனை சொல்லிக் கொடுத்தாள் தங்கம்மா.

அவனுடைய ஆசிரியரைப் பற்றி அவனுக்குத் தெரியாதா என்ன? தாயார் சொல்லைத் தட்டக் கூடாது என்பதற்காக மறுநாள் காலையில் தன்னுடைய வகுப்பாசிரியர் வடிவேலுவைச் சந்திக்க முயற்சி செய்தான்.

வடிவேலுவை வகுப்பறையில் அதிகமாகக் காண முடியாது. அவர் பெரும்பாலும் "கொமன் ரூமில்" தான் இருப்பார். வகுப்பை நடத்திச் செல்லும் முழுப்பொறுப்பு "வகுப்பு மோனிட்டர்" சிவஞானத்திடந்தான் இருந்தது

மேலும், தேர்வு எல்லாம் முடிந்து விடுமுறையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர் வகுப்புப் பக்கமே வராமலும் இருந்து விடுவதுண்டு.

வடிவேலுவுக்குப் பள்ளி வேலைகளைவிடத் தான் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியின் அலுவல்கள் தாம் அதிகம். அவைதாம் அவருக்கு முக்கியமாகவும் தோன்றின. அவர் ஓர் அரசியல் கட்சியின் மாநிலச் செயலாளர்.

செயற்குழுக்கூட்ட அறிக்கைகள், கிளைகளில் தேர்தல் நடத்த வேண்டிய ஏற்பாடுகள், ஆண்டறிக்கைகள் மாநிலத் தேர்தல் வரும்போது தனக்கு ஆதரவு தேடிக் கிளைகள் விடாமல் சுற்ற வேண்டிய அவசியம்-இப்படிப் பல அலுவல்களுக்கிடையே கைநிறையச் சமபளம் கிடைக்கும் ஆசிரியர் தொழிலையும் செய்ய வேண்டியிருந்தது.

அவரால் பள்ளி வேலைகளையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை; அரசியல் பொறுப்புக்களையும் விடமுடியவில்லை. அரசியல் வழி ஏதாவது ஒரு பெரிய ஆதாயம் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே காலத்தையும் நேரத்தையும் விரயமாக்கிக் கொண்டிருந்தார் வடிவேலு.

இதனை "விரயம்" என்றுகூடச் சொல்லக்கூடாது. அவர் மொழியில் "சமூகத் தொண்டு" என்றுதான் சொல்ல வேண்டும். அவர் எத்தனையோ மேடைகளில் தன்னுடைய சமூகத் தொண்டைப் பற்றி "அவையடக்கத்தோடு" எடுத்துரைத்திருக்கிறார். அவர் தனது சமூகத் தொண்டையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வகுப்பில் "சிவிக்" பாடம் படித்துக் கொடுக்க வரும்போது தன்னைப் பற்றிய பிரதாபங்களைத்தான் அதிகம் உதாரணத்துக்காக எடுத்துக்கொள்வார்.



பொய் எப்பொழுதும் கசப்பதில்லே.

இவ்வாண்டு நடந்து முடிந்த ஐந்தாம் வகுப்புத் தேர்வில் அவருடைய வகுப்பில் பெரும்பாலான பிள்ளைகள் "பி"யும் "சி"யும் பெற்றுப் பின் தங்கிவிட்டனர். கூடுதலான "ஏ" தகுதி பெற்ற மாணவர்களின் பெற்றோர், தங்கள் பிள்ளைகளின் படிப்பின்மேல் கொண்ட அக்கறையின் காரணமாக வெளியில் "டியூஷனுக்கு" ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், சிவஞானம் எந்த "டியூசனும்" இன்றி, நான்கு "ஏ"யையும் ஒரு "பி"யையும் வாங்கிச் சிறப்பான முறையில் தேர்வு பெற்றிருந்தான். இவனைப் போன்று நான்கு "ஏ"யும் ஒரு "பி"யும் வாங்கிய மற்றவர்களுக்கு "ஆஸ்ரமா"வில் தங்கிப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்திருப்பதைக் கேள்விப்பட்டதிலிருந்து அவன் மனமே உடைந்து போய்விட்டது.

சிவஞானம், வடிவேலுவைக் காண "கொமன் ரூமிற்குள்" சென்றான். அவர் மும்முரமாக வழக்கமான அரசியல் வேலைகளில் மூழ்கி இருந்தார்.

"சார்..."

வடிவேலு மவுனமாக எழுதிக் கொண்டிருந்தார்.

"சார்..."

"அடடா...என்னைக் கொஞ்ச நேரம் நிம்மதியா விடமாட்டீங்க போலிருக்கே"- இரைந்தார் வடிவேலு.

"அது இல்லே சார்... வந்து..."- சிவஞானம் தான் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் தடுமாறினான்.

"இந்த அஞ்சாம் வகுப்பைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறதைவிட எங்கேயாச்சும் போய் மாடு மேய்க்கலாம். ஏண்டா நிக்கிறே? போயி எதையாச்சும் எழுதச் சொல்லு! போ..."

"நான் சொல்ல வந்தது அது இல்லே சார்..."

"பிறகு எதுவாம்?"

"மூணு பேருக்கு நம்ம வகுப்பிலே இருந்து ஆஸ்ரமாவிலே தங்கிப் படிக்க இடங்கிடச்சிருக்கு. எனக்குமட்டும்கிடைக்கலேசார்..."- அவன் குரல் கம்மியது.

எழுதிக் கொண்டிருந்த வடிவேலு முகம் உயர்த்தி அவனைப் பார்த்தார். அவர் பார்வையே அவன் மனத்தைக் கலக்கியது. இரண்டு அவருடைய கண்களும் இயற்கையிலேயே "மாத்தா கூச்சிங்" கொட்டைகள்போல் உருண்டு திரண்டிருக்கும். அவர் அந்தக் கண்களை உருட்டிப் பார்க்க ஆரம்பித்தால்... அப்புறம் கடுவன் பூனைதான்.

"ஒழுங்கா எல். சி. இ. வரை படிப்பியான்னு தெரியல்லே. இந்த லட்சணத்தில் ஆஸ்ரமா ஆசை வேறேயா? யார் யாருக்கோ வர வேண்டிய ஆசை எல்லாம் உனக்கு வருது போடா, போயி வேலையைப் பாரு" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு மீண்டும் தன் எழுத்து வேலையில் மூழ்கிவிட்டார் வடிவேலு.

சிவஞானம் மேற்கொண்டு என்ன கேட்க முடியும்? அவன் திரும்பித் தன் வகுப்பிற்கு வந்து இருக்கையில் அமர்ந்ததும், அவன் உள்ளத்திலிருந்து அழுகை குமுறிக் கொண்டு வெளிப்பட்டது. சிவஞானம் வகுப்பு "மோனிட்டர்." அவன் அழுது இதுவரை யாரும் பார்த்ததில்லை. அவனா அழுகிறான்? எல்லாரும் வியப்பில் மூழ்கினர்.

"ஞானம்... ஏண்டா அழுறே?"- அவனிடம் எப்போதும் பேச்சு வாங்கிக் கட்டிக் கொள்ளும் குஞ்சப்பன் அவன் அருகில் வந்து பரிவோடு கேட்டான்.

சிவஞானத்தால் பேசவே முடியவில்லை.

ஆஸ்ரமாவில் தங்கிப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கும் இரண்டு மலாய்க்காரப்பையன்களும்ஒருசீனப் பிள்ளையும் மற்றவர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் அழும் காரணத்தைச் சட்டென்று புரிந்து கொண்டவள் லிம் சின் சைதான். அவள் தலைமை ஆசிரியரின் அறைக்குப் போய்விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தபோது வடிவேலுவும் சிவஞானமும் பேசிக்கொண்டதில் ஓரிரு வார்த்தைகள் அவள் காதுகளில் விழத்தான் செய்தன.

"அழாதே ஞானம், உனக்கும் ஆஸ்ரமாவிலே இடங்கிடைக்கலேன்னுதானே அழுறே? என் அப்பா செய்த மாதிரி உன் அப்பாவும் செய்தா, உனக்கும் இடங் கிடைக்கும்" என்று வழி சொல்லிக் கொடுத்தாள் லிம் சின் சை.

அழுது கொண்டிருந்த சிவஞானம் அவளைப் பார்த்தான். லிம் சின் சைக்கு அவள் தந்தை முயற்சி எடுத்துக்கொண்டார். இவனுக்கு யார் முயற்சி எடுத்துக் கொள்வது? தந்தையை இழந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன. இப்போது இருக்கிற ஒரே பந்தமும் பாசமும் அவன் தாய் ஒருத்திதான். எல்லாவற்றிற்கும் அவளை நம்பித்தான் அவனும் அவன் தம்பி தங்கைகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆரஞ்சுப் பழத்தின்மேல் எறும்பு சுற்றிச் சுற்றி வருவதுபோல அவர்



கள் அவனையே சுற்றி வரவேண்டி இருந்தது.

லிம் சின் சை சொன்ன விவரத்தைத் தன் தாயாரிடம் தெரிவித்தான் சிவஞானம்.

"நான் எந்தக் கவுன்சிலரைப் பார்த்தேன்... போய் முயற்சி பண்ண?" என்று சலித்துக்கொண்டாள் தங்கம்மா.

"நம்ம ஊர் கவுன்சிலர் செல்வமணி இல்லையாம்மா, அவர் உதவி செய்வார். நீ போய் அவருகிட்டே சொல்லும்மா" என்று கெஞ்சினான் சிவஞானம்.

சிவஞானத்தின் ஆவலை அவளால் தட்டிக் கழிக்க முடியவில்லை. தன் மகனும் மற்றப் பிள்ளைகள்போல் அறிவாளியாகவும் பேரும் புகழோடும் வாழ்வதை எந்தத் தாய்தான் விரும்பமாட்டாள்?

தங்கம்மா சட்டமன்ற உறுப்பினர் செல்வமணியைக் கண்டு விவரத்தைச் சொன்னாள். தன் சட்டைப் பையிலிருந்து பத்து வெள்ளியை எடுத்துக் கொடுத்துவிடும் பிரச்சினை போன்று இது இல்லாவிட்டாலும் ஓர் ஏழையின் மகன் இவ்வளவு ஆர்வத்தோடு இருப்பதை அறிய அவர் உடலும் சிலிர்க்கத்தான் செய்தது. இந்த விவகாரத்தில் தன்னாலான அனைத்தையும் செய்வதாக உறுதி கொடுத்தனுப்பினார் செல்வமணி.

தன் தாயார் இவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக்கொண்ட வரையில் சிவஞானத்துக்குத் திருப்திதான். பெரிய மனிதர்கள் கொடுக்கும் வாக்குறுதி எப்போதும் பொய்க்காது என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

சிவஞானம் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான்.

ஒன்று...

இரண்டு...

மூன்று...

பள்ளி விடுமுறையும் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்குள் முடிவு தெரிந்து விட்டால் இதே வடிவேலுவிடம் ஆறும் வகுப்பு படிக்கவேண்டிய அவசியம் இருக்காது. அடுத்த ஆண்டு ஆறும் வகுப்பிற்குப் போதிக்கப் போகிறவர் வடிவேலுதான் என்ற செய்தியும் காற்றுவாக்கில் உலவிக் கொண்டிருந்தது.

அலுவலகப் பையன் வந்து தலைமை ஆசிரியர் கூட்டிவரச் சொன்னதாகச் சிவஞானத்தை அழைத்துச் சென்றான். சிவஞானம் தலைமை ஆசிரியரின் அறைக்குப் போய்க் கொண்டிருந்தபோதுதான் பத்திரிகையும் கையுமாக வடிவேலு "கொமன் ரூமில்" நுழைந்துகொண்டிருந்தார்.

சிவஞானம் தலைமை ஆசிரியரின் அறையை விட்டு வெளியில் வரும்போது மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். அவன் தன்னுடைய மகிழ்ச்சியை வகுப்பாசிரியருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினானே என்னவோ, "கொமன் ரூமில்" நுழைந்தான். வடிவேலு ஆங்கிலப் பத்திரிகையை விரித்து வைத்துக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். அவர் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பக்கத்தில் பலருடைய படங்கள் பிரசுரமாகி இருந்தன.

அவர் அந்தப் பகுதியைப் பார்த்து முடிக்கும்வரை பொறுமையாக நிற்க அவனால் முடியவில்லை.

"சார் "

அவர் காதுகள் செவிடாகி விட்டனவா?

"சார்..."-மீண்டும் அழைத்தான்.

நாளிதழை மேசைமேல்போட்டு விட்டு அவனைப் பார்த்தார். அவர் முகம் கடுவன் பூனை மாதிரி இருந்தது.

"என்ன? வகுப்பிலே கலாட்டாவா?"

"இல்லை சார் எச். எம். என்னைக கூப்பிட்டிருந்தார்"

"கூப்பிட்டால் போய்ப் பார்க்க வேண்டியதுதானே?"

"பார்த்து விட்டுத்தான் வர்றேன்..."

"அதை என்னிடம் வந்து சொல்லணுமா?"

"இல்லே சார்... எனக்கும் ஆஸ்ரமாவிலே இடங்கிடைச்சிருக்கு..."

"இதைச் சொல்லத்தான் வந்தியா? என் பேரு பத்திரிகையிலே இல்லையேன்னு கவலைப்பட்டுக்கிட்டு இருக்கிறேன். என்னவோ யுனிவர்சிட்டியிலே இடங்கிடைச்சிட்ட மாதிரி இதைப் பெரிசா சொல்ல வந்துட்டே..."-வடிவேலு மீண்டும் தன் பார்வையை நாளிதழில் ஊன்றிக் கொண்டார்.

தன்னுடைய மகிழ்ச்சியில் தன் ஆசிரியர் பங்குபெறுவார் என்று எதிர்பார்த்த சிவஞானம் ஏமாந்து போனான். அவன் மனத்தில் கடலெனப் பரவி நின்ற மகிழ்ச்சிப் பெருக்கை ஒரு நொடியில் சிற்றோடையாக மாற்றியமைத்து விட்டார் வடிவேலு.

கலகலப்போடு "கொமன் ரூமில்" நுழைந்த சிவஞானம் கவலையோடு வெளியில் வந்தான்.

வடிவேலுவின் "சமூகத் தொண்டு" எதை நோக்கிப் 'போகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. ஏன், இந்தச் சமூகத்துக்கே புரியாத ஒன்று அவனுக்கு மட்டும் எங்கே புரியப் போகிறது?

ஹிட்லரின் புதல்வர்

கடந்த நவம்பர் 5ஆம் தேதி மேற்கு ஜெர்மனியின் தொலைக் காட்சியில் தோன்றிய 59 வயதுடைய ஜீன் லோரெட் எனும் பிரெஞ்சுக்காரர் ஒருவர், தன்னை முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லரின் புதல்வரெனக் கூறிக் கொண்டார்.

"என் தந்தை அடால்ப் ஹிட்லர்" என்னும் நான்கே சொற்களைக் கொண்ட தன் தொலைக் காட்சி உரையினை முடித்தவுடனேயே அவர், தன்னை மேற்கொண்டு கேள்விகள் கேட்க விருந்த நிருபர்களிடம் இருந்து நழுவிவிட்டார்.

முதலாம் உலகப்போர் நடைபெற்ற சமயத்தில் ஜெர்மானிய இராணுவ வீரராக இருந்த ஹிட்லருக்கும் பிரஞ்சுப் பெண்மணி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட காதலின் விளைவே ஜீன் லோரெட் என்று கூறப்படுகிறது.

இந்த உண்மைகளை உறுதி செய்யும் வரலாற்று ஆராய்ச்சியாளரான டாக்டர் மேசர், பன்னிரண்டு ஆண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு இதைத் தான் கண்டு பிடித்ததாகக் கூறுகிறார். உலக உரிமைகளுக்காகச் சுமார் ஐந்து லட்சம் வெள்ளி பெறக்கூடும் என்று நம்பப்படும், நூறு பக்க அளவிலான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகக் கூறும் டாக்டர் மேசர் அவற்றைக் காட்ட மறுத்து விட்டார்

ஜீன் லோரெட்டின் காலமாகிவிட்ட தாயாரின் புகைப்படமொன்றையும் அவரின் ஓவியத்தின் புகைப்படத்தையும் டாக்டர் மேசர் நிருபர்களிடம் காட்டினார். ஓவியத்தின் கீழ் "ஏ. ஹிட்லர்" என்ற கையெழுத்தும், "1916" என்ற வருடமும் காணப்படுகின்றன. புகைப்படத்திற்கும் ஓவியத்திற்குப் மிகுந்த ஒற்றுமை உள்ளது.

ஒரு கைவினைத் தொழிலாளரின் மகளான லோரெட்டின் தாயாரைப் பிரெஞ்சுக் கிராமம் ஒன்றில் 1916-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹிட்லர் சந்தித்திருக்கிறார். அவர்களது காதல் 1917-ஆம் ஆண்டு அக்டோபர் 5-ஆம் நாள் வரை நீடித்தது. அதன்பிறகு ஐந்து மாதங்கள் கழித்து ஜீன் லோரெட் பிறந்தார்.

1940-ஆம் ஆண்டில் 'நாஸி' ஜெர்மானியர்களால் பிரான்ஸ் கைப்பற்றப்பட்டபோது மறுபடியும் அந்தக் கிராமத்திற்கு வருகை புரிந்த ஹிட்லர் தனது முன்னாள் காதலியையும் மகனையும் தேடிக் கொண்டு பிடிக்கும்படி உத்தரவிட்டார்.

அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்; ஆனால் அவர்களைச் சந்திக்க ஹிட்லர் மறுத்துவிட்டார்.

15 நாள் பலன்

டிசம்பர் 11 முதல்
டிசம்பர் 25 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

அதிர்ஷ்டக்காற்று உங்கள்பக்கம் வீச ஆரம்பித்துள்ளது. ஆனால் நீங்கள்தான் அதை முழுமையாகச் சுவாசிக்க மாட்டேன் என்றிருக்கிறீர்கள். பெரியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் எதிர்பார்த்ததற்கும் மேலாகக் கிடைக்கும். வாகனப் போக்குவரத்து ஒத்து வராது. குடும்பத்தினரில் சிலர் உங்களுக்கு விரோதமாகச் செயல்படுவார்கள். உடலாரோக்கியத்தில் கவனமாக இருங்கள்.

நல்ல நாட்கள்: 14, 17
எச்சரிக்கை நாட்கள்: 11, 21

மீனம் (பிப். 9- மார்ச்சு 20)

இயல்பாகவே உங்களது கை ஒட்டைக்கை. ஐந்து காசைக்கூட மிச்சமாக்க வேண்டும் என்று கருதாத வள்ளல் அவ்வளவு செலவும் உங்களுக்கென்றிராமல் அடுத்தவர்களுக்காகவே இருக்கும். கூடுமான வரை அதைக் கட்டுப்படுத்த முயலுங்கள். தனக்கு மிஞ்சியதுதானே தர்மம் என்பதைக் கண்படும் இடமெல்லாம் வீட்டில் எழுதிவையுங்கள். இந்தக் காலத்தில் திட்டிய மரத்திலேயே கூர் பார்க்கும் புத்திசாலிகள் அதிகமானோர் இருக்கிறார்களல்லவா?

நல்ல நாட்கள்: 15, 22
எச்சரிக்கை நாட்கள்: 17, 24

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

"உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது" என்னும் பழமொழியைக் கேள்விப்பட்டிருக்கவில்லையா? ஏன், ஊரார் மெச்சிக்கொள்ள சக்திக்கு மீறிச் செலவு செய்யவேண்டும்; பிறகு வாசலில் கடன்காரர்கள் தவம் கிடக்கவேண்டும்? அளவோடு செலவுசெய்யப் பழகுங்கள். வீண் ஆடம்பரமும் டாம்பீகமும் வேண்டாம்; வேண்டவே வேண்டாம்.

நல்ல நாட்கள்: 16, 18
எச்சரிக்கை நாட்கள்: 14, 23

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்னும் இராமலிங்க சுவாமிகள் பாடலை உருப்போட்டு உங்களின் இஷ்ட தெய்வத்திடம் முறையிடுங்கள். ஏனென்றால் உங்களைச் சுற்றியுள்ளவர்களில் பெரும்பாலோருக்கு உதட்டில் உறவு, உள்ளத்தில் பகை. செய்தொழிலில் மேன்மை உண்டாகும். கடிதமூலம் நல்ல சேதி வரும். உடலாரோக்கியம் நல்லபடி இருக்கும். வேலைப் பளு அதிகமாகலாம்.

நல்ல நாட்கள்: 16, 24
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

வியாபாரிகளுக்குக் கொள்ளை லாபம் கிடைக்காவிட்டாலும் நல்ல லாபம் கிடைக்க அட்டியில்லை. உத்தியோகஸ்தர்களுக்குக் குறிப்பிடத்தக்க பலன் ஏதும் கிடைக்காது. அற்றைக் கூலிக்கு வேலை செய்பவர்கள் நிரந்தரமான வேலை செய்ய வாய்ப்பு உண்டு. நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சேமிப்புப் பெருகும் சந்தர்ப்பமும் உருவாகலாம்.

நல்ல நாட்கள்: 12, 18
எச்சரிக்கை நாட்கள்: 19, 23

கடகம் (ஜூன் 21- ஜூலை 20)

குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் யாருக்கேனும் சுகவீனம் ஏற்படலாம். வரவுக்கு மிஞ்சிய செலவு உண்டாகும். சிக்கனமாகச் செலவு செய்யுங்கள். கூட்டுத் தொழிலில் மேன்மை கிட்டும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகளால் தொல்லைவர வாய்ப்புண்டு. அவர்களிடம் மோதிக்கொள்ள நேர்ந்தால் அதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

நல்ல நாட்கள் 17, 24
எச்சரிக்கை நாட்கள்: 15, 18

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

உங்களுக்கும் கூட்டுத் தொழிலுக்கும் ஒத்துவராதபோது அதில் ஏன் நீங்கள் நேரத்தை வீணாகச் செலவுசெய்ய வேண்டும்? ஆனால் சொந்தத் தொழில் செய்தால் பலன் கிடைக்காமல் போகாது. திடீர்ச் செலவு எப்படி ஏற்படுகிறதோ அப்படி திடீர் வரவும் வரும் என்பதால் பொருளாதாரத்தில் சரிக்குச் சரியாகவே இருக்கும். பெரியோர்களின் ஆதரவு உண்டு.

நல்ல நாட்கள்: 14, 17
எச்சரிக்கை நாட்கள் 11, 19

கன்னி (ஆக 22 - செப் 22)

"கடுமையாக உழைத்தாலும் காசு சேரவில்லையே" என்கிற கவலை உங்களுக்கு. கவலையை விடுங்கள். இன்னும் சிறிது காலம் சென்ற பிறகு எல்லாம் சரியாகிவிடும். இப்போதுதான் விதைக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். அதற்குள்ளாகவா அறுவடை காலம் வந்துவிடும்? மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு படிப்படியாக அதிகரிக்கும்.

நல்ல நாட்கள்: 12, 19, 23
எச்சரிக்கை நாட்கள்: 15, 22

துலாம் (செப். 23-அக். 22)

இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி உங்கள் மனத்தை அலைக்கழிக்கும் தீய சக்திகளிடமிருந்து ஒதுங்கி இருங்கள். எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயம் கிட்டும். சொந்த யோசனைக்கும் முடிவுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எதையும் செயற்படுத்துங்கள். வாகனப் போக்குவரத்தில் நன்மை உண்டு. பகைவர்கள் உறவை நாடுவார்கள்.

நல்ல நாட்கள்: 23, 25
எச்சரிக்கை நாட்கள்: 14, 20

விருச்சிகம் (அக் 23-நவ. 22)

நல்லவர்களின் சேர்க்கையால் உங்களுக்கு நல்லவை உண்டாகும். மேலதிகாரிகளிடம் "சபாஷ்" வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. சொந்த வீடு இல்லாவிட்டால் அதைப் பெறும் முயற்சியில் இறங்குவீர்கள். கடன் தொல்லைகள் தீர வழி பிறக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கலாம். மன நிம்மதி கிட்டும் வகையில் குடும்பத்தினர் உங்களுடன் ஒத்துழைப்பார்கள்.

நல்ல நாட்கள்: 13, 14, 24
எச்சரிக்கை நாட்கள்: 16, 17

தனுசு (நவ 23 - டிச. 20)

நாலு நம்பர், மூன்று நம்பர் லாட்டரியில் நீங்கள் அதிகம் ஈடுபடுபவராக இருந்தால் இந்த நாட்களில் உங்கள் சம்பாத்தியத்தில் அதிகம் "அம்போ"வென்று போய் விடும். குதிரைக்குக் கடிவாளம் போல இந்த விஷயத்தில் உங்களுக்கு நீங்களே கடிவாளம் போட்டுக் கொள்ளுங்கள். குடும்பத்திலும் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். மொத்தத்தில் செலவு அதிகம் ஏற்பட வழியிருப்பதால் கொஞ்சம் கவனமாக இருப்பது உங்களுக்கு நல்லது.

நல்ல நாட்கள்: 15, 18
எச்சரிக்கை நாட்கள்: 17, 21, 25

மகரம் (டிச 21- ஜன. 19)

"அள்ளாமல் குறையாது. சொல்லாமல் பிறவாது" என்பதுபோல நீங்கள் கேள்விப் பட்டவற்றில், பார்த்தவற்றில் சிறிதளவாவது உண்மை இருக்காமல் போகாது. ஆகவே உங்கள் கருத்தில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு திருப்திகரமாக இராது. குடும்பத்தினரே உங்களுக்கு அனுசரணையாக இல்லையே! திடீர் அதிர்ஷ்டம் எந்த உருவிலாவது விரைவில் வர இருக்கிறது. அதை எதிர்நோக்கியிருங்கள்.

நல்ல நாட்கள்: 16, 20.
எச்சரிக்கை நாட்கள்: 14, 18

—தஞ்சை நகுலன்

சிட்டிக்கதைகள்

'ஆவன்னா'

ஒரு வீட்டில் நிறைய எலிகள் இருந்தன. வீட்டுக்காரர்கள் ஒரு பூனை வளர்த்து வந்தார்கள். ஒவ்வோர் இரவும் அந்தப்பூனை எலிகளைக் கொன்று தின்று வந்தது.

பூனையால் விளையும் ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழி கண்டு பிடிக்க வேண்டும் என்று எண்ணிய எலிகள் ஒரு மாநாடு கூட்டின.

"முன்னெச்சரிக்கை இன்றி பூனை பாய்ந்து விடுவதால், ஓடித் தப்பிக்க இயலாமல் நம்மில் பலர் சாக நேரிடுகிறது. ஆகவே பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டிவிடவேண்டும். மணியைக் கட்டிவிட்டால் அது வரும்போது சத்தம் கேட்கும்; நாம் ஓடித் தப்பித்துக்கொள்ளலாம்" என்று ஒரு தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. "ஆகா, அற்புதமான தீர்மானம்!" என்று பல எலிகள் பாராட்டின.

"தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால் பூனையின் கழுத்தில் மணியைக் கட்டுவது யார்?" என்று கேட்டது ஓர் எலி.

"தீர்மானங்களை நிறைவேற்றுவதுதான் மாநாட்டின் நோக்கம். அவற்றைச் செயல்படுத்துவதைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை!" என்றது இன்னோர் எலி.



தீர்மானம்



தொலைக்காட்சி

ஒரே நாளில் மூன்று இடங்களில் கூட்டம்; அரைமணி நேரம்கூட ஓய்வெடுத்துக் கொள்ள இயலாததால் அசதி அவரைத் தள்ளியது. அரசியல் தலைவர் என்றால் அலைச்சலுக்குக் கேட்கவா வேண்டும்?

வாசற்படியில் கால்வைத்ததுமே அவரின் பிள்ளைகள் "அப்பா தொலைக்காட்சிப்பெட்டி இன்று முழுவதும் வேலை செய்யவில்லை. ஏதோ பழுதுபோல் இருக்கிறது!" என்றனர்.

'தொலைக்காட்சி' என்று காதில் விழுந்தவுடன் ஏதோ நினைவில் "சரி, சரி! இதுபற்றி அரசாங்கத்துக்கு விரைவில் ஒரு மகஜர் அனுப்பி வைக்கிறேன்!" என்றபடி சாய்வுநாற்காலியில் சாய்ந்தார் அவர்.

பிள்ளைகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பிம்பம்



தின்ன ஏதாவது கிடைக்குமா என்று தெருக்களைச் சுற்றி வந்தது ஒரு நாய். அதற்குக் கடுமையான பசி.

ஒரு கசாப்புக்கடையைப் பார்த்ததும் அதற்கு மகிழ்ச்சி உண்டானது. கடைக்காரன் சற்று அசந்த நேரம் பார்த்து, ஒரு பெரிய இறைச்சித் துண்டைக் கௌவிக்கொண்டு ஓட்டம் பிடித்...

...பார்த்தது. ஆற்று நீரில் இறைச்சித்துண்டும் வாயுமாக அதன் பிம்பம் தெரிந்தது.

"அது வெறும் பிம்பம்தான்! பிம்பங்களையும் நிழல்களையும் பார்த்து ஏமாறிப்போய், இருப்பதையும் இழக்கும் அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் அல்ல! பழைய கதையில், ஆற்றில் குதித்து வாயில் இருந்த இறைச்சியை இழந்த

டது. பாலத்தின் வழியாக ஆற்றைத் தாண்டுகையில் எட்டிப்

வாறே ஆற்றைக் கடந்து சென்றது.

தந்திரம்



ஆற்றில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது ஒரு நரி. ஆற்றின் உள்ளே கிடந்த ஒரு முதலை அதன் காலைக் கௌவிக் கொண்டது.

ஆபத்தை உணர்ந்துகொண்ட நரி, "முதலையாரே, என் கால் என்று எண்ணிக்கொண்டு, மரத்தின் வேரைப் பிடித்துக்கொண்டிருக்கிறீரே, ஐயோ பாவம்!" என்று உரக்கக் கூறியது.

"உன் காலுக்கும் மரத்தின் வேருக்கும் வேறுபாடு தெரியாதவன் என்று என்னை நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நான் தண்ணீரில் வாழ்பவன்; "தண்ணி"யில் வாழ்பவன் அல்ல! உன் தந்திரப் பேச்சை எவனாவது தமிழனிடம் போய்ச் சொல், ஏமாறுவான்!" என்று சொல்லியபடி நரியை நீரின் உள்ளே இழுத்துக் கொன்று, தின்றது முதலை.

கடை



"வேகமாக ஓடக்கூடியது யார்?" என்பது குறித்து ஓர் ஆமைக்கும் முயலுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் 'ஓட்டப் பந்தயம் வைத்துப் பார்த்துவிடலாம்' என்று முடிவு எடுக்கப்பட்டது.

எல்லா விலங்குகளும் சூழ்ந்திருக்க, பந்தயம் துவங்கியது. முயல் மின்னலாய்ப் பாய்ந்து ஓடியது. ஆமை மெதுவாக நடந்து சென்றது.

வெகுதூரம் ஓடியபின் முயல் திரும்பிப் பார்த்தது; ஆமையைக் காணவில்லை. "ஆமை வந்து சேர நேரமாகும்; கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்" என்று நினைத்து ஒரு மரத்தடியில் சாய்ந்த முயல் நெடுநேரம் தூங்கிவிட்டது.

திடீரென்று உறக்கம் கலைந்த முயல், "நேரமாகிவிட்டதே!" என்று பதற்றத்தோடு வெகு வேகமாய் ஓடி, முடிக்கும் இடத்தை அடைந்தது. அங்கே ஆமையைக் காணவில்லை. முயலே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நீண்ட நேரம் ஆனது; தட்டுத் தடுமாறி மெல்ல மெல்ல வந்து சேர்ந்தது ஆமை.

"ஆமையே, நான் தூங்கிய நேரத்தில் நீ இங்கு வந்து சேர்ந்து போட்டியில் வெற்றி பெற்றிருக்க வேண்டுமே, ஏன் இவ்வளவு தாமதம்?" என்று முயல் கேட்டது.

கண்கள் சிவந்திருக்க, கால்கள் தள்ளாட, "வரும்வழியில் 'கடை' ஒன்று இருந்தது" என்று குழறிக் குழறிக் கூறியது ஆமை.

பழக்கம்



அடைக்கப்பட்ட கதவுக்கு வெளியே பதற்றத்தோடு காத்துக் கொண்டிருந்தார் ஒரு தமிழ்ப் பாடகர். பிரபல தொலைக்காட்சிக் கலைஞர் அவர்.

திடீரென்று கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்த ஒரு தாதிப் பெண், "உங்கள் மனைவிக்குக் குழந்தை பிறந்துவிட்டது. ஆனால் மற்ற குழந்தைகளைப்போல் பிறந்தவுடன் அழாமல், வழக்கத்திற்கு விரோதமாக வாயை மூடிக்கொண்டிருக்கிறது" என்றாள்.

பதறிப்போன பாடகர் அறைக்குள் ஓடினார். கவலையோடு குழந்தையைப் பார்த்தார். தந்தையைப் பார்த்ததும்குழந்தை சட்டென்று வாயைத் திறந்தது. "குழந்தை அழப்போகிறது" என்று எல்லாரும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். வாயைத் திறந்த குழந்தை, "சல்தே... சல்தே... மேரே ஏஹி கியாதரத்து... கபி அல்வித்தா நா செஹ்னா.." என்று ஆரம்பித்து இரண்டு வரி பாடிவிட்டு மீண்டும் வாயை மூடிக்கொண்டது.

1955-ம் ஆண்டு. இப்போது போலவே தமிழகத்தில் வெள்ளமும் புயலும் தங்கள் கோர தாண்டவங்களை ஆடி மக்களைக் கதிகலங்க வைத்த நேரம் அது. வெள்ளம் விளைத்த வேதனைக் கதைகளை உள்ளம் உருக விவரிக்கும் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன.

அப்படி வந்த ஒரு கடிதமே இச்சிறுகதை—ஆனால் கற்பனை. 1955-இல் தமிழ் முரசில் எழுதப் பட்டது.

புயல்

முருகு சுப்பிரமணியன்

தம்பி ராமையாவுக்கு,

வீட்டில் அம்மா, அப்பா, தங்கை அனைவரும் நலமே இருக்கிறோம். உன்னுடைய நலம் தெரிந்துகொள்ளப் பெரிதும் ஆவல். உடனே கடிதம்போடு.

பயங்கர வெள்ளம், கோரப் புயல், பொங்கியெழுந்து ஊருக்குள் புகுந்த கடல் இத்தனை ஆபத்துக்களிலும் மீண்டும் உனக்குக் கடிதம் எழுத முடியுமென்று நான் நினைக்கவே இல்லை.

எப்படியோ தப்பித்துவிட்டோம்; நம் குடும்பத்தில் எல்லோருக்கும் உயிர் "கெட்டி" என்றுதான் சொல்லவேண்டும். அந்த ஆவேசக் கடல் என்னிடம் கருணையோடு நடந்து கொண்டது என்றுதான் நினைக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் கவலைப்பட்டுக் கொண்டிருந்திருப்பாய். கடலுக்குப் பலியானவர்கள் நூற்றுக்கணக்கான உப்பளத்தொழிலாளர்கள் என்னும் செய்தியைப் படித்ததும் உன் மனம் ஒரு நிலையில் இருந்திருக்காது. தம்பி, யார் செய்த புண்ணியமோ நான் உயிரோடு இருக்கிறேன்.

அண்ணனைச் சாவு தழுவவில்லையென்று அறிந்ததும் நிம்மதியாகப் பெருமூச்சு விடுவாய். நம் வீடு வாசல், நிலங்கரை, ஆடு மாடு நிலை என்னவென்று அறிய அடுத்து உனக்கு ஆவல் பிறக்கும். அதனையெல்லாம் விளக்கமாக வரைந்து கடல் கடந்து மலாயா நாட்டுக்குப் பிழைக்கச் சென்றிருக்கும் உன் மனத்தைக் குழப்ப எண்ணவில்லை. நாங்கள் பிழைத்துவிட்டோம் என்பது போதாதா! அந்த ஒரு சேதியைக் கொம்புத் தேன் முடவனுக்குக்கிட்டியதென்று கருதி மகிழ்ச்சி கொள்.

கடிதத்தை வளர்க்க எனக்கு விருப்பமில்லை. எனினும் மற்றொரு சோகச் செய்தியை உனக்குத் தெரிவிக்காமல் திரைபோட என்னால் முடியாது. அடுத்த வீட்டு மாடசாமி அண்ணனைத் தெரியுமல்லவா உனக்கு? தம்பி, எப்படிச் சொல்வேன்? மாடசாமி அண்ணன் கடலுக்குப் பலியாகிவிட்டார். அந்தக் கோரக் காட்சியை என் இரு கண்களாலும் பார்த்தேன்.

அந்தப் பயங்கரத்தை எப்படி வர்ணிப்பேன்! இப்போது அது ஏதோ கனவுபோல் தோன்றுகிறது. புயல், வெள்ளம், மழையெல்லாம் நின்று இப்போது வானம் விட்டெரிக்கிறது. அன்று சீறியெழுந்த கடல் இன்று ஏதும் அறியாத அப்பாவிபோல் பாட்டிசைத்துக் கொண்டிருக்கிறது. பாட்டென்று சொன்னேன்? ஐயோ, பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாயின் புலம்பலையே அந்தக் கடலிரைச்சலில் நான் கேட்கிறேன்.

வெள்ளிக்கிழமை காலையில் வழக்கம்போல் நானும் மாடசாமி அண்ணனும் வேலைக்குப் போனோம்.

வேதாரண்யம் உப்பளப் பிரதேசம்தான் உனக்குத் தெரியுமே! உப்பு விளைவிக்கின்ற பணியிலே ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருந்தோம். கண்ணுக்கு எட்டிய மட்டும் உப்பு வயல்கள். பாத்தி பிடித்திருப்பது தூரத்திலிருந்து பார்த்தால் சொக்கட்டான் கட்டம் போலத் தோன்றும்.

உப்புப் போட்டுச் சாப்பிட்டால்தான் மனிதனுக்கு ரோஷமிருக்கும் என்பார்கள். மனிதனுக்கு மானம் உயிரினும் பெரிதல்லவா? அந்த மான உணர்ச்சியை ஊட்டுகிற உப்பு எங்கள் உழைப்பில் விளைகிறதென்பதில் நான் எப்போதும் பெருமை பாராட்டுவேன். இந்தக் கதையெல்லாம் இப்போது ஏன்?

அன்று கடலிலிருந்து நீரைப் பாய்ச்சும் வேலையில் நாங்கள் முனைந்திருந்தோம்.

பக்கத்து உப்பளத்தில் மாடசாமி கருமமே கண்ணாயிருந்தார்.

வானம் காலையிலேயே மப்புத் தட்டியிருந்தது. காற்று ஜில்லென்று விசிக்கொண்டிருந்தது.

திடீரென வானம் கறுத்தது; செவிடுபடும் இடி முழக்கம்; பேய் மழை விழத்தொடங்கியது. அது மட்டுமா? "ஊழிக்காற்று" என்று பாரதி பாடியிருக்கும் கவிதை படித்திருப்பாய். அந்த ஊழிக் காற்றின் கோர நர்த்தனத்தை அன்றுதான் கண்டேன். ஆயிரம் மலைப்பாம்புகள் ஒன்றாக நின்று சீறினால் எப்படியிருக்கும்? அவ்வளவு வேகமாக அடித்தது புயல். அதுவரை அமைதியாகவிருந்த கடல் பொங்கியெழுந்தது. கடல், வானம், பூமி முதலியவை தருமத்திற்குக் கட்டுப்பட்டு நிற்கின்றன என்பது பெரியவர்கள் நம்பிக்கை.

தருமத்தை மீறத் துணிந்து விட்டது சமுத்திரம்! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அது கடைப்பிடித்து வந்த பொறுமையெல்லாம் தூள் தூளாகியது.

பிரளயம் வந்து ஒரு காலத்தில் உலகம் முழுவதும் அழிந்துவிடும் என்பார்கள். அந்தப் பிரளயம் தான் வந்துவிட்டதென்று நினைத்தேன்.

கடற்கரையோரமாகவே பரம்பரையாக வாழ்பவர்கள் நாம். பிள்ளைப்பருவத்திலே நாம் கடலோரத்தில் சிப்பிகள் பொறுக்கியதும் மணல் வீடு கட்டியதும் உனக்கு நினைவிருக்கும். அப்பொழுதெல்லாம் மணிக்கணக்கில் நாம் கடலில் நின்றிருக்கிறோம்.

நம்முடைய சின்னஞ்சிறு பாதங்களை நுரைமுகம் காட்டிவரும் அலை அன்பாகத் தடவிச் செல்லும். பிள்ளையைப் படுக்கையிலிட்டுத் தாய், முதுகை வருடிக் கொடுத்தால் எத்தனை இன்பமாக இருக்கும்!

அந்த இன்பத்தை நாளெல்லாம் அளித்து வந்த கடல்தானா அன்று நான் கண்ட கடல்? என்னால் நம்பவே முடியவில்லை.

வானத்தைத் தொட்டுவிடும் பேராசை போலும் கடல்மங்கைக்கு! தலையை அண்ணாந்து பார்க்கும் உயரத்திற்கு அவள் பொங்கியெழுந்தாள். ஒரே கோர இரைச்சல்; மரணத்தையும் அழிவையும் ஏந்தி வரும் பயங்கர இடியோசை.

தலைக்குமேல் கல்போல் விழும் மழை; ஆளைச் சுழல வைக்கும் பேய்க் காற்று; "ஆ"வென வாயைப் பிளந்துவரும் அலைகடல். உப்பளத்தில் நாங்கள்.

கால்களுக்குச் சக்தியிருந்த மட்டில் ஓடினோம். மரணத்தைக் கண்டு நாங்கள் எவ்வளவு பயந்துவிட்டோம்! மனிதனுக்குத் தன் உயிரில் எத்துணை ஆசை இருக்கிறதென்பது அன்றுதான் விளங்கியது. அண்ணாவது தம்பியாவது? யாரை யார் பார்த்தார்கள்! ஆளுக்கொரு பக்கம் கண்ணிற்குப்பட்ட திசையில் பறந்தோம்.

துரத்திவந்த கடலுக்கு அந்த வேகம் எங்கிருந்துதான் வந்ததோ? அசுரவேகம். சமுத்திரத்தின் ஆவேசத்தின் முன்பு சாதாரண மனிதன் எம்மாத்திரம்!

எங்களை மூந்திக்கொண்டது கடல். ஊரெல்லாம் வெள்ளக்காடு. வீடுகளெல்லாம் கடலில் மிதக்கும் தீவுகளாயின. எதுவும் மிஞ்சவில்லை. ஆடு மாடு, தட்டுமுட்டுச் சாமான், பயிர் பச்சை, மரம் செடி அத்தனையும் வெள்ளத்தில் கலந்தன.

நல்ல வேளையாகக் கடற் பெண்ணாளின் கரத்திற்கு எட்டாத உயரத்தில் ஒரு குன்று இருந்தது. அந்தக் குன்று அடைக்கலம் தந்தது எங்களுக்கு.

குன்றில் போய் நின்ற பிறகே எனக்குச் சரியாக மூச்சுவிட முடிந்தது. என் உடம்பையெல்லாம் தடவிப் பார்த்துக்கொண்டேன். உணர்ச்சியே இல்லை. மரத்துவிட்டிருந்தது. என்னைச் சுற்றி இரண்டாயிரம் பேருக்கு மேல் இருக்கும். ஒரே கும்பல். அவர்கள் எல்லாம் பிரளயத்திலிருந்து தப்பியவர்கள்; போகிறார்கள், இந்தப் பூவுலகில் வாழட்டுமென்று சமுத்திரா தேவி தயை காட்டியிருந்தாள் அவர்களுக்கு.

தங்கள் உயிர் பத்திரமென்று தெரிந்தவுடன் தங்களுக்கு வேண்டியவர்களெல்லாம் தப்பி வந்துவிட்டார்களா என்று சரிபார்க்கத் தொடங்கினார்கள் அவ்வளவு பேரும்! அங்கே ஜீவமரணப் போராட்டத்தில் ஓய்ந்துபோய்ச் சுய உணர்வின்றிக் கிடந்தவர்களும் முக்கி முனகிக்கொண்டு அரைகுறை நினைவில் மயங்கிக் கிடந்தவர்களும் பலர்.

மாடசாமி அண்ணனை என் கண்கள் தேடின. நின்றுகொண்டிருந்தவர்கள், படுத்திருந்தவர்கள் ஒருவர்பாக்கிவிடாமல் பார்த்தேன். ஐயோ! மாடசாமி அண்ணன் அங்கே இல்லை. ஆம். பொங்கி வந்த கடலுக்கு அவர் இரையாகி விட்டார்! வேலைக்கு வரும்போது இருவராக வந்தோம்; வீடு திரும்பும்போது நான் ஒருவன்.


கடல் வடியும்வரை குன்று எங்களுக்கு அடைக்கலம் தந்தது. வடிந்து வெளியே கால் பாவலாமென்று தோன்றியவுடன் குன்றை விட்டுப் புறப்பட்டேன்.

மாடசாமி அண்ணன் எங்காவது உயிருடன் இருக்கமாட்டாரா என்று எனக்கு ஒரு நப்பாசை. வெள்ளக்கழியில் அங்குமிங்கும் தேடினேன். கண்ணிற்பட்ட பிணங்களையெல்லாம் உற்றுப்பார்த்தேன். கோரைப் புற்களுக்கிடையில் சிக்கிக்கொண்டு கிடந்தார், நம் அருமை அண்ணன். உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். பனிக்கட்டி போன்று ஜில்லிட்டது மூக்கில் கைவைத்துப் பார்த்தேன். மூச்சு வரவில்லை. உடம்பை அசைத்துப் பார்த்தேன். அவர் உயிர் போயிருக்கக்கூடாதென்னும் ஆசையில் இப்படியெல்லாம் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டேன். என்ன செய்தும் பலனில்லை! அவர் செத்துவிட்டார்!

உடனே அவர் வீட்டு நினைவு எனக்கு வந்தது. அவர் மனைவியும் குழந்தையும் எப்படி இருக்கிறார்களோ? அவர்களுக்குப் போய்ச் சேதியை எப்படிச் சொல்வது?

வெளியே புயல் ஓய்ந்துவிட்டது; வானம் வெளிவாங்கிவிட்டது; சமுத்திரம் சாதுவாக அடங்கிவிட்டது. ஆனால் என் உள்ளத்தில் பெரும் புயல்!

"வேலைக்கு இட்டுச் சென்ற அண்ணனைப் பிணமாக விட்டு வருகிறேன்" என்று அண்ணியிடம் சொல்வதா? அவர்கள் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? சொந்த உயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டான்; அண்ணனை மாளவிட்டான் கயவன் என்று அவர்கள் எண்ணமாட்டார்களா?



மாடசாமி அண்ணன் பிணமாகக் கிடந்தார்; நான் நடமாடும் பிணமாக ஊரை நோக்கி நகர்ந்தேன்.

மாடசாமி அண்ணனுக்குக் கல்யாணமாகி ஒரு வருடம்தான் இருக்கும். தங்கச் சிலைபோன்ற புது மனைவி, ஒரு மாதத்திற்கு முன் பிறந்த பச்சைக் குழந்தை - இவர்களைத் தவிக்கவிட்டுக் கண்ணை மூடி விட்டார் அவர்.

தம்பி, நம் வீட்டைப் பற்றி, நம் அப்பா, அம்மா யாரையும் பற்றிக்கூட நான் அவ்வளவு கவலைப் படவில்லை. பக்கத்து வீட்டுக்கு மரண ஓலை எடுத்துச் செல்லும் நிலையிலா நான் விடப்படவேண்டும்? என்னையும் பாழும் வெள்ளம் இழுத்துச் சென்றிருக்கக்கூடாதா? நான் ஏன் உயிர் பிழைத்தேன்?

உள்ளத்தில் பயங்கர அமளி! அமைதி கண்ணுக்குக்கூடத் தெரியவில்லை.

எப்படியோ நம் ஊருக்கு வந்து சேர்ந்தேன். என்னையறியாமல் மாடசாமி அண்ணன் வீட்டுக்கு என் கால்கள் நடந்தன.

அங்கே நான் கண்ட காட்சி! வீடு இடிந்து கிடந்தது. சுற்றிலும் இடிபாடுகள். ஆள் அரவமே இல்லை.

அண்ணியும் குழந்தையும் எங்கே போனார்கள்? ஒருவேளை அவர்களையும் ஊழிக்காற்று சூறையாடிவிட்டதா? அப்படி நினைக்கவும் முடியவில்லை எனக்கு. செய்வதறியாது திக்பிரமை பிடித்தவன் போல் வீட்டைப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

அங்கு அப்படி எவ்வளவு நேரம் நின்றிருப்பேனோ! நம் தங்கை வந்து 'அண்ணா' என்று கூப்பிட்ட பிறகுதான் திரும்பிப் பார்த்தேன். கருவாட்டுக்கடையில் ரோஜாவின் நறுமணம் வீசியது போன்றிருந்தது. அவளை அங்கே கண்டது. அப்படியே கட்டித் தழுவிக் கொண்டேன். "அண்ணி, பிள்ளையெல்லாம் எங்கே கமலம்?" என்று உடனே கேள்வி போட்டேன் கமலம் பதில் சொல்லவில்லை. கண்களைத் துடைத்துக் கொ.. டாள்.

"அவர்களும் செத்துவிட்டார்களா கமலம்?" என்றேன் ஆவேசத்தோடு.

"ஆம், அண்ணா! வீடு இடிந்ததில் குழந்தையும், அண்ணியும் நசுங்கிச் செத்துவிட்டார்கள். இப்பொழுதுதான் அதிகாரிகள் சவங்களை எடுத்துச் செல்கிறார்கள்"- கமலம் தேம்பியபடி சொன்னாள்.

நான் வான வெளியை அண்ணாந்து பார்த்தேன்.

"மாடசாமி அண்ணன் எங்கே அண்ணா?"- கமலம் கேட்டாள்.

"கமலம், அவரையும் சமுத்திரா தேவி அழைத்துக் கொண்டாள்" என்று அமைதியாகச் சொன்னேன்.

வாழ்வில் இணைபிரியாத அவர்கள் சாவிலும் ஒன்றுபட்டனர் போலும்!

மூன்று உயிர்களின் மரணப் பிணைப்பு என்னைப் பிரமிக்க வைத்து விட்டது. அந்தத் திக்கை நோக்கி நானும் கமலமும் கையெடுத்துக் கும்பிட்டோம்.

தம்பி, இது வேதாரண்ய அழிவில் ஒரு சிறு அத்தியாயம்தான். செத்தவர்களின் கதைகளையெல்லாம் எழுதுவதென்றால் அது மகாபாரதமாகிவிடும்.

அப்புறம் என்ன?

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்னும் நம்பிக்கையோடு இருந்து வருகிறோம். என்னோடு உடன் பிறந்த உனக்கும் அந்த மனவலிமை நிச்சயம் இருக்கும்.

உன் அன்பு அண்ணன்,
கருப்பையா

நாடக விமர்சனம்

ஐந்தடியில் ஓர் உலகம்

அண்மையில் தேவான் பகாசா மண்டபத்தில் அரங்கேறிய "ஐந்தடியில் ஓர் உலகம்" நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது நமது சிந்தனை சிறகடித்துப் பறந்து, தலைநகர் சென்ட்ரல் மார்க்கெட்டின் குப்பைத் தொட்டிகளை மொய்க்கும் நம் தமிழர் கூட்டத்தையும், மார்க்கெட்டைச் சுற்றியுள்ள கடைத்தெருவின் ஐந்தடியில் குடும்பம் நடத்தும் நம் மக்களின் அவல நிலையையும், ஒரு துண்டு எலும்புக்காக இனத்தை இனமே கடித்துக் குதறும் ஞமலிகள்போல் அமளி துமளி பட்டுக்கொண்டிருக்கும் தெருச் சண்டைகளையும் நோட்டமிட்டுத் திரும்பும்.

ஏனெனில் கதை இந்தக் கருவை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. என்றாலும் ஊடே இன்னொரு கதையும் புகுந்து பிரதான கதையோடும் ஒட்டாமல், நம் நினைவிலும் ஒட்டாமல் போய் விடுகிறது.

உரையாடல்கள் பழைய பாணியில் அமைந்திருந்தாலும் பல நல்ல சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. முடிவில், சமூகப் பிரச்சனைகளான சிவப்பு அடையாளக்கார்டு, தோட்டப்புறப் பெண்கள் கடத்திவரப் பட்டுச் சிவப்பு விளக்குச் சந்தை [illegible]

கள் - இவற்றைக் கவனித்து நடவடிக்கை எடுக்கும்படி தலைவர்களிடம் பிரச்சினைகள் விடப்படுகின்றன. நம் தலைவர்களுக்கு நம் சமூகப் பிரச்னைகளை நாம் சொல்லித்தான் தெரியவேண்டும் என்கிற நிலை இருப்பது பரிதாபகரமானதுதான்!

கதையைத் திரு. ப. கு. சண்முகம் எழுதியருக்கிறார். திரு. ஏ. எம். ராம் நாடகத்தை இயக்கியிருக்கிறார். திரு. கே. சேகரன் தயாரித்து அளித்த இந்த ஐந்தடியில் ஓர் உலகத்தில், கதை மாந்தர்களாக உலாவிய கலைஞர்கள் அனைவரும் நன்றாக உழைத்துத் தங்கள் நடிப்பை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக பிச்சைக்காரராக வரும் ஜெயபாலன் தோற்றம், ஒப்பனை, நடிப்பு யாவும் பாத்திரத்தோடு பாத்திரமாக ஒன்றிவிட்டன. காட்சிக்குக் காட்சி நடப்புப் பிரச்சினைகளோடு தன் கடந்தகால கதையையும் உரையாடல் மூலம் வெளிப்படுத்தியது நல்ல உத்தி.

நகைச்சுவை வழங்கிய கதிர்வேலு தன் பண்பட்ட நடிப்பால் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தார்.

திருமதி சுந்தரி, குமாரி தெய்வானை ஆகியோரின் நடிப்பு உண்மையிலேயே அபாரம். தரமான நடிகைகள் நம் நாட்டில் உருவாகிவருவது கண்டு நாம் பெருமைப்படலாம். தரமான நடிப்பால் நம் நினைவில் நிற்கிறார்கள்.

நாடக இயக்குநருக்கு பட்டம் வழங்கியது மிகச் சாதாரணமாக அமைந்து, அது நாடகத்துள் ஒரு நாடகமாக அமைந்துவிட்டது.

திரு. மழைவண்ணனும் குமாரி தெய்வானையும் பாடிய இருகுரலிசை ரசிக்கும்படி அமைந்திருந்தது.

வெகுநாட்களுக்குப் பிறகு முழு நீள நாடகத்தைக் காணும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். நம் நாட்டுக் கலைஞர்கள் இந்த நாடகத்தைத் தங்களுக்குள்ள சொற்ப வசதிகளுக்கொப்ப வஞ்சகமில்லாமல் படைத்திருக்கிறார்கள்.

அண்மையில் தேவான் பகாசாவில் நடைபெற்ற தமிழக நாடகக் குழுக்களுக்குத் தரப்படாத அமோக ஆதரவை நம் நாட்டு ரசிகர்கள் இந்த நாடகத்துக்கு வழங்கியது பெருமைக்குரிய செய்திதான். ரசிகர்களின் இந்த ஆதரவை உரமாக்கிக்கொண்டு திரு. சேகரன் போன்றோர் மேன்மேலும் நல்ல பல நாடகங்களை உருவாக்கி நாடகத் துறையில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தினால் நமது நாடகக் கலை நல்ல வளர்ச்சியைக் காணும்.

-சோ. பரஞ்சோதி

தனக்குத் தெரிந்ததில் பாதியைச் சொல்லிக் கொடுப்பவர் ஆசிரியர். அவர் சொல்லிக் கொடுப்பதில் பாதியைப் புரிந்துகொள்பவன் மாணவன்.

—ஒரு மேல் நாட்டு அறிஞர்

சி. சரசா, ரெங்கம், ஜோகூர்

தக்க தருணத்திலே...

திபாவளிச் சிறப்பிதழின் தலையங்கத்தில், தீபாவளிக்கு இரண்டு நாள் விடுமுறை கொடுப்பது பற்றியும் அதன் அவசியத்தையும் எடுத்துக்கூறியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. புதிய சமுதாயத்தின் குரல், இந்திய சமூகத்தின் குரலாக அரசாங்கத்தில் ஒலித்து, வரும் ஆண்டில் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் என நம்புகிறேன்.

தைப்பிங் — எஸ். டி. சிகாமணி

குறைந்து விட்டதே!

தமிழறிவுப் போட்டி" நல்ல முறையில் அமைந்துள்ளது; ஆனால் தரம் குறைந்து விட்டதே!

மோரிப் — கே. பெருமாள்

ஆற்றில் போட்டாலும்...

"விலை ஏற்றமா?" என்ற கட்டுரை, எப்படிச் சேமிக்கவேண்டும் என்னும் படிப்பினையைச் செலவாளிகளுக்குப் புகட்டி இருக்கும் என்று நம்புகிறேன்.

புக்கிட் சிடிங் தோட்டம், — எஸ். விஜய். விஜிதாஸ்

வழிகாட்டி

வர்த்தகப் பெருமகனார் திரு. வீ. கே. கல்யாணசுந்தரம் அவர்களின் வாழ்க்கை வரலாறு, வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருந்தது.

கடந்த இரண்டு இதழ்களிலும் இலக்கிய அரங்கம் இடம் பெறாதது ஒரு குறையே.

தித்தி சேரோங், பாரிட் புந்தார் — கே. முருகையா

சுருங்கச் சொல்லி...

புதிய சமுதாயத்தில் தொடர்ந்து இடம் பெற்றுவந்த 'மலேசியமொழித் தேர்வில் வெற்றிபெற...' என்ற க்கட்டுரைத்தொடர் சுருக்கமாக, சிறப்பாக இருந்தது. எஸ்.பி.எம். எம். சி. இ. மாணவர்களுக்கு நன்கு பயன்பட்டிருக்கும் என்பது உறுதி.

ஹைலண்ட்ஸ் தோட்டம், கிள்ளான் — சி. ப. செல்லையா

அந்த அவசியம்

ஹாங்காங்கிலிருந்து கோலாலம்பூர் வந்து தங்கியிருந்த சமயம், புதிய சமுதாயத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் அமைப்பும் அழகும் எங்களை உள்ளம் பூரிக்கச் செய்தது. வருங்காலத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ்ச் சஞ்சிகைகளுக்குத் தமிழ்நாட்டை எதிர்பார்த்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதற்கு ஓர் அத்தாட்சியாக இதழ் திகழ்கிறது.

சிங்கப்பூர் — இபுதினுஸ் (மற்றும் நண்பர்கள்)

உண்மைதான்!

"வீடே உலகம்" என்பதைப் படித்துவிட்டு ஒருசில நிமிடங்கள் யோசித்தேன். வீடே உலகம் என்பது உண்தான் என்று தெளிவாயிற்று.

கம்போங் லாவுட், ஸ்கூடாய் — ஆர். லோகநாதன்

காணோமே!

ஆசிரியரின் திருக்குறள் விளக்கமும் இலக்கிய அரங்கமும் சுவையூட்டுவனவாக உள்ளன. தீபாவளி மலரில் திருக்குறள் விளக்கக் கட்டுரை இடம்பெறாதது பெரும் குறையே. இப்பகுதியை நிறுத்திவிடாதீர்கள்.

சா' ஆ, ஜோகூர் — அந்தோசின்

வடிகால்கள்

"வடிகால்கள்" சிறுகதை சிறப்பாய் இருந்தது.

சுங்கை கஹூர்ங் தோட்டம், குளுவாங் — து. கேசவன்


வாழ்த்துகிறோம்

வண்ண அட்டைப்படத்தோடு வெளிவரும் புதிய சமுதாயத்தில் எல்லா வாசகர்களுக்கும் தேவையான, தேடிப்படிக்கவேண்டிய பகுதிகள் உள்ளன. இலக்கியம், சமய விளக்கம், தொடர்கதைகள் போன்றவை நிரம்பி இருப்பதால் சுவாரசியமாகப் படிக்க இதமான பத்திரிகையாக விளங்குகிறது.

இன்றைய சூழ்நிலையில் அறிவு, அறிவியல் வளர்ச்சி முதலியவற்றைப் பத்திரிகை, தொலைக்காட்சி மூலம் தான் பரப்ப முடியும். பள்ளிப்படிப்பு அதிகமாக உபயோகமில்லாமல் போகிறது. பொதுஅறிவு வளர்ச்சிக்குப் பத்திரிகைகளே மிக முக்கியப் பங்கேற்கவேண்டும்.

மலேசியாவில் திங்கள் இருமுறை வெளிவரும் இப்பத்திரிகை, சிறப்பாகவும் தரமாகவும் இருப்பதறிந்து வியந்து வாழ்த்துகிறோம். அந்த அளவில் தொடர்ந்து பணிபுரிய நல்வாழ்த்துக்கள்.

சென்னை — ஜே. ஜி. கண்ணப்பன்
(சென்னை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்)




''கொசுமருந்து இருக்கிறதா?" என்று கடைக்காரரிடம் ஒருவர் கேட்டார்.

"ஏன், கொசுவுக்கு உடல்நிலை சரியில்லையா?" என்றார் கடைக்கு வந்திருந்த மற்றொருவர்.

—"உண்மைச்சம்பவம்"

ஏ. எஸ். ரவிப்பெருமாள்,
குக்கூப் தோட்டம்



'மாங்கனி'

கனவுகள் பலகோடி

29. 'கனவுதான் பலிக்குமா?'

இந்துமதியின் இதயம் வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது. தங்கள் அருமைப் பெண் வனிதாவின் மகிழ்ச்சியை அடியோடு சிதைத்து விட்டோமே, இனி காலம் முழுதும் அவள் இப்படியே இருந்து விடுவாளோ? அல்லது அவளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற திகில் அவளை வாட்டத் தொடங்கிவிட்டது.

மகளின் நிலையைக் காண நெஞ்சம் நெகிழ்ந்துருகியது. ஆனாலும் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

தன் கணவர் சொல்வதுபோல் கள்ளங்கபடமற்ற சின்னக் குழந்தை அவள்! அவளது மனத்தையும் அறிவையும் கெடுத்துப் படிப்பைப் பாழாக்கிய அயோக்கியன், எதிர்கால வாழ்க்கையோடும் விளையாடி விட்டானே...!

எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று கற்பனைக் கோட்டை கட்டிக் கனவு கண்டு கொண்டிருந்தவளின் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டானே! வானளாவ எழுந்த மாளிகையை இடித்துத் தூளாக்கி விட்டானே அந்த கோபி என்று பெற்றமனம் புலம்பத் தொடங்கிற்று.

வனிதாவின் தந்தையோ இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு தீவிரமாகச் செயலில் மூழ்கியிருந்தார்.

மகளின் நிலையைக் காணும் போது ஒரு விநாடி அவர் நெஞ்சமும் கலங்கித் [illegible]கவே செய்தது. ஆனாலும் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளத் தயாராக இல்லை!

எப்படியும் அவளைக் கோபியிடமிருந்து பிரித்துவிட வேண்டும். தங்கள் தகுதிக்கு ஏற்றபடி வாழ வைக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாகவே நின்றார். அதனால் இந்துமதியிடம்கூட கண்டிப்பாகவே நடந்துகொண்டார்.

வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக டெலிபோனைத் தற்காலிகமாக அகற்றிவிட ஏற்பாடு செய்து

யின் போஸ்ட்மாஸ்டரான நண்பரைக்கண்டு வனிதாவின் பெயருக்கு வரும் கடிதங்களை அங்கேயே வைத்திருந்து, தன்னிடம் தரவேண்டும் என்று உரிமையோடு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த வட்டாரத்தில் அவருக்கிருந்த செல்வாக்கும் பெரிய அதிகாரிகளின் நட்பும் எல்லா வழியிலும் அவருக்கு அனுகூலமாக அமைந்தது.

சிறகொடிந்த பறவையைப் போல அறைக்குள் சிறையிருந்தாள் செல்லப் பெண் வனிதா!

இரண்டு நாட்களுக்குப் பிறகே சுய உணர்வு வந்தவள்போல் சற்றே தெளிவடைந்த வனிதா, லல்லியோடு எப்படியாவது தொடர்புகொள்ள விரும்பினாள்.

எலிஸபெத்தின் டெலிபோன் எண் அவளிடமிருந்தது. ஆவலோடு ஹாலுக்குச் சென்றபோதுதான் டெலிபோன் அங்கே இல்லை என்ற விஷயமே அவளுக்குத் தெரிய வந்தது.

தந்தை இவ்வளவு முன்னேற்பாடுகள் செய்திருப்பார் என்று அவள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

நெஞ்சில் துளிர்த்த சிறு நம்பிக்கையும் சிதைந்துவிட்ட வேதனையோடு தட்டுத்தடுமாறி அறைக்குள் நுழைந்தாள். நெஞ்சு வெடிக்கும்படி விம்மி அழும் அந்த வேதனைக்குரல் இந்துமதியை நிலைகுலைய வைத்தது.

தன் பங்குக்கு அவளும் சேர்ந்து அழ முடிந்ததே தவிர வேறு எதுவும் செய்ய அவளால் முடியவில்லை.

தந்தையிடமும் தாயிடமும் ஏற்பட்ட வெறுப்பு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது. அதன் பலன்...?

அவளது தந்தை அவளை மேல் படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பச் செய்திருந்த ஏற்பாடுகள் அத்தனையும் வீணாயிற்று. தான் கொண்ட பிடிவாதத்திலிருந்து இம்மியளவுகூட அசையாமல் கற்சிலையைப்போல அறைக்குள்ளேயே அமர்ந்திருந்தாள்.

தந்தையின் அதட்டலோ

செய்ய முடியவில்லை. தாயின் கண்ணீரால்கூட அவளது சித்தம் கரையவில்லை.

அவள் பிடிவாதமும் நாளுக்கு நாள் வளர்ந்தது!

மகள் படித்துப் பட்டம் பெற விட்டாலும் பரவாயில்லை. தங்களை விட்டுப் பிரிந்துபோகாமல் இருந்தாலே போதும் என்ற அளவுக்கு இந்துமதியின் நிலை மாற்றம் கண்டு விட்டது.

மகளைத் தங்கள் வழிக்குக் கொண்டு வருவதில் ஏமாற்றம் கொண்ட இந்துமதி, கணவரைச் சமாதானப்படுத்துவதில் திரும்பி இருந்தாள்.

நாட்கள் யாருக்காகவும் நிற்கவில்லை!

வனிதா தன் நிலையை விளக்கி நீண்ட கடிதமொன்றை லல்லிக்கு எழுதியனுப்பி வைத்திருந்தாள். கோபிக்கும் எழுதினாள்! இறுதியாக எலிசபெத்துக்கும் எழுதினாள். யாரிடமிருந்தும் பதில் வரவில்லை!

வனிதாவுக்குக் காரணம் என்ன என்று புரிந்து விட்டது!

தன் தந்தையின் முன்னேற்பாட்டினால்தான் கடிதங்கள் தனக்கு வந்து சேரவில்லை என்பது தெளிவாகிய பிறகும் கடிதம் எழுதிப் பயன் என்ன? தனக்கிருந்த இரண்டாவது நம்பிக்கையும் சிதறிய பின் வனிதா நடைப்பிணம்போல் மாறி விட்டாள்.

ஆனால் அவளுடைய வைராக்கியம் மட்டும் மேலும் இறுகியது. தன் தந்தையின் விருப்பத்திற்கு மட்டும் இனி இணங்கப்போவதில்லை என்பதில் உறுதியாக நின்றாள்.

எப்படியும் கோபியைப் பார்த்துத் தனது நிலையைக் கூறிவிட வேண்டும் அல்லது லல்லியிடமாவது தன் இதயக் குமுறலைக் கொட்டித் தீர்க்க வேண்டும் என்ற ஒரே ஓர் ஆவல் மட்டுமே அவள் இதயத்தில் விசுவரூபம் எடுத்துக் கொண்டிருந்தது.

"உன்னை நான் முதன் முதலில் சந்தித்ததே ஓர் இனிய கனவுபோல் நெஞ்சில் நிலைத்துவிட்டது வனிதா" என்று கோபி கூறிய அந்த இனிய மொழிகள் அவள் உள்ளம் முழுதும்

இருப்பதுபோல ஒரு பிரமை! அந்த இனிமை, கனவுபோலவே கலைந்துவிடுமோ என்ற அச்சம் அவளை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்தது.

ஏதாவது உடனடியாகச் செய்தாக வேண்டும் என்று உடலும் உள்ளமும் துடித்தன.

ஆனால் சூழ்நிலை அவளைக் கைதியாக்கிக் காவல் வைத்திருக்கும் போது அவளால் என்ன செய்ய முடியும்?

மகள் படும் வேதனையைக் கண்டு நெஞ்சம் பொறுக்காத இந்துமதி, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள்! "நடப்பது நடக்கட்டும், வனிதாவின் இறுதியான முடிவு என்ன என்பதைக் கேட்டு அவள் விருப்பப்படியே விட்டுவிடுவதுதான் சரி! இல்லாவிடில் தங்களை மீளாத துயரில் மூழ்கவைத்துவிட்டு, இந்த உலகத்தை விட்டே போய் விடுவாளோ" என்ற திகில் அவளது தாயுள்ளத்தைப் பிறிந்தெடுத்தது.

மகளைவிட குடும்ப கௌரவமே பெரிது என்று நினைத்து இதயத்தை இரும்பாக்கிக் கொண்டிருக்கும் தந்தை! பெற்றோரைவிட தனது காதலே பெரிதென்று பிடிவாதத்தோடு நலிந்து கொண்டிருக்கும் மகள்!

இருவருக்கிடையே அலைமோதும் தனது பரிதாப நிலை! இவற்றை விளக்கக் கூடிய விரைவில் நேரில் வந்து வனிதாவுக்கு ஆறுதல் சொல்லவேண்டும் என்று நெஞ்சுருகும்படி ஒரு கடிதத்தை எழுதி அன்றே லல்லிக்கு அனுப்பி வைத்த பிறகுதான் இந்துமதிக்குப் பாதி உயிர் திரும்பியதுபோல மூச்சு விட முடிந்தது.

லல்லியின் வரவு நிச்சயம் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தாள் அந்த அன்னை!

30. 'கலைந்திடும் கனவுகள் எத்தனையோ?'

வனிதாவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை! பிரமை பிடித்தவள்போல அப்படியே நின்றாள்.

கனவுகளிலேயே காலங் கழித்து வரும் தான், இப்படியும் ஒரு கனவு காண்கிறோமோ என்று கூட நினைத்துப் பார்த்தாள்.

"வனிதா" என்று ஓடிவந்து இறுக அணைத்துக்கொண்ட லல்லியின் உடல் ஸ்பரிசம்தான், அது "உண்மை, உண்மை" என்று அவள் உணர்வுகளுக்கு உணர்த்தியது.

தாயைக் காணாமல், கேட்கவும் தெரியாமல் ஏங்கிக் கொண்டிருந்த பச்சைக்குழந்தை, திடீரென்று தன் முன்னே நிற்கும் தாயைக்கண்டதும் விக்கிவிக்கி அழுவதுபோல இருந்தது வனிதாவின் நிலை!

அவளால் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை! லல்லியைக் கண்ட ஆனந்தத்தில் சிரிக்கக்கூட முடியாமல் தேம்பித்தேம்பி அழுதாள்.

சில விநாடிகள் மெய்மறந்து நின்ற இந்துமதி, அவர்களைத் தனிமையில் விட்டுவிட்டு நகர்ந்து சென்றாள்.

வனிதாவால் பேசவும் முடியவில்லை; என்ன பேசுவது என்றும் தோன்றவில்லை! இமைக்காமல் லல்லியைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் அருவிபோலக் கொட்டிக்கொண்டிருந்தது.

லல்லிக்கும் என்ன பேசுவது என்றே புரியவில்லை!

ஆப்பிள் கன்னமும், ஆரஞ்சு இதழ்களும், திராட்சை விழிகளும் என்று பழங்களாகவே வர்ணித்து மகிழும் அந்த வனிதாவா இப்படி இருக்கிறாள்?

மூன்றே மாதப் பிரிவுக்குள் இப்படி என்றால், மீதமுள்ள நாட்களில் அல்லது முழுமையான பிரிவு இவளை எப்படி வைத்திருக்கும்?

அதை நினைக்கும்போதே நெஞ்சம் நடுங்கியது.

வனிதாவின் அன்னை அவ்வளவு அவசரமாகக் கடிதம் எழுதியதன் காரணம் அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது!

மகளின் இந்த நிலையைக் கண்ட பிறகும் மனம் மாறாத தந்தை, இனிமேல்தானா மாறப்போகிறார்? அல்லது அவர்களை மகிழ்ச்சியாகத்தான் வாழவிடப் போகிறாரா?

கோபி மனம் உடைந்து போனதன் காரணமும் அவளுக்குப் புரிந்துவிட்டது!





இவ்வளவு பெரிய வசதியான வாழ்வில், செல்வச் செழிப்போடு வாழும் வனிதாவைச் சாதாரண நிலையில் கூட வாழவைக்க முடியாதபடி காலம் செய்துவிட்ட கோலத்தைச் சென்ற மாதம்தான் கோபி மனந்திறந்து அவளிடம் கூறினான்.

ஏற்கனவே மிகவும் சாதாரண நிலையில் வாழ்ந்துவந்த பெரிய குடும்பம் கோபியினுடையது. அதில் மூத்த மகனாக அவன் தலையெடுத்த பிறகே கொஞ்சம் தலைதூக்கி நிமிர்ந்து கொண்டிருந்த நிலை. அவனுக்குப் பிறகு ஆறு சகோதர சகோதரிகள். அண்ணனின் நிழலில் தங்களை உயர்த்திக் கொள்ளலாம் என்று மகிழ்ந்தபோது அவன் தந்தை விபத்தில் காலனுக்குப் பலியானார்.

இனிமேல்...! முற்றாக அவனையே நம்பிக்கொண்டு அன்னையும் தம்பி தங்கைகளும் வாழவேண்டும். அவர்களுக்காகவே அவனும் வாழ்ந்தாக வேண்டும்.

இவ்வளவு பெரிய குடும்ப பாரத்தைச் சுமந்துகொண்டு வனிதாவை மகிழ்ச்சியாக வாழவைக்க முடியும் என்று அவன் கனவு காண்பது வேதனைக்குரியது தானே?

தன் நிலையை நன்கு உணர்ந்துவிட்ட கோபி, வனிதாவின் இனிய காதல் கனவுகளைப் பகற்கனவாக்கி வாழவிடாமல் செய்துவிடுவோமோ என்று அஞ்சி நாளுக்கு நாள் நலிந்து கொண்டிருக்கிறான் என்பதை நன்றாகப் புரிந்துகொண்ட பிறகும் அவனை எப்படி வற்புறுத்துவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் லல்லி!

அதே சமயத்தில்தான் இந்துமதியின் கடிதம் கிடைத்தது. புறப்படுவதற்குமுன் அவள் கோபியைச் சந்திக்கத் தவறவில்லை!

வனிதாவுக்கு ஆறுதல் சொல்லி எப்படியாவது தன்னை மறந்துவிடும்படி சொல்லச் சொன்னான். அவளைத் தன் சுயநலத்திற்குப் பலியாக்க விரும்பாமல்தான் விலகிச் செல்கிறான் என்பதை எப்படிக் கூற முடியும்?

வனிதாவின் நிலையோ இன்னும் வேதனைக்குரியதாக இருந்தது. ஏதோ ஒரு நம்பிக்கையோடு புறப்பட்டு வந்த லல்லிக்கு அவளை நேரில் பார்த்த பிறகு என்ன பேசுவது, எப்படிச் சொல்வது என்றே தோன்றாமல் வாயடைத்துப் போய் விட்டது.

நீண்ட நேரமாக அந்த மௌனம் யாராலும் கலைக்கப்படாமல் அப்படியே நகர்ந்து கொண்டிருந்தது.

காப்பி கொண்டுவந்த இந்துமதியும் அந்த மௌன நாடகத்தில் பங்கு பெறுவதுபோல அவர்களோடு அமர்ந்துகொண்டாள்.

சில விநாடிகளுக்குப் பிறகு அவள் லல்லியின் பக்கம் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.

"லல்லி! எனக்கு வனிதாவின் அப்பாவைப்போல் கௌரவமும் பணமும் மட்டும் பெரிதல்ல! என் ஒரே மகளின் வாழ்வும் அவள் மகிழ்ச்சியும்தான் எனக்குத் தேவை! என்னைப் பொறுத்தமட்டில் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்...!" அவள் குரல் தழுதழுத்தது.

வனிதாவின் அன்னை கூறியதைக் கேட்டபோது லல்லிக்கே பெரும் வியப்பாக இருந்தது.

இவ்வளவு சீக்கிரம் தன் அன்னையின் மனம் மாறிவிடும் என்று வனிதாகூட நினைக்கவில்லை! திடீரென்று இதயத்தினுள்ளே நம்பிக்கை மின்னலாகப் பளிச்சிட அம்மாவை ஆவலோடு ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஆமாம் லல்லி! என் ஒரே பெண்ணைப் பறிகொடுத்து விடுவேனோ என்று என் உள்ளம் கலங்கித் துடிக்க ஆரம்பித்துவிட்டது! அவளைப் பிரிந்து என்னால் உயிரோடு இருக்கமுடியாது! என் மகள் எங்கேயாவது மகிழ்ச்சியோடு அவள் விருப்பப்படி வாழ்ந்து கொண்டிருந்தாலே போதும்! அதுபோதும் எனக்கு..." — இந்துமதி வேதனையைத் தாங்கமுடியாமல் விம்மினாள்.

"அம்மா..." என்று பாய்ந்தோடி அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள் வனிதா!

இவ்வளவு நாளும் தந்தையோடு சேர்த்துத் தாயையும் அல்லவா தவறாக எண்ணிவிட்டோம் என்று நினைக்கும்போது அவள் அன்னையின் மீது அளவிடமுடியாத பாசமும் பரிவும் பீரிட்டெழுந்தன.

"அம்மாவின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் அவளையும் நான் வேதனைப்படுத்தி விட்டேனே" என்று தன்னையே நொந்துகொண்டாள்.

தாயும் மகளும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஆறுதல்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது லல்லியின் இதயம் எரிமலையைப் போலக் குமுறிக் கொண்டிருந்தது.

"சின்ன விஷயத்திற்கே துடித்துத் துவண்டுவிடும் இந்த வனிதா, தான் சொல்லப்போகும் விஷயத்தைக் கேட்டு அதிர்ச்சியடையாமல் இருப்பாளா? அவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் வலிமை அவள் உள்ளத்திற்கு உண்டா" என்று தீவிரமாக யோசித்தபடி தயங்கி நின்ற லல்லி, தன்னையே முதலில் திடப்படுத்திக்கொண்டாள்.

"வனிதா! நான் சொல்லப் போகும் விஷயம் உனக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுக்கலாம்; என்றாலும் அதை நான் சொல்லத்தான் வேண்டும்! நீ கோபியை மறந்து விடுவதுதான் நல்லது!"

லல்லி இப்படிக் கூறியதைக் கேட்டதும் சடாரென்று எழுந்து வந்த வனிதா, அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

"லல்லி! நீ என்ன சொல்கிறாய்... ஏன்...ஏன்?"

"கோபிக்குச் சென்ற வாரம் திருமணம் நடந்துவிட்டது...!"

வனிதா அப்படியே திகைத்து நின்றாள். லல்லியைப் பிடித்திருந்த கைகள் நழுவி விழுந்தபோது அவளது பூவுடல் மெல்லச் சரிந்து, தரையில் சுருண்டு விழுந்தது.

(வளரும்)

செலவு மிச்சம்?

கஞ்சத்தனமுள்ள செல்வந்தர் ஒருவர், ஒரு டாக்டரிடம் சென்று "எனக்குத் தலைவலி வந்ததென்றால் மாத்திரை சாப்பிட்டு விடுவேன். சளி பிடித்ததென்றால் பழரசம் குடித்து விடுவேன். வயிற்றை வலித்ததென்றால் பைகார்பொனேட்டைச் சோடாவில் கலந்து அருந்திவிடுவேன். இப்படி நானே வைத்தியம் செய்து கொள்ளுவதால் எனக்கு வைத்தியச் செலவு மிச்சமாகிறது. எப்படி என்னுடைய நடைமுறை?" என்று கேட்டார்.

அதற்கு டாக்டரோ "ரொம்பச் சரி"! என்று கூறிவிட்டு "சரி, என்னுடைய கன்சல்டிங் பீஸ் 50 வெள்ளியை எடும்" என்றார்.

பழைய நூல் ஒன்றிலிருந்து:

ஜி. குணசேகரன்,
பூச்சோங்.

சந்ததி

"உலகம் நம்மை விட்டும் புறமுதுகிட்டுச் செல்லக்கூடியதாக இருக்கிறது. ஆனால் மறுமையோ நம்மை முன்னோக்கி வரக்கூடியதாக உள்ளது. அன்றி, அவ்விரண்டில் ஒவ்வொன்றுக்கும் சந்ததிகள் இருக்கின்றன. எனவே நீங்கள் மறுமையின் சந்ததியினராய் ஆகிவிடுங்கள். உலகின் சந்ததியினராய் ஆகிவிட வேண்டாம். ஏனெனில் இன்று செயலாற்ற வேண்டிய நாளாகும். கணக்குப் பார்க்கும் நாள் அல்ல. ஆனால் நாளையோ (மறுமையோ) கணக்குப் பார்க்கும் நாளாகும். செயலாற்றவேண்டிய தருணமல்ல."

—அல்ஹதீஸ்

உறுதி கொண்ட நெஞ்சங்கள்

பேட்டி: 'முரசன்'

ஒரு சிறு விபத்து நேர்ந்தாலும் உயிரே போய்விட்டது போல் அலறிப் புடைத்துக்கொண்டு, சோர்ந்துபோய் உட்கார்ந்து விடும் நபர்களை இன்று அதிகமாகக்காணப் படுகிறார்கள். இந்த நிலையில் தன் கால் பெருவிரல் பாதிப்புற்ற நேரத்திலும் கொஞ்சமும் கலங்காது தன்னம்பிக்கையை இழக்காது உறுதியான குரலில் பேசும் ஒருவரைக் கண்டு நாம் வியந்து போகிறோம்.

அவர்தான் குமாரி தனலெட்சுமி. இன்றைய பெண்கள் சமூகத்திலிருந்து மிக மிக மாறுபட்ட குணபாவங்களையும், பழக்க வழக்கங்களையும் கொண்டவர். சிலாங்கூரில், உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள "மீனாக்" தோட்டத்தில் வசிக்கும் குமாரி தனலெட்சுமியைக் காணக் கோலாலம்பூர் பெரிய மருத்துவமனைக்குச் சென்றோம். மருத்துவமனைக்கு ஏன்?

இங்குதான் சுவையான பல விஷயங்களைக் கொண்ட ஒரு குடும்பத்தின் கதை ஆரம்பமாகிறது. குமாரி தனலெட்சுமி, மீனாக் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர். 1969இல் சிவப்பு பாஸ்போர்ட் என்னும் அரக்கன் தன் கரங்களை விரித்தபோது, அதில் சிக்கி வேலைகளை இழந்தனர் குமாரி தனலெட்சுமியின் பெற்றோர். தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற மிகவும் சிரமப்பட்டபோது, குடும்பச் சுமையைச் சுமக்க முன்வந்தார் தனலெட்சுமியின் தமக்கையின் கணவர் திரு மணியம். அவரது குடும்பத்தையும் சேர்த்து மொத்தம் பன்னிரண்டு பேர்கள் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையை ஒருவராக ஏற்றார் மணியம்.

தோட்டத்துச் செம்பனைத் தொழிற்சாலையில் வேலைபார்த்துவிட்டு, பின் ஓய்வு நேரங்களில் செம்பனை ஓலைகளை வெட்டும் குத்தகை (கண்டிராக்ட்) பணிகளில் ஈடுபடும் மணியம், தோட்டத்துக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் காலி நிலத்தில்காய்கறிகள்பயிரிட்டும் மாடுகள் வளர்த்தும் தன் வருவாயைப் பெருக்கிக்கொண்டார். வீட்டைச் சுற்றியுள்ள இடத்திலும் காய்கறிகள் பயிரிட்டுத் தனது பெரிய குடும்பத்திற்கெனப் பயன்படுத்தியதுபோக எஞ்சியவற்றை விற்றுவிடுவார்.

இந்த வகையில் ஓயாது உழைத்துத் தன் குடும்பத்தைக் காப்பாற்று வந்த மாமாவுக்கு உதவியாகக் குமாரி தனலெட்சுமியும் தோட்டத் தொழிற்சாலையைச் சார்ந்த நிரந்தரமில்லாத வேலைகளில் ஈடுபட்டு வந்தார்.

தோட்டப்புறப் பெண்மணியான குமாரி தனலெட்சுமி முற்போக்கான எண்ணங்கள் கொண்டவர். "தோட்ட மக்கள் தோட்டத்திலேயே உழன்று வாழக் கூடாது; சொந்த முயற்சியில், நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகியோ அல்லது வேறு வழிகளிலோ முன்னேற்றமடைய வேண்டும்" என்ற திடமான எண்ணம் கொண்டவர் அவர்.

மணியமும் சற்றும் சளைத்தவரல்ல, "நான் வந்து கடந்த ஒன்பது வருசமா இந்தக் குடும்பத்தை ஒருவனா காப்பாத்திவர்றேன். இருந்தாலும் பணம் சேர்த்து தேசியநிலநிதிச் கூட்டுறவுச் சங்கத்திலே பங்குகள் வாங்கியிருக்கேன். தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஒத்துழைப்போடு நடந்துவரும் சிரம்பானிலுள்ள நெசவாலையிலயும் பங்குகள் வாங்கியிருக்கேன். ஒருசமயம் மாடு வித்து கிடைச்ச மூந்நாறு வெள்ளியை, கையில இருந்தா செலவழிஞ்சிடும்னு கருதி பேங் பூரோ என்கிற தொழிலாளர் வங்கியில் போட்டுட்டேன்" என்று 31 வயது இளைஞரான மணியம் கூறும்போது அவரது ஓயாது உழைக்கும் பண்பையறிந்து திகைக்கிறோம்.

இங்க இரு இளம் உழைப்பாளிகளுக்கேற்ற வகையில் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஒரு திட்டத்தை அறிவித்தது அதுதான் கரும்புத் தோட்டத் திட்டம். தோட்டத் தொழிலாளர்கள் சொந்த நிலங்களுக்கு அதிபதிபாக வேண்டும் என்ற நோக்கத்தில் துவக்கப்பட்ட திட்டம் அது.

பத்து ஏக்கர் நிலம் கரும்பு பயிரிடுவதற்கும், ஒரு ஏக்கர் நிலம் வீடுகட்டுவதற்கும் மற்றும் காய்கறிகள் பயிரிடுவதற்கும் தொழிலாளர்களுக்கென ஒதுக்கப்படும். இந்த நிலத்துக்கான ஆரம்ப வைப்புத் தொகையான ஏழாயிரத்து அறுநூறு வெள்ளியை 1980-ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கவேண்டும். கட்டி முடித்துவிட்டால் 1980-ஆம் ஆண்டில் அந்நிலத்தில் குடியேறலாம். அப்படி கட்டி முடிக்க முடியாவிட்டால், அதுவரை கட்டப்பட்ட பணம் திருப்பித் தரப்படும்.

தனலெட்சுமியும் மணியமும் இப்பயனுள்ள திட்டத்தில் சேர முடிவெடுத்தனர். தனலெட்சுமியும் தன் மாமாவுக்கு இந்த விஷயத்தில் உதவிசெய்தார். விடாமுயற்சியும் உழைப்பும் ஒருங்கேசேர இதுவரை மொத்தத் தொகையில் இரண்டாயிரத்து ஐந்நூறு வெள்ளியைக்



வேலை செய்யும்போது ஏற்பட்ட விபத்தால் காலில் கடுமையான காயம்; ஆனால் முகத்தில் தவழ்வதோ புன்னகை. தளராத தன்னம்பிக்கையும் உறுதியோடு கூடிய உழைப்பும் கொண்ட குமாரி தனலெட்சுமி.

கட்டி முடித்துவிட்டதாகவும், அடுத்த வருடத்துக்குள் மேலும் இரண்டாயிரம் வெள்ளியைக் கட்டிவிட ஏற்பாடு செய்துவிட்டதாகவும் கூறும் அவர்களை நாம் ஆச்சரியக் கண்கொண்டுதான் பார்க்கவேண்டியுள்ளது. காரணம் அவர்கள் சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தானே? அவர்களால் இத்திட்டத்தில் வெற்றிகரமாக இறங்க முடிகிறதென்றால், எவ்வளவு கடுமையான உழைப்பை அவர்கள் நல்கவேண்டியதிருக்கிறது என்பதை நம்மால் ஊகித்துப்பார்க்க முடிகிறது.

தனலெட்சுமியின் வேலைத் திறமையைக் கண்டு 'மீனாக்' தோட்டத் தொழிற்சாலை நிர்வாகம் அவருக்குத் தனது தொழிற்சாலையில் நிரந்தரமான வேலையொன்றை வழங்கியது. கரும்புத் தோட்டத் திட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த தனலெட்சுமி, இந்த வேலை தனக்கு மிகவும் பயன்படும் எனக் கருதி ஒப்புக்கொண்டார்.

23 வயதான குமாரி தனலெட்சுமி தான் மாதம் இருநூறு வெள்ளி வரை சம்பளம் எடுப்பதாகவும் 'ஓவர்டைம்' வேலை செய்தால் முந்நூறு வெள்ளி வரை மாத வருமானம் உயரும் எனவும் கூறுகிறார். அதில் மாதம் நூறு வெள்ளியை கரும்புத் தோட்டத்துக்காகத் தன் மாமாவிடம் சேர்ப்பித்து வருவதாகவும் கூறுகிறார்.

எடுக்கும் சம்பளம் புடவைக்கும் வாங்கும் பொருட்களுக்கும் போதவில்லையே என அங்கலாய்க்கும் பெண்களிடையே இப்படி ஒரு பெண்ணா என மூக்கில் விரல் வைக்கிறோம் நாம்.

இப்படி உழைக்கும் திறமுடைய தனலெட்சுமியின் வாழ்க்கையில் ஒரு வேதனைக்கதை!

கடந்த அக்டோபர் மாதம் 22-ஆம் தேதி...

மறக்கமுடியாத அந்த நாளைக் குமாரி தனலெட்சுமியே நினைவு கூர்கிறார்.

"அன்னைக்கு ராத்திரி மணி ஏழரை, தொழிற்சாலையில் நான் வேலை செஞ்சுகிட்டு இருந்தேன். அப்பத்தான்...கழிவுப்பொருட்களைத் தனியே ஒதுக்கித் தள்ளும் மெஷின்லே என் இடது கால் சிக்கிகிச்சு. என் முழுக்காலும் நசுங்கிப் போறதுக்குள்ளே பக்கத்திலே இருந்த கிராணி பார்த்துட்டு உடனே மிஷினை நிறுத்திட்டார். என் இடது கால்ல பெருவிரலோடு சேர்த்து முதல் மூணு விரல்களும் நசுங்கிப் போயிடுச்சி. உடனே கோலாலம்பூர்ல பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தாங்க. இங்க வந்து இரண்டாவது விரலையும் மூன்றாவது விரலையும் அறுவை சிகிச்சை செஞ்சிக் குணப்படுத்திட்டாங்க. ஆனா பெருவிரலைத்தான் எடுக்கணும்னு சொல்லிட்டாங்க!"

அந்த இளம் பெண்ணின் துயரம் நமக்கும் நன்கு புலப்படுகிறது. இருந்தாலும் அவரது கலங்காத கண்கள். உறுதியை இழக்காத குரல். எதிர்காலத்தைத் தன்னம்பிக்கையோடு எதிர்நோக்கும் முகம், அனைத்தும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

முயற்சியால் வாழ்வில் முன்னேறி வந்த ஒரு நிலையான உள்ளம் படைத்த பெண்ணை—இப்படிச் சோதனை செய்ய எப்படித்தான் அந்த இறைவனுக்கு மனம் வந்ததோ?

ஆனாலும் 1980-க்குள் கரும்புத் தோட்டத்தில் எப்படியாவது கஷ்டப்பட்டு குடியேறிவிடுவது என்பதில் குமாரி தனலெட்சுமி மிகவும் உறுதியோடு இருக்கிறார். திரு. மணியத்தின் குரலும் அதையே எதிரொலிக்கிறது.

குமாரி தனலெட்சுமியும் மணியமும் தங்கள் ஆசையை இப்படிக் கூறினார்கள். "தோட்டத் தொழிலாளிங்க எல்லாம் இப்படி முன்னமாதிரி என்னென்னைக்கும் தொழிலாளியாகவே இருக்கக் கூடாது. டாக்டர் உயர்திரு பி. பி. நாராயணன் அவர்களைப் போன்றவங்க செயல்படுத்துற கரும்புத் தோட்டம் போன்ற திட்டங்கல்ல, சேர்ந்து நல்ல பயனடையணும்; சொந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்களாகணும். இதுதான் எங்க ஆசை"

மணியமும் தனலெட்சுமியும் 1980-இல் கரும்புத் தோட்டச் சொந்தக்காரர்களாக வேண்டுமென்ற தங்கள் இலட்சியத்தில் வெற்றியடைய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு பெருமகிழ்வோடு விடைபெற்றோம். விடைபெறும்போது உழைப்பால் உச்சிக்குச் சென்றுகொண்டிருக்கும் தோட்டப்புற சமூகத்தின் உண்மையான அங்கத்தினர்களைச் சந்தித்த பரவசம் ஏற்பட்டது.

சிந்தனை மேடை

'கதிர்'

ஓரிரு மாதங்களுக்கு முன்பு திரு. சைட் முகமது என்பவர் ஃபெல்டா நிலக்குடியேற்றத்தில் இடம் பெற்றுள்ள இந்தியர்களின் நிலைமை பற்றித் "தமிழ் மலர்" நாளேட்டில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில் நிலக்குடியேற்றத் திட்டங்களில் சிறுபான்மையினராக இருக்கும் இந்தியர்கள், தங்கள் தாய்மொழிக் கல்வி கற்கவும், தங்களின் சமயத்தைப் பின்பற்றவும் வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் என்ன என்று வினா எழுப்பியிருந்தார்.

அதே கருத்தை நாடாளுமன்றத்தில் மாண்புமிகு ச. சாமிவேலு அவர்களும் பேசியுள்ளார். இந்தியர்கள் நிலக்குடியேற்றத் திட்டங்களில் அதிகம் பங்குபெறத் தயங்குவதன் காரணங்களில் தாய்மொழிக் கல்வி பெறும் வாய்ப்பும் சமயத்தைப் பின்பற்றும் வாய்ப்பும் இல்லாதிருப்பதும் ஒரு காரணமாகும் என்று பேசியுள்ளார்.

இவை சிந்திக்கப்படவேண்டிய பிரச்சினைகள்தாம். நிலக் குடியேற்றத் திட்டங்களில் பங்குபெறும் இந்தியர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களின் உணர்வுகளும் மதிக்கப்படுவது நியாயமே.

ஒரு மனிதனின் வாழ்க்கை வயிற்றுக்குச் சோறும், உடுத்த உடையும், இருக்க வீடும் கிடைத்துவிட்டால் மட்டும் நிறைவுபெற்றுவிடுவதில்லை. அவை புறவாழ்க்கை அளவில் கிடைக்கக்கூடிய சிறந்த நிலை மட்டுமே ஆகும். அவற்றையெல்லாம் கடந்து உள்ளத்தால் வாழும்போதுதான் வாழ்க்கை பூரணத்துவமடைகின்றது.

உள்ளம் மேம்பாடடைய, தேசத்தில் அமைதியும் அறமும் ஒழுக்கமும் நிலவ, கல்வியும், சமயமும் பெரிதும் உதவுகின்றன.

நிலக் குடியேற்றத் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றபோதே அவர்களின் தாய்மொழிக் கல்வி, மற்றும் சமயத் தொடர்புகள் அறுபடாமலிருக்கவும் திட்டமிடப்படவேண்டும்.

இதுபோன்ற திட்டங்கள் உருவாக்கப்படும்போது ம. இ. கா.வின் ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தார் பெறவேண்டும். அல்லது இந்திய சமூகத்தின் பேராளர்களையும் இதுபோன்ற வாரியங்களில் இடம்பெறச் செய்யவேண்டும்.

அதோடு இந்தியர்களின் மனப்போக்கையும் இந்த நேரத்தில் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நிலக் குடியேற்றங்களில் போராடிப் போராடித் தலைவர்களும் சமூக இயக்கங்களும் இடம்பெற்றுத் தரும்போது, அதன் அருமை உணராது தவிர்த்துவிடுவதால் முயற்சி மேற்கொண்டவர்களின் நிலை பரிதாபமாகிவிடுகின்றது. அப்படியே போனாலும் சில நாட்களில் சில வசதிக் குறைவுகளைக் கருதிச் சொல்லிக்கொள்ளாமல் வெளியேறிவிடும் தவறான நடவடிக்கைகளையும் நாம் தவிர்க்கவேண்டும்.

நிறைய இந்தியர்கள் இடம் பெறும்போது நம் பிள்ளைகளின் தாய்மொழிக்கல்வி பயிலும் வாய்ப்பையும் சமயத்தைப் பின்பற்றும் வாய்ப்பையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பூமி மாறுகிறதா?

உலகத்தில் பெரிய அளவில் பரவலான பருவநிலை மாற்றங்கள் நிகழப்போகின்றன என்னும் எண்ணம் வானிலை ஆராய்ச்சியாளர்கள் சிலரிடையே வளர்ந்து வருகின்றது. ஆனால் எந்த வகையில், எந்த உருவில் அவை நிகழப் போகின்றன என்பதில்தான் பலவிதமான கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

குறைந்த- நிலையில்லாத- மழை பெய்யும் செழிப்பற்ற வரண்ட பகுதிகளில் குறிப்பான பாதிப்புக்கள் நிகழும் என்னும் கருத்துக்களும் ஆராய்ச்சியாளர்களிடையே உலவுகின்றன.

"எங்கு நோக்கினும் பருவ நிலையில் நிலையற்ற தன்மைகள் நிறைந்து காணப்படுகின்றன. எல்லையோர மற்றும் வரண்ட பகுதிகளில் இவ்வாறான தன்மைகள் மிதமிஞ்சிய அளவிலும் அபாயகரமான நிலைமையிலும் இருக்கின்றன" என டெக்சாஸைச் சேர்ந்த விவசாய, பொறியியல் பல்கலைக்கழகத்தின் நிபுணரான ஜோன் கூறுகிறார்.

இன்று எழுநூறு கோடி மக்கள் உலகில் வாழ்கிறார்கள். பருவநிலைகளுக்கும், அந்தந்தப் பகுதிகளின் தட்பவெப்ப நிலைகளுக்கும் ஏற்ப மனிதசமுதாயம் தொழில்நுணுக்கம் மற்றும் பயிர்த்தொழில் துறைகளில் அளப்பரிய முன்னேற்றம் கண்டுள்ளது. பருவநிலைகளுக்கேற்பவே பயிர்த்தொழில் இருப்பதன் காரணம், ஒரு சில "டிகிரி" வித்தியாசங்களால்கூட வறட்சியும், பயிர்கள் பூரண வளர்ச்சியுறமல் பாதிக்கப்படுவதும் ஆகும்.

எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பருவநிலை மாற்றங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள, விஞ்ஞானிகள் கடந்த காலத்தின் பருவநிலைகளை அறிய வேண்டியிருக்கிறது. ஆனால் இப்பிரச்சினையில் அவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். காரணம், உலகின் பல பாகங்களில் தட்பவெப்ப நிலையின் அளவுகள் சரியான நிலையில் குறிப்பிடப்படாமலிருக்கின்றன. ஆப்பிரிக்காவில், தென் சகாராவின் நீண்ட நிலப்பகுதிகளில் ஒரே ஒரு பருவ ஆய்வு நிலையம் இருப்பது ஓர் எடுத்துக்காட்டாகும். சில பகுதிகளில் கடந்த ஒரு நூற்றாண்டு இடைவெளிக்குள்ளேயே பருவநிலை அளவுகள் எடுக்கப்படுவதும் விஞ்ஞானிகளின் சிரமத்திற்கான மற்றொரு காரணமாகும்.

ஆகவே அவர்கள் முதிர்ந்த மரங்களின் மூலமாகவோ அல்லது அதைப்போன்ற வேறு சில வழிகளிலோ கடந்த காலத்தைப் பற்றிய பருவநிலை மாற்றங்களை அறிந்துகொள்ள முற்படுகின்றனர். சமீபத்தில் ரஷியாவில் ஏற்பட்ட வறட்சி, கனடாவில் ஏற்பட்ட உறைபனி, மேற்கு அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட கடும் மழை ஆகியவை பருவநிலை மாற்றங்களில் சில என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும் பூமியின் வடகோளம் குளிர்ந்து வரும் காலங்களில், தென்கோளம் வெப்பமடைந்து வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அவர்களது கூற்றுப்படி வடகோளம் தற்போது வெப்பமடைந்து வருகிறது.

மூத்த வானிலை ஆராய்ச்சியாளரான ஜே. முர்ரே, "பூமி குளிர்ந்து வருகிறதா, வெப்பமடைந்து வருகிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நாம் பருவநிலையில் பெரியதொரு மாறுபாட்டை எதிர்நோக்க வேண்டியுள்ளது. முந்தைய நூற்றாண்டுகளோடு ஒப்பிடும்போது, கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்டு வந்திருக்கும் மாற்றம் மிக மிகச் சிறிய அளவிலான மாற்றமே", என்று கூறுகிறார்.

இதற்கிடையே சூரியனிடமிருந்து பூமி பெறும் கதிர்ச்சக்தியிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது நமக்குக் கிடைக்கும் சக்தியில் ஒரு சதவீதத்தில் ஒரு சிறு பாகம் குறைந்தாலோ, கூடினாலோ பூமியில் குறிப்பிடத்தக்க பருவநிலைமாற்றம் ஏற்படும்.

பூமி தன் சுற்று வட்டத்திலிருந்து சில சமயங்களில் சூரியனை நோக்கி நகர்வதும், கண்டங்கள் அங்குமிங்கும் தள்ளப்படுவதும், மலைத்தொடர்கள் உயர்வதும் சரிவதும் ஏனைய சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

இதுபோன்ற நிகழ்வுகளால் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பனிக்காலத்தின் தொடக்கம் என நம்பப்படும் இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன், தென் கோடியில் அண்டார்டிக்கா பிரதேசத்திலிருந்து ஆஸ்திரேலியாவும் அமெரிக்காவும் பிரிந்து சென்றது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பருவநிலை மாற்றத்திற்கான மற்றொரு மூல காரணம் எரிமலையாகும். எரிமலைகள் வெடிக்கும்போது நுண்ணிய தூசுப் பொருட்கள் வானத்தை நோக்கி வெகுதூரம் வீசப்படுகின்றன. இந்த தூசுப் பொருட்களால் சூரியனிடமிருந்து வரும் கதிர்கள் வானத்தை நோக்கி பிரதிபலிக்கப்படுகின்றன. இதனால் கதிர்களின் வேகம் மட்டுப்பட்டுபூமியின் வெப்பநிலை குறைந்து, பூமி குளிர்ந்து விடுகிறது.

நவீன முறைகளால் பலவகை சக்திகள் பயன்படுத்தப்படும்போது வெளியாகும் கழிவு வெப்பமும், எரிபொருள்களின் வழி வெளிப்படும் கரியமிலவாயுவும் வாயு மண்டலத்தில் கலந்து பருவநிலையைப் பாதிப்பதால் மற்றைய மூலகாரணங்களாக அவை அமைகின்றன.

இதுபோன்ற குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, ஆராய்ச்சியாளரான பிரைசன் சில வருஷங்களுக்குக் குளிர்ந்துகொண்டே வரும் பூமியானது, சுமார் பத்து வருடங்களுக்கு எவ்விதத் தன்மையுமின்றிச் சமமாக இருக்கும்; பிறகு நீண்டதொரு காலத்திற்கு வெப்பமடைந்து வரும் என்று கண்டு பிடித்துள்ளார்.

"அதிக வெப்பமும், குளிர்ச்சியும் இல்லாத (கடந்த ஐந்து வருட காலத்தில் இருந்து வந்திருப்பதைப் போன்ற) நிலை இன்னும் ஒரு பத்து வருடங்களுக்கு நீடிக்குமென நான் நினைக்கிறேன். இருப்பினும் "சாஹேல்", மேற்கு மத்திய அமெரிக்கா, ரஷியா போன்ற இடங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையையும் பிரேசிலில் காப்பிப் பயிர்களை அழித்த உறைபனி போன்ற நிலைமைகளையும் நாம் காணவே செய்கிறோம்" என அவர் சொல்கிறார்.

எதிர்வரும் நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்குள் கரியமில வாயுவின் விகிதம் காற்று மண்டலத்தில் அதிகரித்து விடுகிறதென்றும் அதன் மூலம் பூமியின் வெப்பநிலை கூடுகிறதென்றும் வைத்துக்கொள்வோம். இதனால் எங்கும் பரந்து கிடக்கும் வரண்ட பகுதிகளின் விகிதத்திலும் மாறுதல் ஏற்படக்கூடும்.

பூமி குளிர்ச்சி அடைந்து வருகிறதா, வெப்பமடைந்து வருகிறதா என்பதை ஆராய்ச்சி நிபுணர்களால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆனால் யாராலும் கணிக்க முடியாத அளவுக்கு அபாயகரமான ஒன்று நிகழப்போகிறது என்பதை மட்டும் அனைவரும் உறுதியாக நம்புகின்றனர்.

தற்போது பருவநிலைக்கான ஆதாரக் குறிப்புக்கள் போதிய அளவில் கிடைக்காமையே பருவநிலையின் எதிர்கால நடப்புக்களை ஆராய்ச்சியாளர்கள் அனுமானிப்பதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

இதனை "சாஹேல்" வறட்சி பற்றிய விவாதங்களில் நிபுணர்கள் நிரூபித்தனர். மழைபெய்யும் அமைப்பு தெற்கை நோக்கிக் கொஞ்சம் நகர்ந்தாலும் அதனால் சுமாரான செழிப்பினையுடைய வரண்ட பகுதிகள் பாலைவனங்களாக மாறும் அபாயமும் உள்ளது.

கடுமையான வறட்சி நிலைமைகள் சில ஆண்டுகளுக்கு ஒரு தரம், குறிப்பாக ஒவ்வொரு தலைமுறைக்கும் "சாஹேல்" போன்ற வரண்ட பகுதிகளைத் தாக்குகிறது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனிதர்களின் நடவடிக்கைகளும் இதைப் போன்ற நிலைமைகளுக்குக் காரணங்களாக அமைந்துள்ளன. கால்நடை வளர்ப்பு முறைகளால் மண்ணில் தாவர இனங்கள் அழிவதும், மரங்களை வெட்டுவதால் சகாராவின் மணல் புயல் தெற்கு நோக்கி நகருவதற்கு ஏதுவாக அமைதலும் எடுத்துக்காட்டுக்களாகும்.

"அதிகமான கால்நடை வளர்ப்பு, தாவரங்களை அழிக்கிறது. இதனால் மண்ணின் பிரதிபலிக்கும் சக்தி அதிகரித்து அப்பகுதியின் காற்று மண்டலம் குளிர்ந்து தாழ்ந்து கீழே வருகிறது. இந்தக் காற்று நீர்ப்பசையற்ற வரண்டதாற்றுதலால் இப்பகுதிகளில் மழை பொழிவது அரிதாகின்றது" என்று மாசாசூசெஸ்ட்சைச் சேர்ந்த ஜூல் கார்னி கூறுகிறார்.

இப்படிப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்புக்களை நிபுணர்கள் வெளிக்கொணருவதன் காரணம், மனித இனத்தின் நடவடிக்கைகளால் அதிகமான மழை பொழிகின்றது என்ற கூற்றில் அவர்களுக்கு நம்பிக்கையில்லாததே. 1870ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இதை நிரூபிக்கிறது. அப்போது மேற்கு அமெரிக்கப் பகுதியில் நல்ல மழை பெய்தது. அந்த வரண்ட பகுதியில் பெய்த மழையைக் கண்ட சுற்றுப் பகுதி மக்கள் அங்கே குடியேறினர்- இனி என்றுமே அங்கு நல்ல மழைபொழியும் என்ற நம்பிக்கையில். ஆனால் பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்தப் பகுதியை அலங்கோலப்படுத்திய கடும் வறட்சி நிலைமைகளால் அவர்களது ஆசையில் மண் விழுந்தது.

"அரிசோனா" பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஹெரால்ட் சிலிபிரிட்ஸ் என்பவர் இந்த நேரத்திலிருந்துதான் மிகப்பெரிய பருவநிலை மாறுபாட்டை எதிர்பார்க்கவேண்டும் என்று கூறுகிறார். "1900-ஆம் ஆண்டு முதல் 1960-ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த மாறுபாடுகள் சாதாரணமானவையே! 1960ஆம் ஆண்டுக்குப்பின் சம்பவித்த உறைபனிக் காலங்கள் முந்தியவற்றைவிட கடுமையானவையாகும்" எனவும் அவர் சொல்கிறார்.

கடலில் ஆராய்ச்சிகள் நடத்தும் "குளோமார் சேலஞ்சர்" எனப்படும் கப்பல், பழங்காலப் புயற்காற்றுகள் மணலை அள்ளிக்கொண்டு, நீண்ட தூரங்கள் கடந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துள்ளது. சகாரா பாலைவனம் இதன்மூலம் உருவாகியிருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

எது எப்படியாயினும் பருவநிலையைச் சரியாக அனுமானிக்க முடியாது என்று ஆராய்ச்சியாளர்கள் உறுதிசெய்கின்றனர். பருவநிலைகள், புரிந்துகொள்ள முடியாத அளவுக்குக் குழப்பம் நிறைந்திருப்பதே இதன் முக்கிய காரணமாகும்.


பருவ நிலைகளைப் பற்றி மேலும் தெளிவாகத் தெரிந்துகொள்ள இப்போதிருப்பதைவிட அதிநவீன பொறியியல் சாதனங்களும், உலகில் நிகழும் தட்பவெப்ப நிலைகளின் குறிப்புக்களும்தேவைப்படுகின்றன. இத்தேவைகளைப் பூர்த்திசெய்ய உலக வானிலை ஆராய்ச்சிக் கழகமும் மற்றும் பல ஆராய்ச்சி நிலையங்களும் அமெரிக்கா போன்ற நாடுகளும் தற்போது முனைந்துள்ளன.

யாராலும் அனுமானிக்க முடியாதவாறு பருவநிலை மாற்றங் கண்டு வருகிறது. "இதனை எதிர்க்க மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய சிறந்த ஆயுதம், கஷ்ட நிலைமைகளிலும், மோசமான பருவநிலை அபாயங்களில் வாழவும் பழகிக் கொள்வதே ஆகும். அதற்குள் நாங்கள் இதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் பரிகாரம் காணவும் முயல்வோம்!" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(அமெரிக்க அறிவியல் சஞ்சிகை ஒன்றிலிருந்து தமிழாக்கம்)

-இரா. முத்தரசன்

பரிசும் பாராட்டும்



அண்மையில் தமிழகத்தில் மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ்ப் போட்டி அனைத்துலக ரீதியில் நடத்தப்பட்டது. அதில் முதற்பரிசு ரூ. 2000 பெற்றவர் பினாங்கைச் சேர்ந்த நமது கவிஞர் சி. அன்பானந்தம்.

அந்தப் பரிசளிப்புவிழா 24.9.77-ல் சிங்கப்பூரில் நோரிஸ் சாலையிலிருக்கும் இராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவரும் 'உதயம்' ஆசிரியருமான திரு. எம். துரைராஜ் கலந்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு கவிஞர் அன்பானந்தத்தைப் பற்றி அறிமுக வுரையும் நிகழ்த்தினர்.

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து 14.11.77-இல் கவிஞருக்கு, பினாங்கு மாநிலச் சட்டமன்ற உறுப்பினரும், மாநில ம. இ. கா. தலைவருமான மாண்புமிகு தெ. சுப்பையா அவர்கள் தலைமையில் பினாங்கில் பாராட்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு துணையமைச்சர் சி. சுப்பிரமணியம் அன்று கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். திரு. ந. ரெங்கசாமிப் பிள்ளை அவர்களும் பொன்னாடை போர்த்தினர். கவிஞர்கள் நாச்சிகுளத்தார், ஆதம்குமார் இருவரும் வாழ்த்துப்பா வாசித்து வழங்கினர்கள்.

16.11.77-இல் பினாங்கு கொடிமலை அருளொளி திருமுருகன் ஆலயத்தில் ஆலயத் தலைவர் அருள் மாமணி என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை அவர்கள், ஆலயத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்ததோடு கவிஞருக்கு "அருட் கவிச் செல்வர்" என்னும் பட்டத்தையும் வழங்கினர். கவிஞர் எஸ். கே. வடிவேலு வாழ்த்துப்பா வாசித்து வழங்கினர்.

படவிளக்கம்:- திரு. எம். துரைராஜ் அறிமுகவுரையாற்றுகிறார். அமர்ந்திருப்போர் இடமிருந்து திருவாளர்கள்: மெ. சிதம்பரம், இராம. பெரிய கருப்பன், சாரதா பள்ளி முதல்வர் தா. பா. சாமி, கேசவன் (சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்), அருள்நெறிச் செல்வர் வயி. சண்முகம் செட்டியார்.

புண்ணிய பூமி

எல்.முத்து

இங்க வந்து வாழ்ற வாழ்க்கய நெனைக்கும்போது, கொய்ற மருந்த குடிச்சதப்போல, வயிறெல்லாம் கொமட்டிக்கிட்டு வருது. துப்பவும் முடியாம, முழுங்கவும் முடியாம மனசில போட்டு பெசஞ்சிக்கிட்டு எத்தன நாளைக்குத்தான் இப்படி வாழறதோ தெரியல...

இந்த மனுசனுக்கு ஏன் இப்படி புத்தி பேதலிச்சுப் போச்சு? என் மனக்கஸ்டங்கள கொஞ்சமாவது புரிஞ்சிக்கிறாரா? இந்த பெல்டா நெலத்தில அப்படி என்ன பெரிசா இருக்கு? சதா இதப்பத்திபே பெருமையா பேசுறாரே...எனக்கு அவரு போக்கு ஒண்ணுமே புரியல. இங்க வந்தா என்னவோ வாரிக் கட்டிக்கலாம்னு அவர் சொன்னதைக் கேட்டு நானும் வந்தேன்...எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்.

நெலம் கெடைச்சதும், என்னமோ வெல்பர் டிக்கெட்டுல மொதப் பரிசு அடிச்சிட்டாப்ல தலைகால் தெரியாம குதிச்சதப் பார்த்து என்னமோ பெரிசா நெனைச்சிட்டேன். பத்து ஏக்கர் கித்தா மரம்னு சொன்னதைக் கேட்டு ரொம்பமனசு பூரிச்சு நெகிழ்ந்தே போயிட்டேன். இங்க வந்து பார்த்ததும்தான் அகோட லட்சணம் தெரியுது. சே, இப்படிப்பட்ட காட்டுல எப்படி வாழறது? எனக்கு இந்த ஆறு மாசத்திலேயே எப்படியோ போச்சு. ஆனாலும் மலாய்க்காரங்க எல்லாம் எப்படியோ தெரியல, ரொம்ப ஒரு பிடிப்போட இங்க சந்தோஷமா வாழ்றுங்க.

அவங்களுக்கு என்ன? வீட்டுக்கு வீடு எல்லாம் ஒரே இனம்; பார்த்துப் பேசிக்க பக்கத்துக்குப் பக்கம் ஆள் துணை இருக்குது. பேசி சந்தோஷமா பழக எனக்குனு யாரு இருக்கா? ஏந்தா இந்த நேர் ரோட்டுலேயே போனா ஒன்றர மைலுக்கு அப்பால ஒரு இந்தியக் குடும்பம் இருக்கு; தெனமும் மெனக்கெட்டு அங்க எவ போவா?

சரி, பேசிப் பழக ஆள் தொண இல்லாட்டி பரவாயில்ல, கவலய மறந்து பொழுதப் போக்க ஏதாவது ஒரு வசதி? படம் இல்ல... டெலிவிஷன் இல்ல கோயில் திருவிழா இல்ல ஒரு கண்றாவியும் இல்ல.

பத்து மைல் தொலைவில இருக்கிற கிம்மாசுக்குப்போறதா இருந்தா காடி வசதி ரொம்பக் கொறவு. அடிக்கடி டவுனுக்குப் போகவும் பணத்துக்கு எங்க போறது?

மத்த மத்த வசதிதான் இல்ல, சம்பளமாவது கொஞ்சம் உண்டுனு கெடைச்சா தேவலாம். மாசம் நூத்தி இருவது வெள்ளி; அதுவும் அவருக்கு மட்டும்தான் வேலை.

இந்த பெல்டாவில என்னமோ பொம்பளைங்களுக்கு வேல இல்லையாம். நெலத்த பிரிச்சு தந்திட்டப்புறம், சொந்த நெலத்துல வேணும்னு போய்ப் பாடுபடலாம்னு சொல்லிட்டாங்க.

நூத்தி இருவது வெள்ளியில நானு, அவரு, நாலுபிள்ளைங்களப்படி காலத்த ஓட்டறது? எப்படி இத எல்லாம் சமாளிக்கிறது? ஆனாலும் பக்கத்து வீட்டு மரியாத்தியும், எதிர் வீட்டு ரொக்கியாவும் இந்த சம்பளத்த வைச்சிகிட்டு. ரொம்ப சந்தோஷமா எந்த கொறையும் இல்லாத மாதிரி வாழறுங்களே... அது அவங்களால எப்படி முடியுது?

ஆமா, அதுங்க எப்படி சாப்பிடுதோ? நான் அவங்கவங்க வீட்டுக்கு போய்ப் பார்த்தனா என்ன? அதுங்க வீட்டுக்குப் போவ நான் யாரு? கஷ்டமோ நஷ்டமோ நம்ம வீட்டோட நாம இருந்துக்கணும்... எவன் எப்படியோ வாழ்ந்திட்டு போறான்.

அட, மத்தவங்க கிட்டப்போய் நம்ம கஷ்டத்த சொல்வானேன்? எஸ்டேட்டுலயா இருந்தா அந்தத் தோட்டவாசிங்கற பற்று இருக்கும். இங்க அதெல்லாம் ஒண்ணும் இருக்கிறதா எனக்குத் தோணல.

இதெல்லாம் சொன்னா அவருக்கு கொஞ்சமாவது ஒறைக்குதா? 'உனக்கு வாழத் தெரியலே'ன்னு மூஞ்சில அடிச்சாப்பல பேசிடுறாரு.

உண்மையில எனக்கு வாழத்தான் தெரியல. நல்ல அருமையான "மிடில்டன்" தோட்டத்த விட்டுட்டு இந்த சுடுகாட்டுக்கு வந்து நரக வேதனப்படுறேன் பாரு... உண்மையிலே எனக்கு வாழத் தெரியல... அந்தத் தோட்டத்தில இருக்கிற மாதிரி இங்க அப்படி என்னதான் இருக்கு? எனக்கும் ஒண்ணுமே புரியல.

இத எல்லாம் நெனைக்கும் போது கண்ணுல "பொல பொல"ன்னு தண்ணி வந்திடுது. ஒரே ஒரு நிமிஷம் நல்லா சிந்திச்சுப் பாத்தா, பேசாம மூட்டை முடிச்சுக்கள கட்டிக்கிட்டு, எஸ்டேட்டுக்கே திரும்பிப் போயிடலாம்னு இருக்கு.

பின்னே என்ன, எஸ்டேட்டா இருந்தா இப்படியா இருக்கும்? அங்கிருந்தப்போ எவ்வளவு சந்தோஷமா இருந்திச்சு. அத எல்லாம் நெனைக்கிறப்போ மனசு என்னமோ போசுக்குனு போயிடுது.

இந்த பெல்டா நெலத்தில வசதிங்க இல்லாட்டி போயிட்டு போவுது. அதெல்லாம் கூட மனச உறுத்தல. இங்குள்ள மனுசாளுங்கள நெனச்சா, எனக்கென்னமோ மனசே சரியில்ல... இல்ல நான் அப்படி பிரிச்சுப் பார்க்கிறேனே? இல்ல... இல்ல! என்ன மட்டும் இங்குள்ளவங்க எல்லாம் பிரிச்சு வைச்சிட்டாப்போல எனக்குத் தோணுது. எல்லாத்தையும்விட இதுதான் எனக்குப் பெரிய கவல...! சமயங்கள்ல வாய்விட்டு "ஓ"ன்னு கதற அழுவணும்போல இருக்குட.

அப்புறம் என்ன பின்னே? இதே எண்ணம்தான் சதா என் மனசு அரிச்சிக்கிட்டு இருக்கு. அக்கம்பக்கம் நாலு பேருகூட "கல" கலன்னு பேசிப் பொழுதப் போக்கினாதானே மனசுக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கும். இங்க அப்படி யாரு இருக்கா?

எஸ்டேட்டுல இப்படி ஒரு கொறையே இல்ல. எல்லாம் நம்ம ஜனங்க எது ஒண்ணுனாலும் எடுக்கப் புடிக்க எவ்வளவு சௌகரியம். ஒரு தாய் வயித்துப் பிள்ளைகளைப் போல எல்லாரும் அன்னியோன்னியமா வாழறதப் பார்க்கும்போது நம்ம சொந்தக் குடும்பத்தில உள்ளவங்களோட சேர்ந்து வாழறதைப் போல மனசு நெகிழ்ந்துபோயிடும் அங்க ஒருத்தருக்கு ஒருத்தர் எவ்வளவு ஒத்தாசையா வாழ முடிஞ்சிது. இருக்கிறதை குடுத்து, இல்லாததை வாங்கிக்கலாம்.

ஒருத்தருக்கு ஒருத்தர் ஒதவிக்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். அந்தத் தோட்டப்புற வாழ்க்கையோட மத்த மத்த மகிமயப் பத்தி நெனைக்கும்போது இப்பக்கூட மனசு குளுந்துக்கிட்டு வருது. சாயந்தரமா வீட்டு வேல எல்லாம் முடிச்சிட்டு, அப்படியே ரெண்டு மூணு வீட்டுக்குப் போய் காத்தாட கதைப் பேசிட்டு வரும்போது மனசுக்கு என்னமா நிம்மதியா இருக்கும். அந்த சந்தோஷத்தில வேல செஞ்ச அலுப்புக்கூட தெரியாம மறஞ்சி போயிடும்.

நானே மத்த மத்தவங்க வீட்டுக்குப் போகலேனாலும்கூட, அவங்களா வந்து நம்ம வீட்டில நேரம் போறது தெரியாம கதை பேசறப்போ என்னமோ நம்ம வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்கிறதப்போல மனசு நெறஞ்சி போயிருக்கும்.

அப்படி ஒரு சந்தோஷத்த இங்க மருந்துக்குக்கூட பார்க்க முடியறதில்ல. இங்குள்ளவங்க எஸ்டேட்டுல உள்ளவங்க மாதிரி இல்லையே! இவங்க எல்லாமே புதுசா இருக்காங்க. அவங்களுக்கும் எனக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்குமோ? இல்ல, நான்தான் அப்படி பிரிச்சிப் பார்க்கிறேனே?

எது எப்படி இருந்தாலும் எஸ்டேட்டுல உள்ளவங்க மாதிரி இந்த பெல்டாகாரங்க வர மாட்டாங்க. இவங்கள எனக்குக் கொஞ்சம்கூட புடிக்கல. எல்லாருக்கும் என்னைப் பிடிக்காம, பிரிச்சி வச்சி வேடிக்க பார்க்கறுங்களோ? மனச இறுக்கிப் பிடிச்சிப் பார்த்தா, என்னை பாலவனத்தில தவிக்க விட்டுட்டதப் போல தோணுது.

நானு போய் அக்கம்பக்கத்துல ரெண்டொரு வார்த்த பேசலாம்னு பார்த்தாலும், எல்லாம் மலாய்க்காரங்களா இருக்காங்க. எனக்கு என்னமோ அவங்க வீட்டுக்குப் போறதை நெனச்சாலே மனசுக்கு புடிக்கல. அப்படியே நாம் போனாலும் அவங்க வீட்டுல கூப்பிட்டு பேசுவாங்களா? "இவகிட்ட என்ன வேண்டிக்கிடக்கிதுன்னு மூஞ்சில அடிச்சாப்பல ஒதுங்கிப்போயிட்டா, சே... அத நெனைக்கறப்பவே மனசு என்னமா பொங்கிட்டு வருது.

நம்மளையும் ஒரு மனுசாளா மதிக்காதவங்ககிட்ட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு? என்னைப் பார்க்கவே அவுங்களுக்கு பிடிக்கலபோல- அவுங்க பார்க்கற பார்வையே ஒருகிண்டலா இருக்கு.

வீட்டுக்காரருக்கு இந்த தர்ம சங்கடம் எல்லாம் எங்க புரியப் போவுது? அவருக்கு இங்குள்ளவங்க எல்லாமே நல்லவங்கதான்... என்ன சொல்லுங்க!

இத எல்லாம் நெனக்கிறப்போ மனசு துடிதுடின்னு துடிச்சுப் போகுது. இங்க ஒரு நல்ல நாளு, பெருநாளுன்னு எத சந்தோஷமா கொண்டாட முடியுது? கோட்டானுட்டம் தனியா கிடந்து தவிக்கவேண்டியதுதான். எஸ்டேட்டா இருந்தா மாரியம்மன் கோயில் திருவிழா வந்துட்டா பார்க்கணுமே... என்னமோ பத்துமலக்கே போயிட்டாப்போல மனசு . பொங்கி வழியும். என்ன கூட்டம். என்ன ஆட்டம்! மாரியாத்தா ராவுல தோட்டத்த சுத்தி ஊர்வலம் வர்றத பார்க்க. கண்ணு பூரிச்சுப் போவும். இந்த பெல்டாவில அப்படி சடங்குக்கு ஒரு காட்சிய பார்க்க முடியுதா? என்னம்மா புருஷன இழந்தவ மாதிரி, நல்ல நாளையும் பெருநாளையும் எழுந்து "ஓ"ன்னு புள்ளைங்களகூட ஏங்க வைக்க வேண்டியதா இருக்கு. எப்பதான் இந்த ஓரியாட்டம் முடியப் போவுதோ?

இன்னும் ஒரு மாசத்தில் தீபாவளி வரப்போவுது. எஸ்டேட்டுல இருக்கிறபோது இப்படி தீபாவளி வர்றத நெனைச்சாலே, மனசுக்குள்ள ஒரு தனி சொகமா இருக்கும். ஒரு மாசம் இருக்கும் போதே துணிமணி வாங்கறது என்ன; பலகாரம் செய்யறது என்ன? பொம்பளைங்க ஒண்ணுக்கொண்ணு மாவிடிச்சு கூட்டா பலகாரம் செஞ்சி டின்ல அடைச்சி வைக்குங்களே! அந்த மாதிரி செய்ய இங்கு எந்த பொம்பளைங்க இருக்காங்க? எதுவா இருந்தாலும் ஒண்டிக்கட்டையா வேண்டா வெறுப்பா செய்யவேண்டியதுதான்.



ஆனாலும் வீட்டுக்காரருக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்ல. இந்த பெல்டாவுக்கு வந்து இதுதான் மொத வருஷ தீவாளியாமே! எல்லா மலாய்க்காரங்களையும் கூப்பிட்டு விருந்து வைக்கப்போறாராம். எனக்கு இதெல்லாம் ஒண்ணுமே புடிச்சுக்கல.

அவங்க யாரு, நாம யாரு? நம்ம சனங்களா இருந்தா பரவாயில்ல... நம்மள அண்டாதவங்களுக்கு என்ன விருந்து வேண்டிக் கிடக்கு? விருந்துன்னதும் ஒண்ணு என் நெனவுக்கு வருது எஸ்டேட்டுல இன்னைக்கு நம்ம வீட்டுல விருந்துன்னு, நாளைக்கு அவங்க வீட்டுல விருந்து வைப்பாங்க. அந்த மாதிரி விருந்த பரிமாறிக்கும்போது, நம்ம மனசையே பரிமாறிக்கிற மாதிரி இருக்கும்.

இங்க விருந்து செஞ்சு என்ன புண்ணியம்? அவரு சொன்னரு... அதுக்காக ஒப்புக்குத் தலைய ஆட்டி வச்சிருக்கேன். மனசே நல்லா இல்லாதபோது தீவாளி எங்க கொண்டாடறது? வர்ற தீவாளிக்கு எல்லாருமே பேசாம எஸ்டேட்டுல இருக்கிற அம்மா வீட்டுக்குப் போயிடறதா முடிவு எடுத்திட்டேன்.

அப்படி இப்படின்னு நாளு என்ன மாயமா ஓடிப் போச்சு. தீவாளிக்கு இன்னும் பத்தே நாளு தான் இருக்கு. ஒரு நாலஞ்சு நாளு தீவாளிக்கு அம்மா வீட்டில போய் இருந்திட்டு வரப்போறத நெனைக்கும்போது கோயிலுக்கு மனசிம்மதி தேடிப் போறதப்போல மனசு பூரிச்சுப் போவுது. நல்ல நாளும் பெருநாளுமா இந்த சுடுகாட்டில இருந்து

விடுதல கெடைச்சா அதுவே பெரிய புண்ணியம்.

"ஆச்சி உங்க புருஷன் ஓடிட்டு இருந்த டிரெக்டர்ல தவறிவிழுந்துட்டாரு. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்க"- எதிர்வீட்டு கரீம் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்து சொல்ருன். எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல. ஆண்டவனே, அவருக்கு ஒண்ணும் ஆயிடக் கூடாது. என்மனசு "ஓ"ன்னு உள்ளுக்குள்ள கதறி அழுது.

இப்ப நான் யார்கிட்ட போய் உதவி கேக்கிறது? அவரை சிகாமட் ஆஸ்பத்திரிக்கு கொண்டு பேர்யிட்டாங்களாம். இங்க இருந்து எப்படி போறது? இங்க இருந்து கிம்மாஸ் போயிட்டா அப்புறம் அங்கிருந்து எப்படியும் போயிடலாம். மொதல்ல கிம்மாஸ் வரையில போறதுக்கு இந்தக் காட்டுல எந்த காடி இருக்கு?

நான் என்ன செய்வேன்? எனக்கு ஒண்ணுமே தோணல. அழுக அழுகையா வருது. நான் அப்பவே சொன்னேன்... "திடுதிப்புன்னு ஒண்ணுன்னு... இங்க ஒரு வசதியும் இல்லே"ன்னு". இந்த மனுசன் கேட்டாரா?

இங்க அக்கம் பக்கம் நம்ம சனங்க யாரும் இருந்தாலும் பரவாயில்ல. ஏதோ ஓடிப்போய் ஒண்ணு ரெண்டு வாங்கிட்டுப் போகலாம். ஐயோ கடவுளே, ஏன் என்னே இப்படி சோதிக்கிற? நான் அவர எப்படியாவது போய்ப்பார்க்கணும். மனசு நெல கொள்ளாம அடிச்சிக்கிறத இங்க யாரு புரிஞ்சிக்கப் போரு?

அதோ, பக்கத்து வீட்டு மரியாத்தி என்னே வந்து வாசல்ல நின்னு பார்த்திட்டு வீட்டுக்குள்ள போயிடுரு! அவளுக்கு நான் அழுவுறது வேடிக்கையா இருக்குமோ? என் நெஞ்சுக்குள்ள நெருப்பா எரியுது.

ம்ரியாத்தியோட புருஷன் வேல விட்டு வந்ததும் வராததுமா அவள் என்னமோ ஓடிப்போய் சொல்ரு... எங்க வேதனையப்பத்தி பேசறதுல அவங்களுக்கு ஒரு சந்தோசம் இருக்குமோ?

மரியாத்தி புருஷன் ஓஸ்மான் என்னேத் தேடி வர்ருரே...! "ஆச்சி, ஏன் அழறீங்க? அவருக்கு ஒண்ணும் ஆவாது. அப்படி உங்களுக்கு ரொம்ப பயமா இருந்தா... வாங்க ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்திட்டு வரலாம். நான் உங்கள என் மோட்டார்ல ஏத்திட்டு போறேன். இங்கதான் ஒரு காடி கூட இல்லையே" —அவர் சொன்னதைக் கேட்டு நான் தடுமாறிப் போறேன்.

விர்ருன்னு ஒரு தாவணியை எடுத்து மேல போட்டுக்கிட்டு கிளம்பிடுறேன்.

"வாங்க ஆச்சி போகலாம்"— ஓஸ்மான் துரிதப்படுத்திறது என் காதில விழுது. கையில ஒத்த வெள்ளிக்கூட இல்லாம நான் தயங்கித் தயங்கி நிக்கிறேன். ஓஸ்மான் மரியாத்திய கூப்பிட்டு என்னமோ சொல்ல, அவ எங்க மூணுவது வீட்டு பரிடா கிட்ட ஓடுரு.

கொஞ்ச நேரத்தில அவ அஞ்சு வெள்ளிய என் கையில கொடுத்து "பயப்படாப போயிட்டு வா ஆச்சி" -ன்னு சொன்னதை கேட்டப்போ என் மனசு கூனிக் குறுகிப் போவுது. நான் ஊமையாகிப் போறேன்.

ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்ததும் ஓஸ்மான் தான் யார் யாரையோ விசாரிச்சு, அவர் இருக்கிற வார்டுக்குக் கூட்டிப் போனரு...

ஆ, இதென்ன? அவரு...அவரு... ஐயோ நிதானமே இல்லாம கெடக்கிருரே! புரியுது...ரத்தம் ஏத்துருங்க... அப்படின்னு காயம் ரொம்ப பலமா பட்டிருக்குமோ? ஆண்டவனே. அவருக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாது. நெஞ்சை உடைச்சிகிட்டு அழுக வருது. நான் கஸ்டப்படுறது ஓஸ்மானுக்கு எப்படியோ இருக்குது போல.

"ஆச்சி, ஒண்ணுமில்ல, டாக்டர இப்ப நான் போய்ப் பார்த்துட்டு வந்தேன். தொடையிலயும் மண்டையிலயும் ஏற்பட்ட காயத்தில் ரத்தம் கூட வெளியாயிடுச்சாம். மத்தபடி பயப்படறதுக்கு ஒண்ணுமில்லேன்னு சொல்லிட்டாரு. நம்ம வீட்டுக்கு ஆருவது வீட்டுல இருக்கிருரே அப்துல்லா, அவர்தான் ரத்தம் கொடுத்தாராம்."

ஓஸ்மான் பேசிக்கிட்டு இருக்கும்போதே என் கண்ணுல தண்ணி பொல பொலன்னு கொட்டுது. "அப்துல்லா ரத்தம் கொடுத்தாரா...?' ஏதோ ஒண்ண விழுங்க முடியாம தடுமாறிப் போறேன். ஏதோ ஒரு உணர்ச்சி அப்படியே நெஞ்சை அடைக்கிருப் போல இருக்கு. நேருக்கு நேர் ஓஸ்மானே பார்க்கமுடியாம திணறி.தொண்டை எல்லாம் வரண்டு, நாக்கு காய்ஞ்சு ஒட்டிப்போயிடுது நான் அழறேன். எதையோ தாங்கிக்க முடியாம அழறேன்.

அவரோட தலமாட்டில இருக்கிற ஒரு சின்ன அலமாரியதொறந்து பார்க்கிறேன். ஏது இந்த ஆப்பில், ஓரஞ்சு, மிலோ, சுடுதண்ணி போத்தல்...? எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. மிஸிகிட்ட கேட்டுப் பார்க்கிறேன்.

"உங்க புருஷன கொண்டுவந்த மூணு மலாய்க்காரங்க இத எல்லாம் வாங்கி தந்தாங்க. செலவுக்கு அஞ்சு வெள்ளியையும் அவரோட தலகாணி அடியில வைச்சிட்டுப் போயிருக்காங்க" மிஸி சொன்னதை கேட்டதும் என் தலையே சுத்திடுச்சு. நான் பிரமிச்சு, திக்கு முக்காடிப் போறேன்.

அப்படியே அவர் கட்டில் அடியில ஒக்காந்து அழுவுறேன். எனக்கோ, அவருக்கோ அண்ணன் தம்பியே இல்லேன்னு அடிக்கடி கொறப்பட்டுக்குவோம். ஆனு இப்ப அப்படி ஒரு கொறையே இல்லாத மாதிரி தோணுது. ஆறு மாசத்தில இப்படி ஒரு நெருக்கமா? எங்கோ பொறந்து, எங்கோ வளர்ந்து, இப்பதான் எல்லாரும்

மேய்ப்பன்

'ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிருன்.

வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனுய் இருக்கிருன்.

—யோவான் 10:1–2

இந்த பெல்டாவுக்கு வந்தோம்... அதுக்குள்ள இப்படி ஒரு பாசமா? எனக்கு ஓடம்பெல்லாம் சிலிர்க்குது! கதறி அழுதாதான் மனசுக்குக் கொஞ்சம் தேவலாம் போல.

எவ்வளவு நேரம் மனசுக்குள்ள அழுது பொலம்புனனே தெரியல. அவரு கண்ண தொறந்து தலைய அசைச்சாரு சுருங்கி இருந்த மனசுக்கு கொஞ்சம் தெம்பா இருந்திச்சு. "புள்ளைங்க தனியா இருக்கும் நீ வீட்டுக்குப் போ"ன்னு அவரு முணுமுணுக்கிருரு. அதுக்குள்ள ஓஸ்மான் என்னமோ சொல்ருரு... "மரியாத்தி கிட்ட சொல்லிட்டு வந்திருக்கேன் அவ புள்ளைங்கள கவனிச்சுக்குவா"

"எனக்கு ஒண்ணுமில்ல பங்கஜம் தைரியமா வீட்டுக்குப் போ"ன்னுஅவருஆறுதல் சொல்ருரு. நான் அதுக்காகவா அழறேன்... இல்ல... இல்லவே இல்ல.

"ஆச்சி பயப்படாதீங்க, நாங்க இருக்கும்போது உங்களுக்கென்ன கவல"ன்னு ஓஸ்மான் கூட எனக்கு ஆறுதல் சொல்ருரு. நான் அதுக்காகவா அழறேன்? இல்ல... இல்லவே இல்ல. நெஞ்சுக்குள்ள கிடந்த பாரத்த நெனச்சி அழுவுறேன்.

"பங்கஜம்! இந்த வருஷம் நமக்கு தீவாளி இல்ல. நீ பேசாம புள்ளைங்கள கூட்டிட்டு உங்கம்மா வீட்டுக்குப் போயிட்டு வா"ன்னு அவர் சொல்றத கேட்டப்போ. ஊசி குத்தருப்போல என் மனசில சுளீர்னு ஒரு வலி.

நான் நல்லா உணர்ந்துட்டேன். புண்ணிய பூமிய விட்டுட்டு எங்கயும் போகப் போறதில்ல.

ஓஸ்மான ஏறிட்டுப் பார்க்கிறேன். "வாங்க ஆச்சி"ன்னு அனுதாபத்தோட ஆதரவா கூப்பிடுருரு.

"சடையன், கவலப்படாதீங்க! பெங்குலுகிட்ட சொல்லி உங்க குடும்பத்துக்கு உதவி செய்யறோம்"னு சொல்லி, அவர்கிட்ட மூணு வெள்ளிய கொடுக்கிருரு ஓஸ்மான்.

எனக்கு மனச சிலிர்த்திக்குது. ஓஸ்மான் கைய பிடிச்சிட்டு அழறேன்.

"அழாதீங்க"ன்னு சொல்லி என்னே வீட்டுக்கு அழைச்சிட்டு போருரு.

இப்பதான் இருட்டில இருந்து வெளிச்சத்துக்கு வந்திருக்கனே...?

புலி வேட்டை

திரைப்பட உலகில் மிருகங்களை வேட்டையாடுவதில் வல்லவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், நகைச்சுவை நடிகர் ஏ. கருணாநிதியும்தான்! ஒரு புலியைச் சுட்டுக் கொன்று, ரத்தம் சொட்டச் சொட்ட அதைத் தன் தோளில் போட்டுக்கொண்டு புகைப்படமெடுத்து மேல்நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டுமென்பது கருணாநிதியின் ஆசை!



கவிஞர் அறிமுகப்படுத்திய இரட்டையர்!

இன்றைய பிரபல இசையமைப்பாளர்களாக விளங்கிவரும் சங்கர்—கணேஷ் இரட்டையர்களை அன்று இசையமைப்பாளராக்குவதிலும் உதவியவர் கவிஞர் கண்ணதாசன் தான்! இவர் தன்னுடைய சொந்தப் படமான "நகரத்தில் திருடர்கள்" என்ற படத்தில் இந்த இரட்டையர்களை முதன்முதலாக இசையமைக்க வைத்தார். கண்ணதாசன் அறிமுகப்படுத்தியவர்கள் முன்னுக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அந்தப்படம் இன்னும் வெளிவரவில்லை!



யார் காரணம்?

ஸ்ரீகாந்தை இப்போது அதிகமாகப் படங்களில் பார்க்க முடியாமற் போனதன் காரணம் ரஜனிகாந்த் என்றுதான் படவுலகில் பேசப்பட்டு வருகின்றது! ஆனால் அப்படி கிடையாது என்று அடித்துச் சொல்லுகிறார் ஸ்ரீகாந்த். ராஜாவாக இருந்தவரை ஸ்ரீகாந்த் என்று மாற்றியவர் டைரக்டர் பாலசந்தர்தான! சிவாஜிராவ் ஆக இருந்தவரை ரஜனிகாந்த் ஆக மாற்றியவரும் பாலசந்தர்தான்!



அத்தான்

'அத்தான்' என்று பல திரைப்படங்களில் இனிமையாக அழைத்து நடித்திருக்கும் நடிகை பிரமிளா, தன் புதுக் கணவர் விஜயகுமாரை எப்படி அழைக்கிறார் தெரியுமா? "என்னப்பா, வாப்பா, போப்பா" என்றுதான் கூப்பிட்டுப் பேசுகிறாராம்.

ரஜனி ஸ்டைல்

நடிகர் ரஜனிகாந்த், நடிப்பில் தனக்கென ஒரு தனிப்பாணியை ஏற்படுத்திக்கொண்டு நடித்து வருகிறார்; அண்மையில் தமிழகமெங்கும் திரையிடப்பட்டிருக்கும் "காயத்ரி" படத்தில், தனக்கென ஒரு தனி ஸ்டைலுடன், அதில், தான் ஏற்றுக்கொண்டுள்ள அந்தப் பாத்திரத்தை நடித்துக் காட்டுகிறார். அதற்கு "ரஜனிகாந்த் ஸ்டைல்" என்று அந்தப் படத்தைப் பற்றிய விளம்பரத்தில் போட்டிருக்கிறார்கள்.



சிவகுமார் வருகிறார்


நடிகர் சிவகுமார் வரும் ஜனவரி முதல் வாரத்தில் சிங்கப்பூர்-மலேசியாவுக்கு வருகைதர இருக்கிறார். படங்களில் நடிப்பதற்கு அல்ல! தமிழர் விழாவில் கலந்துகொள்ள! ஆனால் ஸ்ரீதேவி ஒரு படத்தில் நடிப்பதற்கு மலேசியாவுக்கு வரப்போகிறார்! ஸ்ரீதேவிக்கு இப்பொழுது 15 வயதுதான் நடக்கிறது. இன்னும் அவருடைய மழலைச்சொல்லும் குழந்தை முகமும் மாறவில்லை!

பொடி டைரக்டர்

டைரக்டர்களிலேயே மிகவும் குள்ளமானவர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்தான். அவருக்குப் பொடிபோடும் பழக்கம் உண்டு. ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து உறிஞ்சிவிட்டாரானால், படமாக்கப்பட வேண்டிய அந்தக் காட்சி மிக விரைவில் படமாகிவிடும்!



"சுத்த சோமாறியாக இருக்கிறாரே இந்த நாகேஷ்-கரப்பான் பூச்சிக்கா இப்படிப் பயப்படுவது? பக்கத்தில் பார்த்து ரசிப்பவர் சிவாஜி கணேசன்.
திரை: இளைய தலைமுறை.



முன்னோட்டம்

தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கடைசி நேர மாற்றங்கள் செய்யப்படலாம்

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

18-12-77 "மின்னல்" எழுத்து: கலைநகர் பதவியன்.

25-12-77 "வந்தது யார்" எழுத்து: எஸ். வைரக்கண்ணு

கிறிஸ்துமஸ் சிறப்பு நாடகம்

25-12-77 அந்தக் குழந்தைதானு இவர்? எழுத்து: சுப்போ அன்னக்கிளி ராசையா

வானொலி நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

17-12-77 இருள் தொடர்கின்றது-- பெர்லிஸ், சிம்பாங் அம்பாட் கே. அஞ்சலை எழுதியது.

24-12-77 அவள் புனிதமானவள் கங்கார் கமலாசங்கர் எழுதியது

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

17-12-77 பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிய அவன் ஒரு மாதிரி

24-12-77 மலாக்கா முத்துகிருஷ்ணன் எழுதிய பூனையோ பூனை

31-12-77 கிள்ளான் இரா.வளர்மதி எழுதிய பணமா பாவையா?

இஸ்லாமிய நாடகம்

12-12-77 மொஹரம் சிறப்பு நாடகம் எழுத்து:ப.மு.அன்வர்

திரை மலர்

புதிய திரைப்படக்காட்சிகள், நேயர்கள் பங்கு பெறும் பரிசு அங்கமான "திரைப்புதிர்" ஆகிய சுவையான அம்சங்களைக் கொண்ட "திரைமலர்" நிகழ்ச்சி, சனிக்கிழமைதோறும் மாலை 6-31க்கு ஒலியேறுகிறது. தயாரிப்பு எல். ராமன்.

(ஞாயிறுதோறும் காலை 9 மணிக்கு இளைஞர் உலகம், காலை 10 மணிக்குப் பூச்சரம், பிற்பகல் 3 மணிக்கு நாடகம் பிறக்கிறது.

பூ.கீ. இரவு நிகழ்ச்சிகள்

- செவ்வாய்க்கிழமைதோறும் இரவு மணி 10.46க்கு 'த டெவெஸ்ட்'
- வெள்ளிக்கிழமைதோறும் இரவு 9.04க்குத் தனியார் துப்பறிவாளராக வில்லியம் கோன் ராட் நடிக்கும் "கேனன்" என்னும் 'படம்.
- ஞாயிறுதோறும் இரவு 7.20க்கு போர்க்காட்சிகள் நிறைந்த "கோம்பெட்" எனும் ஆங்கிலப் படம்.

தொலைக்காட்சி


15-12-77 வியாழன் தமிழ்ப்படம் "வீர மனேகர்"

18-12-77 ஞாயிறு இந்திப் படம் "CHOR"

22-12-77 வியாழன் இந்திப் படம் "BAGHI HASINA"

25-12-77 ஞாயிறு தமிழ்ப்படம்

29-12-77 வியாழன் தமிழ்ப்படம்: "அன்புக் கரங்கள்"- சிவாஜி கணேசன் தேவிகா நடித்துள்ள இப்படத்தில் டி. எம். எஸ். குரலில் பல பழைய புகழ்பெற்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.



கோம்பெட் திரையில் லெப்டினன்டாக நடிக்கும் ரிக் ஜேசன்

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின முடிவே இறுதியானது.


10. இறுதிநாள் 10-12-1978.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"

131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066 Kuala Lumpur

தமிழறிவுப் போட்டி ~ 10



இறுதி நாள் 10~1~1978

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

____
கையொப்பம்.

இடமிருந்து வலம்:-

1. நீரில் வாழ்வது.
5. அம்பு.
7. இதைப் பறக்கவிட்டுப் பார்ப்பதில் சிறுவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.
8. குழந்தைகளுக்கு ஊட்டப்படுவது.

மேலிருந்து கீழ்:-

2. காதலர்களிடம் அடிக்கடி தோன்றுவது. தலைகீழ் கிடக்கிறது.
3. எவ்வளவுக்கு எவ்வளவு நாம் அசந்து போகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இவனுக்கு வருமானம்.
4. பெண்களில் சிலர் இதை அழகுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்துவார்கள்.
6. சேரித்து வைக்கப் பயன்படும்.

தமிழ்ப்பாணன், தங்காக்

திருடியது யார்?

பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது பள்ளிக்கூடங்களின் அதிகாரி ஒருவர் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்துவிட்டுப் போக வந்தார்.

அவர் வகுப்பில் புகுந்ததும் மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதையுடன் வணக்கம் கூறினார்கள். அதிகாரியும் வணக்கம் கூறி அமரச் சொன்னார்.

பின்னர் "என்ன பாடம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று அதிகாரி கேட்டார்.

"இலக்கியம் படித்துக் கொண்டிருக்கிறோம் ஐயா!" என்று மாணவர்கள் மரியாதையுடன் பதில் கூறினார்கள்.

"அப்படியானால், நானும் இலக்கியம் பற்றிய கேள்வி ஒன்றை உங்களிடம் கேட்கிறேன். எங்கே பதில் சொல்லுங்கள் பார்ப்போம்" என்று கூறிவிட்டு மாணவர்களைப் பார்த்தார். பின்னர், ஒரு மாணவனிடம், "எங்கே, நீ சொல் பார்க்கலாம். சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடியது யார்?" என்று கேட்டார்.

இதுவரையில் "பென்சில் திருடியது யார்? ரப்பர் திருடியது யார்? புத்தகத்தைத் திருடியது யார்? காசைத் திருடியது யார்?" என்றுதான் ஆசிரியர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இவரோ சிலம்பைத் திருடியது யார் என்று கேட்கிறாரே" என்று தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு, "நான் திருடவில்லை ஐயா! வேறு யாரோ திருடி இருக்க வேண்டும்!" என்றான் அவன் பயந்தபடியே!

"அட, இது கூட தெரியாதா? வேறென்ன இலக்கியம் படிக்கிறோம் என்கிறீர்கள்" என்றார் அதிகாரி.

"கண்ணகிதான் திருடினாள் என்று எத்தனையோ முறை நான் கூறியிருக்கிறேன். அவன் மறந்துவிடுகிறான், ஐயா!" என்றார் ஆசிரியர் தயங்கியபடி.

"என்ன இது! கூத்தாக இருக்கிறது? கண்ணகியா சிலம்பைத் திருடினாள்?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தபடி வகுப்பை விட்டு வெளியே வந்தார் அதிகாரி.

அப்போது அங்கே வந்த தலைமையாசிரியர் "என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

"சிலப்பதிகாரத்தில் சிலம்பைத் திருடியது யார் என்று நான் கேட்டேன். சிலம்பைத் திருடியது, தான் அல்ல என்கிறான் பையன். கண்ணகி என்கிறார் ஆசிரியர்!" என்று அதிகாரி கூறி முடிக்கும் முன் தலைமை ஆசிரியர், "அட பாவமே, அந்தப் பையனுக்கும் ஆசிரியருக்கும் சிலம்பைத் திருடியது மந்தரை என்ற கூனிதான் என்ற உண்மை தெரியாது போல் இருக்கிறது. அதனால்தான் அப்படிக் கூறி இருக்கிறார்கள்" என்று சிரித்தபடியே கூறினார் யாருமே விடை சொல்ல முடியாத கேள்விக்குத் தான் பதில் சொல்லிவிட்டது போன்ற பெருமையில் நிமிர்ந்து நின்றார் அவர்.

"அட, போம் ஐயா! உமக்கும் தெரியாதுபோல் இருக்கிறதே! ஆளுக்கு ஒன்றைச் சொல்கிறீர்கள் எனக்கு மூளையே குழம்புகிறது. ஆனால் யாருமே சரியான விடையைச் சொல்லவில்லை" என்று அதிகாரி கூறவே, தலைமையாசிரியரின் முகத்தில் அசடு வழிந்தது. என்றாலும் உண்மையாக யார்தான் சிலம்பைத் திருடியது என்று அறிய அவருக்கு ஆவல் பிறந்தது. எனவே, அதிகாரியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

அதிகாரியும் அவரின் பார்வையைப் புரிந்துகொண்டு, "சிலம்பை உண்மையாகவே திருடிக்கொண்டது கழினி முகமதுதான்" என்றார்.

தலைமையாசிரியரும் "அப்படிங்களா?" என்றார்.

மற்றொரு வகுப்பறையில் இருந்த ஆசிரியர் ஒருவர், அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டு, தன் மனத்திற்குள் "நல்ல வேளை! பொற்கொல்லன் தப்பித்தான்" என்று எண்ணிச் சிரித்துக்கொண்டார்.

ஏற்றம் காண்க

பொன். நிலவன்
மேரி தோட்டம்

இன்றைய பிள்ளை நாளைய தலைவன்
எண்ணிப் பாராய் தம்பி -உலகில்
என்றும் சிறப்புடன் வாழ்ந்திட வேண்டும்
இதைநீ மறவாய் தம்பி

இளமையில் கல்வியை ஊக்கத் துடனே
இனிதே பயில்வாய் தம்பி -முழு
நிலவினைப் போன்றே ஒளிதனைத் தந்தே
நிறைபுகழ் ஈட்டிடு தம்பி!

சின்னக் கைகள் செய்யும் தொழிலோ
சிறப்பாய் இருக்கும் நாளை -நீ
நன்மை செய்தால் நல்லது மலரும்;
நாளும் செய்வாய் வேலை!

உண்மை யுடனே உலகோர் உழைத்தால்
உலகம் உருப்படும் நன்றாய்! -நீர
எண்ணிச் செய்திடு எதையும் இங்கே
ஏற்றம் நிச்சயம் காண்பாய்!

ஹலோ ராங் நம்பர்!

ஸ்ரீராமன்



"பெண்ணைச் சொல்லிக் குற்றமில்லை" படத்தில் ஒய். விஜயா.

"ஹலோ மை டியர் ராங் நம்பர்"என்ற இனிமையான பாடலை "மன்மதலீலை"யில் கேட்டுமகிழ்ந்தவர்கள் அப்பாடல் காட்சியில் தோன்றி நடித்த புதுமுகம் ஒய். விஜயாவை அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க மாட்டார்கள்!

அந்த இளம் நடிகையின் கண்களில் இருந்த கவர்ச்சியும், எடுப்பான தோற்றமும், கட்டான உடலும், களையான முகமும் இனிய குரலும்தான் அவரைத் தமிழ்ப்பட உலகத்தின் இளம் தலைமுறை நடிகைகளின் பட்டியலில் இன்று இடம் பெறச் செய்திருப்பதாகச் சில ரசிகர்கள் பேசிக்கொள்கிறார்கள். இது மட்டும் போதுமென்றால், எத்தனையோ பேர் இன்று திரை நாயகிகளாக வந்திருக்க முடியுமே! இவற்றைவிட மேலாக ஒய். விஜயாவிடம் நடிப்புப் பயிற்சியும் இருந்தது. தமிழ்ப்படத்தில் அறிமுகமாவதற்கு முன்பே "தளி தன்னூடு", "தள்ளி கூட்டுலு" போன்ற தெலுங்குப் படங்களில் உணர்ச்சிகரமான கதாபாத்திரங்களில் நடித்துத் திறமையை வளர்த்துக் கொண்டிருந்தார் விஜயா.

"அவள் ஒரு தொடர்கதை" தமிழ்ப்படத்தைத் தெலுங்கில் தயாரித்த போது இயக்குநர் சிகரம் கே. பாலசந்தருக்கு அறிமுகமானார் ஒய். விஜயா. இவரது நடிப்பாற்றலை பாலசந்தரின் காமிரா கண்கள் கண்டு கொண்டுதான் "மன்மத லீலை"யில் வாய்ப்பைத் தந்தது. தொடர்ந்து பல படங்களில் நடித்தார். "நவரத்தினம்" திரையில் எம்ஜி ஆருடனும் இவர் நடித்துள்ளார்.

விஜயா தாம் பிறந்த ஊரான கடப்பையிலேயேபரதநாட்டியஅரங்கேற்றத்தை நடத்திப் பாராட்டுதல் பெற்றதை மறக்க முடியாத இனிய நிகழ்ச்சியாக கருதுகிறார். பத்து நபர்கள் பிறந்த பெரிய குடும்பத்தில் இவர் ஐந்தாவது பெண். சாதாரணமாக ஐந்தாவது பெண்ணாகப் பிறந்தால் அதிர்ஷ்டம் என்பார்கள். அதோடு விஜயா என்றபெயரிலேயே வெற்றியும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இவர் அதிர்ஷ்டவசமாக பாலசந்தர் மூலம் அறிமுகமாகியும் உள்ளார். "நல்ல இளாமர் வேடங்களில் நடித்துநல்லபெயர் சம்பாதிக்க வேண்டும்" என்பதே தமது இலட்சியம் என்று கூறும் ஒய். விஜயா. நம் படவுலகில் பெரிய நட்சத்திரமாக நிலைத்து நிற்பாரா? கேள்வி சரி, பதிலைக் காலதேவன்தானே கூற வேண்டும்!

அம்மாடி கோபமா?

கோபம், பெரிய விஷயத்திற்கு மட்டுமல்ல, சின்ன விஷயத்திற்கும் கூட வருவதுண்டு. அதுபோலவே ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும்கூட வருவதுண்டு. நம் சினிமா நடிகைகளுக்குக் கோபம் வந்தால் அவர்கள் என்னசெய்வார்கள்?

ஸ்ரீவித்யா: இவருக்குக்கோபம் வந்தால்முக்கால்வாசி இவர்கதவைத் தாளிட்டுக் கொண்டு தனியாகப் போய் உட்கார்ந்து புத்தகம் படிப்பதில் ஈடுபடுவாராம்.

சுஜாதா: இவருக்குக். கோபம் வந்தால் அடக்கிக் கொள்வது ரொம்பக் கஷ்டம். அரை மணி நேரம் தனியாகப் போய் உட்கார்ந்திருப்பாராம். கோபம் தீர்ந்துவிடும்.

லட்சுமி: இவருக்கு எப்போதுமே அசாத்திய முன்கோபம் வந்து விடுமாம்! சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே, அப்படித் தான் அமர்க்களப்படுத்துவாராம்



"வல்லவன் போலே பேசக்கூடாது.
வானரம் போலே சீறக்கூடாது,
வாழத் தெரியாமலே, கோழைத்தனமாகவே
வாலிபத்தை விட்டு விடக்கூடாது!"

"இளைய தலைமுறை"யில் ஸ்ரீகாந்த், விஜயகுமார், ஜூனியர் பாலையா.